[illegible]

[illegible]

[illegible]

G23:417x3
M81
116879

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

சைவசமயாசாரியர்களில் ஒருவராகிய

# திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகத் திருமுறைகள்.

---

வித்வான் - காஞ்சீபுரம்

**சபாபதிமுதலியாரவர்கள்**

ஆராய்ச்சிசெய்தபிரதிக்கிணங்க

---

புரசை-அஷ்டாவதானம்

**சபாபதிமுதலியாரவர்கள்**

மாணாக்கர்

தண்டலம்,

**பாலசுந்தரமுதலியாரவர்களால்**

பார்வையிடப்பட்டு

மாடம்பாக்கம்

**வாசுதேவபிள்ளையவர்களால்**

சென்னை:

பா. சோமையரவர்களது

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

---

௧௮௮௧ ௵ அக்டோபர்மீ.

137 / 4-81



அப்பர்ஸ்வாமிகள்

உ

சிவமயம்.

# அட்டவணை.


| எண். | பதிகம். | பக்கம். | எண். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ௧ | திருஅதிகைவீரட்டானம். | ௧ | ௪௧ | திருஒற்றியூர். | ௬௧ |
| ௨ | திருமறுமாற்றத்திருத்தாண்டகம். | ௩ | ௪௨ | திருப்பாசூர். | ௬௧ |
| ௩ | தனித்திருக்குறுந்தொகை. | ௪ | ௪௩ | ஷை | ௬௩ |
| ௪ | திருக்கெடிலவடவீரட்டானம். | ௬ | ௪௪ | திருவாலங்காடு. | ௬௪ |
| ௫ | நமச்சிவாயப்பதிகம். | ௭ | ௪௫ | திருக்காளத்தி | ௬௫ |
| ௬ | திருப்பாதிரிப்புலியூர். | ௯ | ௪௬ | திருப்பருப்பதம். | ௬௮ |
| ௭ | திருவீரட்டானம். | ௧௦ | ௪௭ | திருவையாறு. | ௭௦ |
| ௮ | திருத்தூங்கானைமாடம். | ௧௨ | ௪௮ | ஷை | ௭௧ |
| ௯ | கோயில். | ௧௩ | ௪௯ | ஷை | ௭௩ |
| ௧௦ | ஷை | ௧௪ | ௫௦ | ஷை | ௭௫ |
| ௧௧ | திருக்கழிப்பாலை. | ௧௫ | ௫௧ | திருஐயாறு | ௭௬ |
| ௧௨ | கோயில். | ௧௭ | ௫௨ | ஷை | ௭௮ |
| ௧௩ | ஷை | ௧௮ | ௫௩ | ஷை | ௭௯ |
| ௧௪ | ஷை | ௨௦ | ௫௪ | ஷை | ௮௧ |
| ௧௫ | திருக்கழுமலம். | ௨௨ | ௫௫ | ஷை | ௮௨ |
| ௧௬ | திருஆவடுதுறை. | ௨௩ | ௫௬ | ஷை | ௮௩ |
| ௧௭ | திருச்சத்திமுற்றம். | ௨௫ | ௫௭ | ஷை | ௮௫ |
| ௧௮ | திருநல்லூர். | ௨௬ | ௫௮ | திருப்பூந்துருத்தி | ௧௨௬ |
| ௧௯ | விடந்தீர்த்த திருப்பதிகம். | ௨௮ | ,, | ஷை | ௮௫ |
| ௨௦ | திருப்பழனம். | ௩௦ | ௫௯ | ஷை | ௮௭ |
| ௨௧ | திருஆரூர். | ௩௧ | ௬௦ | ஷை | ௮௮ |
| ௨௨ | ஷை | ௩௩ | ௬௧ | பலவகை திருத்தாண்டகம். | ௯௦ |
| ௨௩ | ஷை | ௩௫ | ௬௨ | தனித்-திருத்தாண்டகம். | ௯௨ |
| ௨௪ | திருவாரூர்பழமொழி. | ௧௨௫ | ௬௩ | திருஅடைவு ஷை | ௯௩ |
| ௨௫ | திருவாரூர். | ௩௬ | ௬௪ | திருஅங்கமாலை. | ௯௫ |
| ௨௬ | திருவாரூர்த் திருவாதிரைத்திருப்பதிகம். | ௩௭ | ௬௫ | திருவாலவாய். | ௯௬ |
| ௨௭ | திருவீழிமிழலை. | ௩௯ | ௬௬ | ஷை | ௯௮ |
| ௨௮ | திருமறைக்காடு | ௪௦ | ௬௭ | திருப்பூவணம். | ௯௯ |
| ௨௯ | திருவாய்மூர். | ௪௨ | ௬௮ | திருவிராமேச்சுரம் | ௧௦௨ |
| ௩௦ | ஷை | ௪௩ | ௬௯ | நின்ற-திருத்தாண்டகம். | ௧௦௩ |
| ௩௧ | திருஆவடுதுறை. | ௪௫ | ௭௦ | தனித்-திருத்தாண்டகம். | ௧௦௫ |
| ௩௨ | திருஆறைவடதளி. | ௪௬ | ௭௧ | க்ஷேத்திரக்கோவை. | ௧௦௭ |
| ௩௩ | திருஅண்ணாமலை. | ௪௮ | ௭௨ | குறைந்த-திருநேரிசை | ௧௦௯ |
| ௩௪ | திருஏகம்பம். | ௪௯ | ௭௩ | ஷை | ௧௧௦ |
| ௩௫ | திருவேகம்பம் | ௫௧ | ௭௪ | தனித்-திருநேரிசை. | ௧௧௧ |
| ௩௬ | ஷை | ௫௩ | ௭௫ | ஷை | ௧௧௨ |
| ௩௭ | திருவொற்றியூர். | ௫௫ | ௭௬ | ஷை | ௧௧௩ |
| ௩௮ | ஷை | ௫௬ | ௭௭ | ஆருயிர்த் திருவிருத்தம். | ௧௧௫ |
| ௩௯ | ஷை | ௫௮ | ௭௮ | தசபுராணம். | ௧௧௬ |
| ௪௦ | திருஒற்றியூர். | ௫௯ | ௭௯ | பாவநாசத் திருப்பதிகம். | ௧௧௮ |
| | | | ௮௦ | சரக்கறை. | ௧௨௦ |
| | | | ௮௧ | திருவாரூர். | ௧௨[illegible] |
| | | | ௮௨ | திருப்புகலூர். | [illegible] |

# கருத்து.

முத்தமிழ்முழுதொருங்குணர்ந்த மெய்த்தகைப்புலவீர்காள் !

சிற்றையுமணமுஞ் செல்லாநிலைமைத்தாய அந்தமிலின்பத் தமிழ்வீட்டினைப், பவக்கடல்வீழ்ந் தலமருமாக்களடைய இன்றியமையாத்துணையாய் இலங்குவன, நம்சைவசமயாசாரியர் மூவர்கள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகங்களன்றே ? அற்றேல், திருத்தொண்டர் புராணமாம் பெரியபுராணத்துள், அச்சைவசிகாமணிகள் மூவரது சரிதைகளை, மன்றுடிய சிவபெருமான் பேரருளாற் றிருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீமத் சேக்கிழார் பெருந்தகையால், ஸ்தலவரிசையாக, ஆங்காங்கடி யெடுத்துக் காட்டப்பட்ட தேவாரப்பதிகங்களேயாயினும், அச்சைவசமய குரவர்கட்கு வழியடிமைபூண்டொழுகி யன்றோர் சரிதைகளையும் விபவங்களையும் பிரசங்கரூபமாகநன்மைகடைப்பிடித்தொழுகுமெய்யன்பர்க்குச்செவியுறுத்திவரும் பற்பல புராணிக திலகர்களும், அவ்வவ்வமயங்களில் ஓதல்வேண்டு மென்பது ஆன்றோர்கொள்கை ஆதலால், மேற்குறித்த தேவாரப்பதிகங்கள் மாத்திரம் சிலசேசமுடையபலரும் கேட்டுக்கொண்டவண்ணம் அச்சிடப்பட்டன.

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் [illegible] பேட்டை ஆதியப்பநாயக்கன் தெரு ருஅ-வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் மா-வா-ஈ-தேவபிள்ளை யவர்களிடத்தில் விலைக்குவாங்கிக்கொள்ளலாம். இதன்விலை புத்தகம் க-க்கு ரூபா - க - ச - 0. தபால்கூலி 0 - க - 0.

புறதேசத்தார் புத்தகம்வேண்டி கடிதமெழுதும் விஷயத்தில் தங்கள் ஊர்பெயர் தெரு கதவிலக்கம் கண்டெழுதவும். நட்பெயிட்டாக வநுப்பினால் திருப்பிவிடப்படும். கடிதத்திற்குப்பதில் வேண்டியவர்கள் ஸ்டாம்புவைவில் உள்ளடக்கஞ்செய் தனுப்பவேண்டும்.

தபால்ஸ்டாம்பு அனுப்புகின்றபக்ஷத்தில் ரூபா-க-க்கு ஒரு அணா வட்டத்துடன் ½ அணா ஸ்டாம்புகளாகவே யனுப்பவேண்டும்.

இப்போது திருஞானசம்பந்தசுவாமிகள் திருத்தேவாரம் ககூஅகரூப் நவம்பர்மீ முதற்கொண்டு இரண்டுபாரங்களாக அச்சிட்டுவருகின்றன. இதுமுடிவுபெற்றபின், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தேவாரமும் ஆரம்பஞ்செய்யப்படும்.

இப்போது நடந்தேறிவருகிற திருஞானசம்பந்தசுவாமிகள்
தேவாரசஞ்சிகை கையொப்பவிவரம்.

| | உள்ளூர். ரூ. | அ. | பை. | புறநகரவாசிகள், ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| மாதம் - க க்கு பாரம் - உ - கொண்ட சஞ்சிகை - க - க்கு | 0 | உ | 0 | 0 | உ | சு |
| மூன் அமாதத்திற்கு முன்னுதாக முன் பணங்கட்டுபவருக்கு | 0 | ௯ | 0 | 0 | சு | சு |
| ஆறுமாதத்திற்கு முன்னுதாக முன்பணங்கட்டுபவருக்கு | 0 | கூ | 0 | 0 | கஉ | 0 |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | அடி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ரு. | க | ச | குழையோர்ரதிர் | குழையோர்காதிர் |
| அ | ரு | ச | நலமிக்க | நலமிக்க |
| க0 | க | உ | வெள்ளேற்றிருனேப் | வெள்ளேற்றினேப் |
| கர | எ | உ | புண்டிபுந்தமனே | புண்டிபுகந்தமனே |
| கஉ | க0 | உ | கூடாரரய்றின்று | கூடாய்னின்று |
| கரு | எ | ச | யறியவே | யறிவரோ |
| ரு.ரு | உ | ரு | பமரக்கடம் | பமரர்கடம் |
| ரு௯ | உ | க | செய் | செய்தடி |
| ,, | உ | உ | தடியொடுங்கி | யொடுங்கி |
| ,, | ரு | ச | தமருததிரு | தமருக்திரு |
| ,, | எ | க | வெயிலில்தியெழச | வெயில்தியெழச் |
| ரு௬ | ௯ | க | புள்ளாறு | புள்ளாறுங் |
| ,, | க0 | க | பைஞ்சுடர் | பைஞ்சுடர் |
| சு௯ | க | ரு | பொழிகள் | பொழில்கள் |
| ௯0 | க0 | உ | கொடுந்தானே | கொடுத்தானே |
| ௯௯ | ச | உ | புகுந்துபலி | புகுந்துபலி |
| ௯எ | ச | ரு | தேனக | றேனக |
| ,, | எ | ச | பூருனை | பூருறை |
| எ௯ | க0 | ரு | மங்கையாராடு | மங்கையாடு |
| க0ச | ச | ௯ | வாரோ | வாறே |
| ககரு | க0 | உ | வஞ்சபூத | வஞ்சபூத |

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசுசுவாமிகள்சரித்திரம்.

திருமுனைப்பாடி நாட்டிற் சிறப்புள்ள திருவாமூரில் வாழும், வேளாளகுலத்திற் குறுக்கையர் குடிவிளங்கச் செல்வத்துடன் வாழ்கின்ற, புகழனார் தவத்தினால் அவர்மனைவியாராகிய மாதினியார் திருவயிற்றிடமாகத் திலகவதியார் பிறந்தபின், திருவவதாரஞ்செய்து, மருணீக்கியாரென்னும் பிள்ளைத்திருநாமம்பெற்றுக் கலைகள் பயின்றுவருநாளில், திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதுசெல்ல, வேளாண்குலத்தில் புகழனார் மரபுக்கொத்த மரபும் சிவநேசமுமுள்ளவரும், சோழராசனிடத்திற் சேனாபதியாயிருப்பவருமாகிய கலிப்பகையாரென்பவருக்குத் திலகவதியாரை மணஞ்செய்விப்பதற்குச் சிலமுதியோர்வந்துபேசப், புகழனார் சம்மதித்தனர். அந்தச்சேதியை வந்த முதியோர் கலிப்பகையாருக்குத் தெரிவிக்க, அவர் மகிழ்ச்சியுடன் விவாகஞ்செய்துகொள்ள எத்தனமாயிருக்கும்போது, வடதேசத்துப் பகை மன்னவருடன் போர்செய்யும்படி அரசன் அனுப்ப, அவர் சேனையுடன்போய் அந்தப்பகை மன்னவருடன் நெடுநாள் போர் செய்துகொண்டிருந்தனர். அவர்ப்படியிருக்க, புகழனாரானவர் தொன்றுதொட்டு வருகின்ற நிலையாமை வினைவயத்தா லிவ்வுலகைவிட்டுச் சுவர்க்கலோகஞ்சேர்ந்தனர். அவர்மனைவியாராகிய மாதினியாரும், சுற்றத்தாரையு மக்களையுந் துகள்போலிகழ்ந்து, கற்புநெறிவழுவாமல் தம்முடைய கணவனாருடன் பிரியாமல் வாழும்படி சுவர்க்கலோகஞ் சேர்ந்தனர். இவ்வாறு தாய் தந்தையர் சுவர்க்கலோகஞ்சேரவே, திலகவதியாரு மருணீக்கியாரும், சுற்றத்தாரும் புலம்பித் துயர்க்கடலிலாழ்ந்து, பின்பு சுற்றத்தார்தேற்ற ஒருவாறு துயர்நீங்கி, மாதாபிதாக்களுக்குச் செய்யவேண்டிய கடனை மருணீக்கியார்செய்து நிறைவேற்றினர். இங்கிவ்வாறிருக்க, போர் விளைத்துக்கொண்டிருந்த கலிப்பகையார், பகைவரைவென்று புகழ்கொண்டு வீரசுவர்க்கஞ்சேர்ந்தனர். அந்தச்சேதியை யூரார்சொல்லிக்கொள்ளத் திலகவதியாரறிந்து, என்தாயுந் தந்தையும் அவருக் கென்னைக் கொடுக்கும்படி சம்மதித்திருந்தார்கள், அந்தமுறைமையினால் என்னுயிரைப் போர்வென்று வீரசுவர்க்கம் அடைந்தவருடன் சேர்ப்பே னென்று துணிய, மருணீக்கியாருக்குத் தெரிந்து தமக்கையார் பாதத்தில் விழுந்து மிகவும்புலம்பித் தாயுந் தந்தையுஞ் சுவர்க்கலோகஞ்சேர்ந்த பின்னும்,

நான் அவர்களை வணங்கிக்கொண்டிருந்ததுபோல் உம்மைவணங்கிக்
கொண்டிருக்கலாமென்கிற எண்ணத்திருவுயிருடனிருந்தேன், இப்
போது உம்முடைய எண்ணப்படி முடித்தால் உமக்குமுன்னே நா
னும் சுவர்க்கம் புகுவேனென்று புலம்பினர். அதைக்கண்ட திலதவதி
யாரானவர், தம்முடைய தம்பியாரிடத்திலிருக்கும் அன்பினால், தாம்
நினைத்தபடி செய்யாமல் உயிர்தாங்கித் தவநெறியுள்ளவராயிருந்தன
ர். இவரிவ்வாறிருக்க மருணீக்கியா ரிவ்வுலக வாழ்க்கை அநித்தியமான
தென்றுணர்ந்து, தரும விஷயங்களில் மனஞ் செலுத்திக் கொண்
டிருந்து பின்பு முத்திநெறி யறியவேண்டுமென்று கருத்துண்டா
கச் சமய சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கும் போது,
சைவசமயத்தி னுண்மையை யுணரும்படி சிவகிருபை நேராமையா
ல், சமண சமயத்தைச் சார்ந்து. அந்தச் சமய சாஸ்திரங்களை ஆரா
ய்ச்சி செய்து, அவர்களில் மேம்பட்டுத் தருமசேன னென்னும்
பெயரும் பெற்றிருந்தனர். இவர் நிலைமை இவ்வாறாகி விடவே,
திலதவதியார் திருவதிகையிற் சேர்ந்து, சிவசின்னந் தாங்கிக் கொ
ண்டு, ஆலயத்தில் திருவலகு திருமெழுக் கிட்டு, திருமாலை தொடு
த்துந் தொண்டுசெய்கின்றவர், தம்முடையதம்பியார் பரசமையஞ்
சேர்ந்ததை நினைத்துவருந்தி, வீரட்டானேசுவரரை நோக்கி அய்ய
னே! என்னுடன்பிறந்தவனைப் பரசமயக்குழியில் நின்று மெடுத்து,
ஆட்கொள்ளவேண்டுமென்று பலமுறையும் விண்ணப்பஞ் செய்து
கொண்டிருக்க; ஒருநாள் வீரட்டானேசுவரர் திலதவதியார் சொப்ப
னத்தி லெழுந்தருளி, உன்னுடன்பிறந்தவன் முன்னம் வாகீசனென்
னும் பெயருள்ளமுனிவன், அப்போதே நம்மைச்சேரும்படி தவஞ்
செய்து ஒருகாரணத்தினாலிங்கு உற்பவமாயினன், ஆதலாலிப்போது
அவனுக்குச் சூலைநோயுண்டாக்கி அதுகாரணமாக நாம் ஆட்கொள்
ளுகிறோம்; நீ துயரங்கொள்ள வேண்டுவதில்லையென் றருள்செய்து,
அவ்வண்ணமே தருமசேனர்வயிற்றிற் சூலைநோய் பொருந்தும்படி
அருள்செய்தவளவில், அந்தநோயானது அவர்வயிற்றில் மிகவும்கொடு
மையுடனடைந்து குடலைமுறுக்கி வருத்தவே தாளாமல் பாழியறை
யில்வந்து விழுந்து, அச்சமயத்தில் தாம்வந்த பின்புணர்ந்த மந்திரங்
களாற்றடுத்திடவும், அதுகுறையாமல் மேன்மேலும் அதிகரிக்க இனி
யென்னசெய்வோமெனவருந்தினர். அதைக்கண்ட சமணர்களும் தங்
கள்கையிலிருக்குங் கமண்டலநீரை மந்திரித்துக் குடிப்பித்தும் தணி
யாமையைக்கண்டு தங்கள் கையிலிருக்கும் மயிலிறகின் குஞ்சத்தினா
லுடல் முழுவதும் தடவவும் அந்நோய்முன்னிலு மதிகரித்தமையால்
வருத்தமுற்றுத் திலதவதியாருக்குச்சொல்லும்படி தம்முடைய ஏவலா
ளிகளில் ஒருவனை யனுப்ப, அவன்போய்த்தெரிவித்ததற்குத்திலதவதி



யார் யானங்கேவரேனென்று சொல்ல அவன்போய்ச் சொல்லக்கே
ட்ட தருமசேனர் அன்றிராத்திரியில் புறப்பட்டு ஒருவரும் அறியா
மல் முன்னனுப்பியவனுதரவு பற்றிக்கொண்டு திருவதிகை சேர்ந்து
திலதவதியாரைக்கண்டு வணங்கி அன்னையே! இந்தச்சூலைநோய்தீரும்
படி அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று சோருகின்றதைப்பார்த்து
வீரட்டானேசுவரர் கிருபையை நினைந்து தொழுது, தம்பியாரை
நோக்கி யெழுந்திருமென்றார். அவரெழுந்து நடுங்கி நிற்கும்போது
இது வீரட்டானேசுவரர் கிருபையால்வந்து நேரிட்டது; ஆகையால்
அவரைத்தொழுது பணிசெய்வீரென்று கட்டளையிட்டுச் சுவாமி சந்
நிதானத்துக்கு அழைத்துக்கொண்டு போம்பொருட்டுப் பஞ்சாக்ஷ
ரம் ஓதி விபூதிகொடுத்துத் தரித்துக்கொள்ளச்சொல்லித் திருப்பள்ளி
யெழுச்சிக்காலத்தில் தமது தம்பியாரை அழைத்துக்கொண்டுபோக
ப்போய், ஆலயத்தைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிச் சுவாமியினது
கிருபையினால் திருப்பதிகம் ஓதும்படி யுணர்ச்சியுண்டாக "கூற்று
யினவாறுவிலக்ககிலீ" ரென்னும் திருப்பதிகமோதினார். அவ்வாறோ
தினவளவில் அந்நோய்தீரவே வீரட்டானேசுவரருடைய பெருங்கரு
ணையைநினைந்து ஆனந்தமடைந்து பரவசமுற்றிருக்கும்போது, சுவா
மியானவர் அவரைநோக்கி நீதிருப்பதிகம் ஓதியதன்மையினால் நாவுக்
கரசென்று உனக்குப்பெயருண்டாகக்கடவதென்று அசரீரிவாக்கருள்
செய்ய, அதைக்கேட்டுப் பின்னு மதிகமாக மகிழ்ச்சி யடைந்து சுவா
மியைத்தொழுது அன்றுமுதல் சிவசின்னந்தாங்கி மனவாக்குக் காயங்
களினாற் றொண்டுசெய்துகொண் டிருந்தனர். சமணர்களிதையறிந்து
இனி நம்முடைய சமயம்போய்விட்டது, அரசனறிந்தால் அவனுஞ்
சைவசமயத்தவனாகிவிடுவன், ஆதலால் அவனறிதற்குமுன்னமே நாம்
போய் வேறுவகையாகத் தெரிவிக்கவேண்டுமென்று தங்களில் ஆலோ
சனைசெய்துகொண்டு அரசனைக்கண்டு தருமசேனரென்பவர் தமக்கை
சடையான்சமயத்தி லிருப்பதினால் தாமும் அங்கேபோய்ச் சேரவே
ண்டுமென்கிற எண்ணங்கொண்டு, பொய்யாகத் தமக்குச் சூலைநோய்
சம்பவித்ததென்றும், அது நம்முடைய மந்திரமுதலியவைகளால்தீர
வில்லையென்றும் ஏற்படுத்தித் தமக்கையிடத்துக்குப் போய்விட்டன
ரென்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக்கேட்ட அரசன் கோ
பங்கொண்டவனாய்ச் சமணரை நோக்கி இப்படிக்கொத்த காரியஞ்
செய்தவனை என்னசெய்யவேண்டுவதென்ன, நீற்றறையி லிடவேண்டு
மென்று சொல்லி யவ்வண்ணமே செய்ய, திருநாவுக்கரசுசுவாமிகள்
"மாசில்வீணையுமாலைமதியமு" மென்னும் திருப்பதிகமோதிப் பரம
சிவத்தைத் தியானம் பண்ணிக்கொண் டிருந்ததினால், வெப்பமென்
பது சிறிதுமில்லாம லிருந்தது. அப்படியிருக்கச் சமணர்கள் ஏழா

நாள் நீற்றறையைத் திறந்து பார்க்கும்போது திருநாவுக்கரசுசுவாமிகள் திருமேனிக்கு யாதொருவருத்தமு மில்லாம லிருக்கக்கண்டு அதிசயித்து, மறுபடி பாலுடன் விஷங்கலந்து கொடுத்தார்கள்; அதையுமுண்டு துன்பமின்றியிருந்தனர். அதன்பின்பு மிதிக்கும்படி யானையைத்தூண்டினார்கள்; அதுவரும்போது "சுண்ணவெண்சந்தனச்சாந்து" என்னுந் திருப்பதிகமோத அந்தயானை திருநாவுக்கரசுசுவாமிகளை வணங்கி, மேலிருந்த பாகர்களையும் சமணர்களையுங் கொன்றுபோய்விட்டது. அதன்பின்பு கற்றூணிற்கட்டி நடுக்கடலில் விட்டார்கள்; அப்போது திருநாவுக்கரசுசுவாமிகள் பரமசிவனைத் தியானஞ்செய்து "சொற்றுணைவேதிய" னென்னும்பஞ்சாக்ஷரப்பதிகமோத, கட்டுகளெல்லாம் நீங்கி அந்தக் கற்றூண் தெப்பம்போலாக, அதன்மேலிருந்துகொண்டு பதிகமுழுவதுமோதிச் சாத்தித் திருப்பாதிரிப்புலியூருக்கடுத்த திருக்கெடிலநதி முகத்துவாரக்கரைசேர்ந்து, திருப்பாதிரிப்புலியூருக் கெழுந்தருளிச் சுவாமியைத் தரிசித்துப் பதிகமோதித்துதித்து, மறுநாள் திருவதிகைவீரட்டானத் திறைவனைவணங்கிப் பதிகமோதித்துதித்து, அங்குங் கைத்தொண்டு முதலிய திருத்தொண்டுசெய்திருக்கும்நாளில், சமண்சமயத்திலிருந்த பல்லவனென்னுமவ்வரசன்; திருநாவுக்கரசுசுவாமிகளின் உண்மையை அறிந்து, சைவசமயத்துக்குரியவனாகிச் சமணர்மடம் ஆலயமிவைகளை யிடிப்பித்து ஒரு சிவாலயப் பிரதிஷ்டை செய்வித்தனன். பின்பு திருநாவுக்கரசுசுவாமிகள் திருவதிகைவீரட்டானத்தினின்றும் புறப்பட்டு, அருகிலிருக்கும் ஸ்தலங்களையெல்லாந் தரிசித்துப் பதிகமோதித் துதித்துத் திருத்தூங்கானை மாடத்துக்கெழுந்தருளிப் பரமசிவத்தைத் தொழுது துதித்து, ஐயனே! சமண் சமயச்சார்பிலிருந்த இவ்வுடலைத் தாங்கிக்கொண்டிருக்க அருவருக்கின்றேனாதலால், தேவரீருடைய * இலச்சினையை அடியேனுக்குத் தரித்தருளவேண்டுமென்று பதிகமோத அவ்வண்ணமே பரமசிவத்தின் றிருவருளால் ஒருவருமறியாமல் ஒரு சிவபூதம் வந்து, சூலத்துடன் விடையிலச்சினை தம்முடைய தோட்களில் தரிக்கமகிழ்ந்து துதித்து, அங்கிருந்து எழுந்தருளி மற்றத் தலங்களையுந் தரிசித்து அளவில்லா அன்புபெருகச் சிதம்பரத்துக்கெழுந்தருளி நடேசமூர்த்தியைத் தரிசித்துப் பதிகமோதித்துதிசெய்து விடைபெற்றுக்கொண்டு, திருஞானசம்பந்தசுவாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பத்துடன் எழுந்தருளித் திருஞானசம்பந்த சுவாமிகள் திருக்கூட்டத்துடன் எதிர்வரக்கண்டுவணங்கச் சுவாமிகள் அப்பரோ! எழுந்திருமென்று தம்முடைய இரண்டுதிருக்கரங்களாலு மெடுக்க எழுந்து, சீகாழியிற்சென்று பரமசிவத்தைத் தரிசித்துப் பதிகமோதித்

* இலச்சினை - என்பது - முத்திரை,



துதிசெய்து, திருஞானசம்பந்த சுவாமிகள் திருமாளிகையி லமர்ந்திருந்து, சோழநாட்டுள்ள மற்றத்தலங்களையுந் தரிசிக்கவேண்டுமென்று திருஞானசம்பந்த சுவாமிகளுடன் எழுந்தருளி திருக்கோலக்காவிற்சென்று பணிந்து பதிகமோதி, அங்கிருந்து தனித்துஎழுந்தருளி மற்றுமுள்ள தலங்களைத்தரிசித்து, திருச்சத்தி முற்றத்தில் சென்றிறைஞ்சிப் பரமசிவத்தைப்பணிந்து கூற்றுவன்வருமுன் அடியேன்முடியில் சுவாமிகள் திருவடி சூட்டவேண்டுமென்று பதிகமோதினர். கயிலாயபதியானவர் திருநல்லூருக்கு வாவென்றருள, அவ்வண்ணமே திருநல்லூரிற் சென்றருளி ஆலயத்திற் சாஷ்டாங்கமாகப்பணியும்போது, சுவாமிதிருவடிசூட்டத் தேவாரமோதித்தொழுது அவ்விடத்தினின்று மற்றையதலங்களைத் தரிசித்துக்கொண் டெழுந்தருளித் திங்களூரென்னுந்தலத்தைச் சார்ந்து, அப்பூதிநாயனார் தம்மிடத்தில் வைத்திருக்கும் பேரன்பினுக்குமகிழ்ந்து அவரதுதிருமாளிகையிற்சென்றுகண்டு அவருடைய வேண்டுதலினால் அங்கு அமுதுகொள்ளச் சம்மதித்தமையால் நாயனார் மனைவியார் அமுதமைத்து மூத்த திருநாவுக்கரசென்னும் புத்திரனை வாழையிலைகொண்டுவரும்படியனுப்ப அவன்போனவிடத்தில் சர்ப்பந் தீண்டிற்று; அந்தப்பிள்ளை இலையைக் கொண்டுவந்து தாயினிடத்திற்சேர்த்து யாதொன்றுஞ் சொல்லாமல் உயிர்நீங்கினன். அவர்கள் பார்த்து விஷந் தீண்டிற்றென்று குறிப்பினு லறிந்துகொண்டு அவ்வுருவத்தை மறைத்து வைத்து, திருநாவுக்கரசுசுவாமிகளுக்கு அமுதுபடைக்க முயற்சிசெய்யும்போது அவர்களுக்குள் உண்டாயிருக்கும் புத்திரசோகத்தை சுவாமிக ளறிந்துகொண்டு தேவாரமோதி, அந்தப்பிள்ளை பிழைக்கச்செய்து பின்பு நாயனாருடன் அமுதுகொண்டு, அங்கிருந்து புறப்பட்டு மற்றத்தலங்களையும் தரிசித்துப் பதிகமோதித் திருவாரூரி லெழுந்தருளிப் புற்றிடங்கொண்டானைத் தொழுது திருப்பதிகமோதித் துதித்துத் திருப்புகலூருக்கு எழுந்தருளிவருகையில், அங்குவீற்றிருக்கும் திருஞானசம்பந்தசுவாமிகள் கேள்விப்பட்டு எதிர்கொண்டுவரக் கண்டு வணங்கித் திருப்புகலூரில்வந்துசேர்ந்து சுவாமியைத் தரிசித்துப்பதிகமோதிச்சாத்தி, முருகநாயனார் திருமடத்தில் தங்கியிருந்து, திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாரூருக்கு எழுந்தருளிவிட, அப்பர்சுவாமிகள் அங்கருகிருக்குந் தலங்களைத் தரிசித்து வந்து மறுபடி திருப்புகலூரில் முருகநாயனார் திருமடத்தில் வீற்றிருக்கத் திருஞானசம்பந்த சுவாமிகளும் அங்கு எழுந்தருளினர். அதற்குமேல் அவ்விரண்டு சுவாமிகளும், திருவீழிமிழலையிற் சேர்ந்தருளிப் பரமசிவத்தைத் தரிசித்துத் திருப்பதிகமோதித்தொழுது, இருக்கும்போது காலமழைவருஷியாமல் பஞ்சகாலம் அதிகரிக்கவே பரமசிவம் அடியார்கள்பொருட்டுப் படிக்காசு கொடு

த்தருள; அதைக்கொண்டு வருகின்ற சிவனடியார்கள்யாவர்க்கும் அமுதுபடைத்துக்கொண்டிருந்து, பின்பு திருமறைக்காடென்னுந் தலத்திற்சென்று வேதம்பூசித்துச் சாத்திவிட்டுப்போனபடியே யிருக்குந் திருக்கதவந் திறக்கும்வண்ணம், "பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ" என்னும் திருப்பதிகமோதி அதன்பின்பு நடுநாட்டிலுமுள்ள ஸ்தலங்களையெல்லாந் தரிசித்துப் பதிகமோதிச்சாத்தி, தொண்டைநாட்டுக்கெழுந்தருளி அங்குள்ள காஞ்சீபுரமுதலாகிய தலங்களைத் தரிசித்துத் திருக்காளத்திக் கெழுந்தருளிச் சுவாமியைத் தரிசிக்கும்போது, அங்குதோன்றின குறிப்பினால் ஸ்ரீகயிலாயபதியைத் தரிசிக்கவேண்டுமென வுள்ளங் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, காடு, மலை, நாடுமுதலியவைகளைக்கடந்து சென்று; ஸ்ரீமல்லிகார்ச்சுனமென்னுந் தலத்திற் சேர்ந்து சுவாமியைத் தரிசித்துத் தேவாரமோதிச்சாத்தி விடைபெற்றுக்கொண்டு, அப்புறம் வடக்கு நோக்கி எழுந்தருளுகின்றவர், தெலுங்குதேசம் கன்னடதேச முதலாகிய தேசங்களையுங் கடந்துசென்று கங்கைக்கரையிற் சேர்ந்து காசிவிசுவநாதரைத்தரிசித்துத் துதிசெய்து, அவ்விடத்தில் தம்முடைய பரிசனங்களையெல்லாம் நிறுத்திவிட்டு; அப்புறந் தனியே சாகமூலபலங்களுண்பதையுந்தவிர்த்து இராவும் பகலுமாக நடந்து மலைவழி காட்டுவழி யெல்லாங் கடந்து பாலைவனத்திற்போம்போது அந்த நிலவெப்பத்தினால் கால், பரட்டளவுந்தேய அதற்குமேல் நடக்கமாட்டாமல் கைகளை யூன்றிக்கொண்டு தாவித்தாவிச்செல்ல, அவைகள்மணிக்கட்டளவுந்தேயவே அதற்குமேல் மார்பினாலுந்திச்சென்றும் அதுவுந் தேயவே புரண்டு புரண்டு சென்றும், அதற்குஞ் சக்தியில்லாமல் ஓய்ந்து பிரக்கினை தப்பி யிருக்கப் பரமசிவந் திருவுளமிரங்கி, இவரிவ்வுலகத்தி லிருப்பவர்களுய்யும்பொருட்டுத் தலங்கள்தோறுஞ்சென்று இன்னந் திருப்பதிக மோதவேண்டுமென்னுங் கருணையினால், கயிலாயத்துக்குவரும்படி கட்டளையிடாமல், ஒரு பிராமணமுனிவர் வேடமாகவந்து அப்பர்சுவாமிகள் தம்மைநோக்கும்படி சமீபத்திலிருந்து நீரிவ்வாறு வருந்தி வந்ததென்ன. அப்போது பரமசிவத்தின் தரிசனவிசேஷத்தால் அப்பர்சுவாமிகளுக்குக் கொஞ்சம் ஞாபகம்வந்து, கயிலாயகிரிக்குச்சென்று தரிசனஞ்செய்யவேண்டுமென்கிற விருப்பத்தினா லிவ்வாறு வந்தேனென்ன. சுவாமியானவர் கயிலாயகிரி மனிதர்கள்சென்று தரிசிக்கக் கூடுவதோவென்ன. எவ்விதத்தினாலாவது கயிலாயதரிசனஞ் செய்தாலல்லது மீளேனென்று சொல்லினர். அந்தவுறுதியை அறிந்த பரமசிவம் முனிவர் வடிவமறைந்து ஆகாயத்தி லெழுந்தருளி அசரீரிவாக்கினால் நாவுக்கரசனே! எழுந்திருவென்று திருவாய்மலர்ந்தருளின வளவில் அப்பர்சுவாமிகள் திருமேனி முன்போல பழுதின்றி விளங்க வுணர்ச்



சிபெற்று, ஆண்டவனே! அடியேனுக்குக் கயிலாயதரிசனங் கடாக்ஷிக்கவேண்டுமென்று துதிசெய்தனர். சுவாமி தாமெழுந்தருளும்போதே உண்டாக்கிய தடாகத்தைக்காட்டி இதில்முழுகித் திருவையாற்றில் வந்து கயிலாயதரிசனங் காணக்கடவையென்று மீட்டும் அசரீரிவாக்கினால் கட்டளையிட்டருள, அவ்வாறே அந்தத்தீர்த்தத்தில் முழுகித் திருவையாற்றுள்ள தீர்த்தக்கரையிலேறிச் சுவாமி சந்நிதிக்குச்சென்று நந்திதேவர் முதலான சிவகணங்களும், முனிவர்களும், இந்திராதிதேவர்களும், வந்து நெருங்கியிருக்கவும் தேவதுந்துமி முழங்கவும், வேதங்கள்கோஷிக்கவும்; பார்வதி சமேதராய்க் கயிலாயபதி வீற்றிருந்தருளும் திருவோலக்கத்தைத்தரிசித்துப் பேரானந்த மடைந்து திருப்பதிகங்களோதிச் சாத்தினர். அதற்குமேல் பரமசிவத்தின் அருளினால் கயிலாயத்தோற்ற மறைந்து பழையபடி ஆலயமா யிருக்கக்கண்டு, மனவருத்தங்கொண்டு, மற்றுமுள்ள தலங்களைத்தரிசிக்கவேண்டுமென்கிற அன்பினால் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கிச்சென்று திருப்பூந் துருத்தி யென்னும் ஸ்தலத்துக்கு எழுந்தருளிப் பரமசிவத்தைத் தரிசித்துப் பதிகமோதித் தொழுது, கைத்தொண்டுஞ் செய்து அங்கொரு திருமடமேற்படுத்தி அதில் வீற்றிருந்து காலங்கடோறும் சுவாமியைத் தரிசனஞ்செய்துகொண்டிருக்கையில்; திருஞானசம்பந்தசுவாமிகள் மதுரைக் கெழுந்தருளிச் சமணரை வாதினால்வென்று, மறுபடி சோழநாட்டில் வரும்போது அப்பர்சுவாமிகளைக் காணும் விருப்பத்தினால் திருப்பூந் துருத்திக்கெழுந்தருள அதனை அப்பர்சுவாமிகளறிந்து எதிர்சென்று ஒருவரும் அறியாதவண்ணந் திருக்கூட்டத்தினுட் சென்று திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளிவருகிற முத்துச் சிவிகையைத் தமது தோள்கொடுத்துத் தாங்கினர். அதை திருஞானசம்பந்த சுவாமிகள் பார்க்காமையால் அப்பர் எங்கிருக்கின்றனரென்ன? அப்பர்சுவாமிகள் அடியேன் தேவரீர் முத்துச்சிவிகையைத் தாங்கும்படியான வாழ்வுபெற்றிங்கிருக்கின்றேனென்ன, அந்தவார்த்தையைக் கேட்பதற்குமுன் திருஞானசம்பந்தசுவாமிகள் முத்துச்சிவிகையை விட்டு அதிவிரைவாக இழிந்து அப்பர்சுவாமிகளைப் பணிய அதற்கு முன்னமே அப்பர்சுவாமிகளும் பணிந்தது கண்ட, அடியார்களெல்லாரும் அவ்விரண்டுசுவாமிகளையும் வணங்கி மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்கள். அதன் பின்பு திருஞானசம்பந்த சுவாமிகளும், அப்பர்சுவாமிகளும் ஆலயத்தி லெழுந்தருளிப் பரமசிவத்தைத் தரிசித்துத் திருமடத்தில்வந்து இருவரும் அமர்ந்திருக்க; மதுரையில் நடந்த சேதிகளையெல்லாம் திருக்கூட்டத்தார் சொல்ல ஆனந்தமடைந்ததுமன்றி குலச்சிறைநாயனாராகிய மந்திரியார், மங்கையர்க்கரசியாரிவர்களுடைய சிவநேசத்தின் மிகுதியைத் திருஞானசம்பந்தசுவாமி

கள் திருவாய்மலர்ந்தருள; அப்பர்சுவாமிகள் பரவசமடைந்து தாமு மதுரைக் கெழுந்தருளிச் சொக்கநாத சுவாமியையும் மீனாக்ஷியம்மை யினையுந் தரிசித்துப் பதிகமோதிச் சாத்தி, மந்திரியாருந் நின்றசீர் நெடுமாறனென்னும் பாண்டியராசனும் வந்து வணங்க மகிழ்ந்து, அவர்கருத்துக்கினியவார்த்தைகள்சொல்லி அங்கிருந்தும் புறப்பட்டு, இராமேச்சரத்துக்கெழுந்தருளி ராமநாதனைத் தரிசித்துப் பதிகமோ திச்சாத்திச் சிலநாளங்கிருந்து, புறப்பட்டு திருநெல்வேலி முதலாக பாண்டிநாட்டிலுள்ள தலங்களையெல்லாந்தரிசித்து மறுபடியுஞ் சோ ழநாட்டில்வந்து திருப்புகலூரிற் சேர்ந்து சுவாமியைத்தரிசித்து உழ வாரப் பணியுஞ் செய்துகொண்டிருக்கும் நாளில் பரமசிவம் இவரு டைய தன்மையை உலகத்தாருக்குத் தெரிவிக்கும் பொருட்டு உழவா ரப் படையால் செதுக்குமிடந் தோறும், பொன்னும் நவரத்தினங் களு முண்டாகச்செய்தருள; அவைகளை யோடுகள்போல மதித்துப் பொய்கையில் எறிந்துவிட, மேலு மிவரை மயக்கும்படி பரமசிவம் ரம்பாஸ்திரிகளை யனுப்ப, அவர்கள்வந்து தங்களால் கூடியமட்டில் மோகமுண்டாகும்படி லாவண்யஞ் செய்ய, அதுகண்டு அப்பர்சுவாமி கள் வினைகளைக் குறித்து "உம்மாலிங்கென்ன குறையுடையேனோ" என்னுந் திருத்தாண்டகமோத, அந்த மாதர்க ளிவரைமயக்க நம்மா லாவதல்லவென்று போய்விட்டார்கள். அதற்குமேல் வாகீசமுனிவரா கிய அப்பர்சுவாமிகள், பரமசிவத்தினுடைய திருவருள் கூடுமிறவரை க்கும், அந்தந்தலத்தினிடத்தில் பரமசிவத்தைத் தரிசித்துப் பதிகமோ திச்சாத்திக்கொண்டிருந்து, பின்பொருநாள் "எண்ணுகேனென்சொ ல்லி யெண்ணுகேனோ" என்னுந் திருத்தாண்டகமோதி சிவானந்தவ டிவமாய்ப் பரமசிவத்தின் திருவடிநீழலில் சேர்ந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்சரித்திரம் - முற்றிற்று.

---

அப்பர்சுவாமிகளுக்குத் திருநாவுக்கரசு, சொல்லரசு, வாக்கின்மன்னவர், தாண்டகவேந்து எனப்பல திருநாமங்களுள; இவைகளுக்குள் நாவுக்கரசென்பது பரமசிவம் அருளிச்செய்தது. அதுகாரணமாகச் சொல்லரசு வாக்கின்மன்னவர் என்றுந் தாண்டகங்களே மிகுதியாக ஒதினமையால் தாண்டகவேந்து தாண்டகச் சதுரர் என்றுஞ் சேக்கிழார்சுவாமிகளால் உண்டாகிய திருநாமம்; அப்பரென்பது திருஞானசம்பந்த சுவாமிகளாலுண்டாகிய திருநாமம்.

உ

சிவமயம்.

# திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்.

## முதற்றிருமுறை.

(திருஅதிகைவீரட்டானம் பண்-கொல்லி.)

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (க)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிரு
ந்தறியேன், வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதொடக்
கிமுடக்கியிட, நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்
துமிட, ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மா
னே. (உ)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்படுவெண்டலையிற்பலிகொ
ண்டுழல்வீர், துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்சுடுகின்றதுசூ
லைதவிர்த்தருளீர், பிணிந்தார்பொடிக்கொண்டுமெய்பூசவல்லீர்பெற்
றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண், டணிந்தீரடிகேளதிகைக்கெ
டிலவீரட்டானத்துறையம்மானே. (ங)

முன்னம்மடியேனறியாமையினான்முனிந்தென்னைநலிந்துமுட
க்கியிடப், பின்னையடியேனுமக்காளும்பட்டேன்சுடுகின்றதுசூலைதவி
ர்த்தருளீர், தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோதலையாயவர்தங்கட
னாவதுதா, னன்னநடையாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மா
னே. (ச)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்கரைநின்றவர்கண்டுகொளென்றுசொலி, நீத்தாய்கயம்புகநூக்கியிடநிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன், வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட, வார்த்தார்புனலாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (ரு)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியே, னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியே, னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா,யலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலாமையினால், வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர், பயந்தேயென்வயிற்றினகம்படியேபறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநா, னயர்ந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (எ)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்வஞ்சம்மனமொன்றுமிலாமையினாற், சலித்தாலொருவர்துணையாருமில்லைச்சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான், கலித்தேயென்வயிற்றினகம்படியேகலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன, அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (அ)

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர், துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகரந்துவிட, என்போலிகளும்மையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகி, லன்பேயமையுமதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லா, யார்த்தாரரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய், வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடா,யார்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர் - தேவியார் - திருவதிகைநாயகி.

இந்தப்பதிகம் - சூலைநோய்தீர ஓதியருளியது.

---



## மூன்றாந்திருமுறை

### திருமறுமாற்றத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப்படோநடலையில்லோ, மேமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோமின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத்தன்மையானசங்கரநற்சங்கவெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே. (க)

அகலிடமேயிடமாகவூர்கடோறுமட்டுண்பாரிட்டுண்பார்விலக்காரையம், புகலிடமாமம்பலங்கள்பூமிதேவியுடன்கிடந்தாற்புரட்டாள்பொய்யன்றுமெய்யே, யிகலுடையவிடையுடையானேன்றுகொண்டானினியேதுங்குறைவிலோமிடர்கடீர்ந்தோந், துகிலுடுத்துப்பொன்பூண்டுதிரிவார்சொல்லுஞ் சொற்கேட்கக்கடவோமோ துரிசற்றோமே. (உ)

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்சேரோமாதேவாமாதேவாவென்றுவாழ்த்தி, நீராண்டபுரோதாயமாடப்பெற்றோநீறணியுங்கோலமேநிகழப்பெற்றோங், காராண்டமழைபோலக்கண்ணீர்சோரக்கன்மனமேநன்மனமாக்கலாய்ப்பெற்றோம், பாராண்டுபகடேறிவருவார்சொல்லும்பணிகேட்கக்கடவோமோபற்றற்றோமே. (௩)

உறவாவாருருத்திரபல்கணத்தினோர்க ளுடுப்பனகோவணத்தொடுகீளுளவாமன்றே, செறுவாருஞ்செறமாட்டார்தீமைதானு நன்மையாச்சிறப்பதேபிறப்பிற்செல்லோ,நறவார்பொன்னிதழிநறுந்தாரோன்சீரார்நமச்சிவாயஞ்சொல்லவல்லோநாவாற், சுறவாருங்கொடியானைப்பொடியாக்கண்டசுடர்நயனச்சோதியையேதொடர்வுற்றோமே.

என்றுநாமியாவர்க்குமிடைவோமல்லோமிருநிலத்திலெமக்கெதிராவாருமில்லைச், சென்றுநாஞ்சிறுதெய்வஞ்சேர்வோமல்லோஞ் சிவபெருமான்றிருவடியேசேரப்பெற்றோ,மொன்றினாற்குறையுடையோமல்லோமன்றேயுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார், பொன்றினார் தலைமாலையணிந்தசென்னிப் புண்ணியனைநண்ணியபுண்ணியத்துளோமே. (ரு)

மூவுருவின்முதலுருவாயிருநான்கான மூர்த்தியேயென்றுமுப்பத்துமூவர், தேவர்களுமிக்கோருஞ்சிறந்துவாழ்த்துஞ்செம்பவளத்தி

ருமேனிச்சிவனையேயென்று, நாவுடையார்நமையாள வுடையாரன்றே நாவலந்தீவகத்தினுக்குநாதரான, காவலரேயேவிவிடுத்தாரேனுங்கட வமலோங்கடுமையொடுகளவற்றோமே. (௬)

நிற்பனவுநடப்பனவுநிலனுநீருநெருப்பினொடுகாற்றாகிநெடுவா னாகி, யற்பமொடுபெருமையுமாயருமையாகி யன்புடையார்க்கெளி மையதாயளக்கலாகாத், தற்பரமாய்ச்சதாசிவமாய்த்தானுமியானுமா கின்றதன்மையனைநன்மையோடும், பொற்புடையபேசக்கடவோம் பேயர்பேசுவனபேசுதுமோபிழையற்றோமே. (௭)

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னை யிமையவர்தம்பெருமா னையெரியாய்மிக்க, தேசனைச்செம்மேனிவெண்ணீற்றானைச்சிலம்பரை யன்பொற்பாவைநலஞ்செய்கின்ற, நேசனைநித்தலுநினையப்பெற்றோ நின்றுண்பாரெம்மைநினையச்சொன்ன, வாசகமெல்லாமறந்தோமன் றேவந்திரார்மன்னவனாவான்றானே. (௮)

சடையுடையான்சங்கக்குழையோர்காதன் சாம்பலும்பாம்பும ணிந்தமேனி,விடையுடையான்வேங்கையதன்மேலாடைவெள்ளிபோ ற்புள்ளியுழைமான்றோல்சார்ந்த, வுடையுடையானம்மையுடையான்க ண்டரும்போடுமற்றுமுவராய்நின்ற, படையுடையான்பணிகேட்கும் பணியோமல்லோம்பாசமறவீசும்படியோநாமே. (௯)

நாவாரநம்பனையேபாடப்பெற்றோநாணற்றார்நள்ளாமேவிள்ள ப்பெற்றோ, மாவாவென்றெனமையாள்வானமரர்நாதனயனொடுமாற்க றிவரியவனலாய்நின்ட, தேவாதிதேவன்சிவனென்சிந்தைசேர்ந்திருந் தான்றென்றிசைக்கோன்றானேவந்து, கோவாடிக்குற்றேவல்செய்கெ ன்றாலுங்குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாந்திருமுறை.

### தனித்திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெந்தையிணையடிநீழலே. (௧)



நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநானறிவிச்சையும்
நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. (௨)

ஆளாகாராளானாரையடைந்துய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணிற்கிலார்
*தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்துமண்ணாகிக்கழிவரே. (௩)

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. (௪)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. (௫)

குறிகளுமடையாளமுங்கோயிலும்
நெறிகளுமவர்நின்றதோர்நேர்மையும்
அறியவாயிரமாரணமோதிலும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே. (௬)

வாழ்த்தவாயும்நினைக்கமடநெஞ்சும்
தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (௭)

எழுதுபாவைநல்லார்திறம்விட்டுநான்
றொழுதுபோகநின்றேனையுஞ்சூழ்ந்துகொண்
டுழுதசால்வழியேயுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமிதென்படுகின்றதே. (௮)

நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கொண்டு
நக்குநிற்பரவர்தமைநாணியே. (௯)

* தோளாதசுரையென்பது - துவாரமிடாதசுரைக்காய்.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருக்கெடிலவடவீரட்டானம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணல்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா,
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧)

பூண்டதோர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலவெண்ணூலுங்
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியு
மீண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௨)

ஒத்தவடத்திளநாகமுருத்திரபட்டமிரண்டு
முத்துவடங்கண்டிகையுமுளைத்தெழுமூவிலைவேலுஞ்
*சித்தவடமுமதிகைச்சேணுயர்வீரட்டஞ்சூழ்ந்து
தத்துகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௩)

மடமான்மறிபொற்கலையுமழுப்பாம்பொருகையில்வீணை
குடமால்வரையதிண்டோளுங்குனிசிலைக்கூத்தின்பயில்வு
மிடமால்தழுவியபாகமிருநிலனேற்றசுவடுந்
தடமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௪)

பல்பலகாமத்தராகிப்பதைத்தெழுவார்மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங்கணபதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டுசுடரும்வான்கயிலாயமலையும்

* சித்தவடம்-என்பது. இந்தத்தலத்துக்குச் சமீபத்திலிருப்பது.



நலமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௫)

கரந்தனகொள்ளிவிளக்குங்கறங்குதுடியின்முழக்கும்
பரந்தபதினெண்கணமும்பயின்றறியாதனபாட்டும்
அரங்கிடைநூலறிவாளரறியப்படாததோர்கூத்தும்
நிரந்தகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௬)

கொலைவரிவேங்கையதளுங்குலவோடிலங்குபொற்றோடும்
விலைபெருசங்கக்குழையும்விலையில்கபாலக்கலனும்
மலைமகள்கைக்கொண்டமார்புமணியார்ந்திலங்குமிடறு
முலவுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௭)

ஆடல்புரிந்தநிலையுமரையிலசைத்தவரவும்
பாடல்பயின்றபல்பூதம்பல்லாயிரங்கொள்கருவி
நாடற்கரியதோர்கூத்துநன்குயர்வீரட்டஞ்சூழ்ந்து
ஓடுங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௮)

சூழுமரவத்துகிலுந்துகில்கிழிகோவணக்கீளும்
யாழின்மொழியவளஞ்சவஞ்சாதருவரைபோன்ற
வேழமுரித்தநிலையும்விரிபொழில்வீரட்டஞ்சூழ்ந்து
தாழுங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௯)

நரம்பெழுகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங்கொண்டெடுத்தானொன்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்வளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தப்பதிகம் சமணர்களேவியயானை அஞ்சும்படியோதி அருளியது.

---

### நமச்சிவாயப்பதிகம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (௧)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம்அரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (௨)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (௩)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிராணென்றுவினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கலால்
நலமிலனாடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்திற்கேற்பதோர்
நலமிக்கொடுப்பதுநமச்சிவாயவே. (௬)

வீடினாருலகினில்விழுமியதொண்டர்கள்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. (௭)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதல்திண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (௯)



மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிலேவிழுத்தினபோது ஓதியருளியது.

## திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாயுடன் றோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான்மனத் துள்ளிருக்க
வேன்றானிமையவர்க் கன்பன்றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன்றன்னடி யோங்களுக்கே. (௧)

பற்றாய்நினைந்திடப் போதுநெஞ்சேயிந்தப் பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன் மூடினுங்கண்டேன் புகனமக்கு
உற்றானுமையவட் கன்பன்றிருப்பா திரிப்புலியூர்
முற்றாமதிக் கண்ணியினான்றன மொய்கழலே. (௨)

விடையான்விரும்பியென் னுள்ளத்திருந்தா னினிநமக்கிங்
கடையாவவல மருவினைசாரா நமனையஞ்சோம்
புடையார்கமலத் தயன்போல்பவர்பா திரிப்புலியூ
ருடையானடிய ரடியடியோங்கட் கரியதுண்டே. (௩)

மாயமெலாமுற்ற விட்டிருணீங்க மலைமகட்கே
நேயநிலவ விருந்தானவன்றன் றிருவடிக்கே
தேயமெலாநின் றிறைஞ்சுந்திருப்பா திரிப்புலியூர்
மேயநல்லான்மலர்ப் பாதமென்சிந்தையு ணின்றனவே. (௪)

வைத்தபொருணமக் காமென்றுசொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லான்
மொய்த்தகதிர்மதி போல்வாரவர்பா திரிப்புலியூர்
அத்தனருள்பெற லாமோவறிவிலாப் பேதைநெஞ்சே. (௫)

கருவாய்க்கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்ற னாமம்பயின்றே னுனதருளால்
திருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
றருவாய்சிவகதி நீபாதிரிப்புலி யூரரனே. (௬)

எண்ணாதமரா ரிரக்கப்பரவையு ணஞ்சையுண்டாய்
திண்ணாரசுரர் திரிபுரந்தீயெழச் செற்றவனே
பண்ணார்ந்தமைந்த பொருள்கள்பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய் கழனங்கருத்தி லிடையனவே. (எ)

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே. (அ)

மண்பாதலம்புக்கு மால்கடன்மூடிமற் றேழுலகும்
விண்பாலிசைகெட் டிருசுடர்வீழினு மஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்று கண்டோந்திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக் கடவுட்சுடரான் கழலிணையே. (கூ)

திருந்தாவமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கே சரணம்புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தாவரக்க னுடனெரித்தாய்பா திரிப்புலியூர்
இருந்தாயடியே னினிப்பிறவாமல்வந் தேன்றுகொள்ளே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம்-நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தோன்றாத்துணையீசுவரர்-தேவியார் பெயர்-தோகையம்பிகையம்மை.

---

## மூன்றாந் திருமுறை.

### திருவீரட்டானம்-ஏழைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற் றொங்கலானை வீரட்டத்தானைவெள்ளேற்றானைப், பொறியரவினானைப்புள்ளூர்தியானைப் பொன்னிறத்தினானைப் புகழ்தக்கானை, யறிதற்கரியசீரம்மான்றன்னை யதியரையமங்கையமர்ந்தான்றன்னை, யெறிகெடிலத்தானையிறைவன்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (க)

வெள்ளிக்குன்றன்னவிடையான்றன்னை வில்வலான்வில்வட்டங்காய்ந்தான்றன்னைப், புள்ளிவரிநாகம்பூண்டான்றன்னைப் பொன்பிதிர்ந்தன்னசடையான்றன்னை, வள்ளிவளைத்தோள்முதல்வன்றன்னை வாராவுலகருளவல்லான்றன்னை, யெள்கவிடுபிச்சையேற்பான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (உ)



முந்தியுலகம்படைத்தான்றன்னை மூவாமுதலாயமூர்த்திதன்னைச், சந்தவெண்டிங்களணிந்தான்றன்னைத் தவநெறிகள்சாதிக்கவல்லான்றன்னைச், சிந்தையிற்றீர்வினையைத்தேனைப்பாலைச் செழுங்கோயில்வீரட்டமேவினானை, யெந்தைபெருமானையீசன்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௩)

மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை மதியமுஞாயிறுங்காற்றுந்தீயு, மந்தரமுமலைகடலுமானான்றன்னை யதியரையமங்கையமர்ந்தான்றன்னைக், கந்தருவஞ்செய்திருவர்கழல்கைகூப்பிக் கடிமலர்கள்பலதூவிக்காலைமாலை, யிந்திரனும்வானவருந்தொழச்செல்வானை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௪)

ஒருபிறப்பிலானடியையுணர்ந்துகாணு ருபாசதிக்குவழிதேடிப்போகமாட்டார், வரும்பிறப்பொன்றுணராதுமாசுபூசி வழிகாணுவர்போல்வார்மனத்தனாகி, யரும்பிறப்பையறுப்பிக்குமதிகைபூரா னம்மான்றனிணையடியையனைந்துவாழா, திருபிறப்பும்வெறுவியராயிருந்தார்சொற்கேட் டேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௫)

ஆறேற்கவல்லசடையான்றன்னை யஞ்சனம்போலுமிடற்றான்றன்னைக், கூறேறக்கூறமரவல்லான்றன்னைக் கோல்வளைக்கைமாதராள்பாகன்றன்னை, நீறேற்கப்பூசுமகலத்தானை நின்மலன்றன்னைநிமலன்றன்னை, யேறேற்கவேறுமாவல்லான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௬)

குண்டாக்கனாயுழன்றுகையிலுண்டு குவிமுலையார்தம்முன்னேநாணமின்றி, யுண்டியுகந்தமணேநின்றார்சொற்கேட் டுடனாகியுழிதந்தே னுணர்வொன்றின்றி, வண்டுலவுகொன்றையங்கண்ணியானை வானவர்களேத்தப்படுவான்றன்னை, யெண்டிசைக்குமூர்த்தியாய் நின்றான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (எ)

உறிமுடித்தகுண்டிகைகையிற்றூக்கி யூத்தைவாய்ச்சமணர்க்கோர்குண்டாக்கனாய்க், கறிவிரவுநெய்சோறுகையிலுண்டு கண்டார்க்குப் பொல்லாதகாட்சியானேன், மறிதிரைநீர்ப்பவ்வநஞ்சுண்டான்றன்னை மதித்தொருகால்வல்வினையேனினைக்கமாட்டேன், னெறிகெடிலநாடர் பெருமான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (அ)

நிறைவார்ந்தநீர்மையாய்நின்றான்றன்னை நெற்றிமேற்கண்ணொன்றுடையான்றன்னை, மறையானைமாசொன்றில்லாதான்றன்னை வானவர்

மேல் மலரடியைவைத்தான்றன்னைக், கறையானைக்காதார்குழையான்றன்னைக் கட்டங்கமேந்தியகையினானை, இறையானை யெந்தைபெருமான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௯)

தொல்லைவான்சூழ்வினைகள்சூழப்போந்து தூற்றியேனாற்றியேசுடராய்நின்று, வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைகொண்ட வானவர்க்குந்தானவர்க்கும்பெருமான்றன்னைக், கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலூதுங் கோவலனுநான்முகனுங்கூடியெங்கும், எல்லைகாண்பரியானையெம்மான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௰)

மூலமறைக்கப்பட்டுநீராடாப்பெண்கள் முறைமுறையானந்தெய்வமென்றுதீண்டித், தலைபறிக்குந்தன்மையர்களாகிநின்று தவமென்றவஞ்செய்துதக்கதோரார், மலைமறிக்கச்சென்றவிலங்கைக்கோனை மதனழியச்செற்றசேவடியினானை, யிலைமறித்தகொன்றையந்தாரான்றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

## முதற்றிருமுறை.

### திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக் கொன்றுண்டுவிண்ணப்பம் போற்றிசெய்யு
மென்னாவிகாப்பதற் கிச்சையுண்டேலிருங் கூற்றகல
மின்னாருமூவிலைச் சூலமென்மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட் டூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே. (௧-௨-௩-௪)

ஆவாசிறுதொண்ட னென்னினைந்தானென் றரும்பிணிநோய்
காவாதொழியிற் கலக்குமுன்மேற்பழி காதல்செய்வார்
தேவாதிருவடி நீறென்னைப்பூசுசெந் தாமரையின்
பூவார்கடந்தையுட் டூங்கானைமாடத்தெம் புண்ணியனே. (௫-௬-௭-௮-௯)

கடவுந்திகிரி கடவாதொழியக் கயிலையுற்றான்
படவுந்திருவிர லொன்றுவைத்தாய்பனி மால்வரைபோல்
இடபம்பொறித்தென்னை யேன்றுகொள்ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட் டூங்கானைமாடத்தெந் தத்துவனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மூலத்தானநாயகர்-சபாநாதர்-தேவியார்-சிவகாமியம்மை.



### கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பா னடியனேன்வந்தவாறே. (௧)

கருத்தனாய்ப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத் திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே. (௨)

கேட்டிலேன்கிளைபிரியேன் கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றன்பாதம் நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டில்நீர்வாளைபாயு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிமுலையாள் கூடநீயாடுமாறே. (௩)

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்யா யாதுநான்செய்வதென்னே
செந்தியார்வேள்வியோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாட வடியிணையலசுங்கொல்லோ. (௪)

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினால்நின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவேன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த விறைவநீயாடுமாறே. (௫)

பார்த்திருந்தடியனேனான் பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரில்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கடீர்ப்பாய் தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே. (௬)

பொய்யினைத்தவிரவிட்டுப் புறமலாவடிமைசெய்ய
ஐயநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்க மல்குசிற்றம்பலத்தே
பையநுன்னாடல்காண்பான் பரமநான்வந்தவாறே. (௭)

மனத்தினால்திகைத்துநாளு மாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனோ கறையணிகண்டத்தானே

தினைத்தனைவேதங்குன்றாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யனைத்துநின்னிலயங்காண்பா னடியனேன்வந்தவாறே. (அ)

நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோ வானவர்தலைவனேநீ
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
யஞ்சொலாள்காணநின்று வழகநீயாடுமாறே. (௯)

மண்ணுண்டமாலவனு மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும் பரமநீயாடுமாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாந்திருமுறை.

### கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலுமிப்பூமிசை
யென்னம்பாலிக்கு மாறுகண் டின்புற
வின்னம்பாலிக்கு மோவிப்பிறவியே. (க)

அரும்பற்றப்பட வாய்மலர்கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித்தொழுமினோ
கரும்பற்றச்சிலைக் காமனைக்காய்ந்தவன்
பெரும்பற்றப்புலி யூரெம்பிரானையே. (உ)

அருச்சுற்றவினை யாலடர்ப்புண்டுநீ
ரெரிச்சுற்றக்கிடந் தாரென்றயலவர்
சிரிச்சுற்றப்பல பேசப்படாமுனந்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்ம்மினே. (௩)

அல்லலென்செயு மருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத் தொந்தந்தானென்செயுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோ ரடிமைபூண்டேனுக்கே. (௪)

உன்னிலாவி யுயிர்க்கும்பொழுதெலா
நானிலாவி யிருப்பனென்னாதனைத்



தேனிலாவிய சிற்றம்பலவனார்
வானிலாவி யிருக்கவும்வைப்பரே (௫)

சிட்டர்வானவர் சென்றுவரங்கொளுஞ்
சிட்டர்வாழ்தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன்சேவடி கைதொழச்செல்லுமச்
சிட்டர்பாலணு காஞ்செறுகாலனே (௬)

ஒருத்தனாருல கங்கட்கொருசுடர்
திருத்தனார்தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனாரிளை யார்விடமுண்டவெம்
அருத்தனாரடி யாரையறியவே. (௭)

விண்ணிறைந்ததோர் வெவ்வழலின்னுரு
வெண்ணிறைந்த விருவர்க்கறிவொணாக்
கண்ணிறைந்த கடிபொழிலம்பலத்
துண்ணிறைந்துநின் றாடுமொருவனே. (அ)

வில்லைவட்டப்பட வாங்கியவுணர்தம்
வல்லைவட்டம்மதின் மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டத்திசை கைதொழுவார்வினை
யொல்லைவட்டங்கடந் தோடுதலுண்மையே. (௯)

நாடிநாரண னான்முகனென்றிவர்
தேடியுந்திருந் தான்காணவல்லரோ
மாடமாளிகை சூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென் னெஞ்சுளிருக்கவே. (௰)

மதுரவாய்மொழி மங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம் பலவன்றிருமலை
யதிரவார்த்தெடுத் தான்முடிபத்திற
மிதிகொள்சேவடி சென்றடைந்துய்ம்மினே (௰க)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருக்கழிப்பாலை-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்து வானவர்க்குந்தானவனே யென்கின்றா[ளா
சினபவளத்திண்டோண்மேற் சேர்ந்திலங்குவெண்ணீற்ற னென்கின்று

லனபவளமேகலையோ டப்பாலைக்கப்பாலா னென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. ௩

வண்டுலவுகொன்றை வளர்புன்சடையானே யென்கின்றாளால் [றாளா
விண்டலர்ந்துநாறுவதோர் வெள்ளெருக்கநாண்மலருண் டென்கின்
ஒண்டயலேதோன்றுவதோ ருத்தரியப்பட்டுடைய னென்கின்றாளாற்
கண்டயலேதோன்றுங்கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ.

பிறந்திளையதிங்களெம் பெம்மான்முடிமேல தென்கின்றாளால்
நிறங்கிளருங்குங்குமத்தின் மேனியவனிறமே யென்கின்றாளான்
மறங்கிளர்வேற்கண்ணாள் மணிசேர்மிடற்றவனே யென்கின்றாளாற்
கறங்கோதமல்குங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. (௫)

இரும்பார்ந்தசூலத்த னேந்தியோர்வெண்மழுவ னென்கின்றாளாற்
சுரும்பார்மலர்க்கொன்றைச் சுண்ணவெண்ணீற்றவனே யென்கின்று
பெரும்பாலனாகியோர் பிஞ்ஞகவேடத்த னென்கின்றாளாற் [ளாற்
கரும்பானல்பூக்குங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. ௬

பழியிலன்புகழுடையன் பானீற்றனேற்ற னென்கின்றாளால்
விழியுலாம்பெருந்தடங்க ணிரண்டல்லமூன் றுளவே யென்கின்றாளாற்
சுழியுலாம்வருகங்கை தோய்ந்தசடையவனே யென்கின்றாளாற்
கழியுலாஞ்சூழ்ந்த கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. (௭)

பண்ணார்ந்தவீணை பயின்றவிரலவனே யென்கின்றாளா
லெண்ணார்புரமெரித்த வெந்தைபெருமானே யென்கின்றாளாற்
பண்ணார்முழவதிரப் பாடலோடாடலனே யென்கின்றாளாற்
கண்ணார்பூஞ்சோலைக் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ.

முதிருஞ்சடைமுடிமேன் மூழ்குமிளநாக மென்கின்றாளா
லதுகண்டதனருகே தோன்றுமிளமதிய மென்கின்றாளாற்
சதிர்வெண்பளிக்குக் குழைகாதின்மின்னிடுமே யென்கின்றாளாற்
கதிர்முத்தஞ்சிந்துங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ.

ஓரோதமோதி யுலகம்பலிதிரிவா னென்கின்றாளால்
நீரோதமேற நிமிர்புன்சடையானே யென்கின்றாளாற்
பாரோதமேனிப் பவளமவனிறமே யென்கின்றாளாற்
காரோதமல்குங் கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. (௮)

வானுலாந்திங்கள் வளர்புன்சடையானே யென்கின்றாளால்
ஊனுலாம்வெண்டலைகொண் டூர்பலிதிரிவா னென்கின்றாளாற்



தேனுலாங்கொன்றை திளைக்குந்திருமார்ப னென்கின்றாளாற்
கானுலாஞ்சூழ்ந்த கழிப்பாலைச்சேர்வானைக் கண்டாள்கொல்லோ. ௯

அடர்ப்பரியவிராவணனை யருவரைக்கீழடர்த்தவனே யென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச் சுண்ணவெண்ணீற்றவனே யென்கின்றாளாற்
மடற்பெரியவாலின்கீ ழறநால்வர்க்கன் றுரைத்தா னென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பால்வண்ணநாதர் - தேவியார் - வேதநாயகியம்மை.

---

## இரண்டாந்திருமுறை.

### கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மத வேழமுரித்தவ
னினைப்பவர்மனங் கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமா மம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழு தும்மறந் துய்வனோ. (௧)

தீர்த்தனைச்சிவ னைச்சிவலோகனை
மூர்த்தியைமுத லாயவொருவனைப்
பார்த்தனுக்கருள் செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடி யேன்மறந் துய்வனோ. (௨)

கட்டும்பாம்புங் கபாலங்கைமான்மறி
யிட்டமாயிடு காட்டெரியாடுவான்
சிட்டர்வாழ்தில்லை யம்பலக்கூத்தனை
யெட்டனைப்பொழு தும்மறந் துய்வனோ. (௩)

மாணியால்கறந் தாட்டிவழிபட
நீணுலகெலா மாளக்கொடுத்தவெ
னாணியைச்செம்பொ னம்பலத்துண்ணின்ற
தாணுவைத்தமி யேன்மறந் துய்வனோ. (௪)

பித்தனைப்பெருங் காடரங்காவுடை
முத்தனைமுளை வெண்மதிசூடியைச்
சித்தனைச்செம்பொ னம்பலத்துண்ணின்ற
வத்தனையடி யேன்மறந் துய்வனோ. (௫)

நீதியைநிறை வைமறைநான்குட
னோதியையொரு வர்க்குமறிவொணாச்
சோதியைச்சுடர்ச் செம்பொனினம்பலத்
தாதியையடி யேன்மறந்துய்வனே. (௬)

மைகொள்கண்டனெண் டோளன்முக்கண்ணினன்
பைகொள்பாம்பரை யார்த்தபரமனார்
செய்யமாதுறை சிற்றம்பலத்தெங்க
ளையனையடி யேன்மறந்துய்வனே. (௭)

முழுதும்வானுல கத்துளதேவர்கள்
தொழுதுபோற்றியுந் தூயசெம்பொன்னினா
லெழுதிமேய்ந்த சிற்றம்பலக்கூத்தனை
யிழுதையேன்மறந் தெங்ஙனமுய்வனே. (௮)

காருலாமலர்க் கொன்றையந்தாரனை
வாருலாமுலை மங்கைமணாளனைத்
தேருலாவிய தில்லையுட்கூத்தனை
யாரிலாவமு தைமறந்துய்வனே. (௯)

ஓங்குமால்வரை யேந்தலுற்றான்சிரம்
வீங்கிவிம்முற வூன்றியதாளினான்
றேங்குநீர்வயல் சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்ட னேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந்திருமுறை.

### கோயிற்பெரிய திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை யருமறையினகத்தானை யணுவையார்க்குந், தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத் திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக், கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக் கனைகடலைக்குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௧)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக் காவிரிசூழ்வலஞ்சுழியுங் கருதினானை, யற்றானையலர்ந்தார்க்குமருள்செய்வானை யாரூரும்புகுவானை யறிந்தோமன்றே, மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தும், பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௨)



கருமானினுரியதளே யுடையாவீக்கிக் கனைகழல்கள்கலந்தொலிப்ப வனல்கையேந்தி, வருமானத்திரடோள்கள் மட்டித்தாட வளர்மதியுஞ்சடைக்கணிந்து மானேர்நோக்கி, யருமானவாண்முகத்தாளமர்ந்துகாண வமரர்கணமுடிவணங்க வாடுகின்ற, பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௩)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை யமரர்கடம்பெருமானை யரனைமூவா, மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன்றன்னை மறிகடலுங்குலவரையும் மண்ணும்விண்ணும், திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந் திரிசுடர்களோரிரண்டும்பிறவுமாய, பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

அருந்துணையையடியார்தம்மல்லறீர்க்கு மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும்பற்றும்விட்டு வான்புலன்களகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப்போகமாற்றிப் பொதுநீக்கித்தனைநினைய வல்லோர்க்கென்றும், பெருந்துணையைப் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௫)

கரும்பமருமொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக்குன்றனைக் காட்சியானை, யரும்பமரும்பூங்கொன்றைத் தாரான்றன்னை யருமறையோடாரங்க மாயினானைச், சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ் தென்னாரூர்ச் சுடர்க்கொழுந்தைத்துளக்கிலா விளக்கைமிக்க, பெரும்பயனைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௬)

வரும்பயனையெழுநரம்பினோசையானை வரைசிலையாவானவர்கள் முயன்றவாளி, யரும்பயஞ்செ யவுணர்புர மெரியக்கோத்த வம்மானையலைகடனஞ் சயின்றான்றன்னைச், சுரும்பவிழுங்குழன்மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காதசிந்தையராய்த் துறந்தோருள்ளப், பெரும்பயனைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௭)

காரானையீருரிவைப் போர்வையானைக் காமருபூங்கச்சியேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட் கணியான்றன்னை யமரர்களுக்கறிவரி

ய வனவிலானைப், பாரோரும்விண்ணோரும் பணியநட்டம் பயில்கின்றபரஞ்சுடரைப் பரனையெண்ணில், பேரானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (அ)

முற்றாதபான்மதியஞ்சூடினானை மூவுலகுந்தானாய முதல்வன்றன்னைச், செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான்றன்னைத் திகழொளியை மரகதத்தைத் தேனைப்பாலைக், குற்றாலத்தமர்ந்துறையுங் குழகன்றன்னைக் கூத்தாடவல்லானைக் கோனை ஞானம், பெற்றார்கள்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௯)

காரொளியதிருமேனிச் செங்கண்மாலுங் கடிக்கமலத்திருந்தயனுங் காணாவண்ணஞ், சீரொளியதழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியைச்சிந்தைதனை மயக்கந்தீர்க்கு, மேரொளியையிருநிலனும்விசும்பும்விண்ணு மேழுலகுங்கடந்தண்டத் தப்பால்நின்ற, பேரொளியைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## முதற்றிருமுறை.

### கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக் காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத் துளங்கெரியாடுமாறே. (௧)

ஏறனாரேறுதம்பா லிளநிலாவெறிக்குஞ்சென்னி
யாறனாராறுசூடி யாயிழையாளோர்பாகர்
நாறுபூஞ்சோலைத்தில்லை நவின்றசிற்றம்பலத்தே
நீறுமெய்பூசிநின்று நீண்டெரியாடுமாறே. (௨)

சடையனார்சாந்தநீற்றர் தனிநிலாவெறிக்குஞ்சென்னி
யுடையனாருடைதலையி லுண்பதும்பிச்சையேற்றுக்
கடிகொள்பூந்தில்லைதன்னுட் கருதுஞ்சிற்றம்பலத்தே
யடிகழலார்க்கநின்று மனலெரியாடுமாறே. (௩)

பையராவசைத்தவல்குற் பனிநிலாவெறிக்குஞ்சென்னி
மையரிக்கண்ணியாளு மாலுமோர்பாகமாகிச்



செய்யெரிதில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
கையெரிவீசிநின்று கனலெரியாடுமாறே. (௪)

ஓதினார்வேதம்வாயா லொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பூதனார்பூதஞ்சூழப் புலியுரியதளனார்தா
நாதனார்தில்லைதன்னு ணவின்றசிற்றம்பலத்தே
காதில்வெண்குழைகடாழக் கனலெரியாடுமாறே (௫)

ஒருடம்பிருவராகி யொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பாரிடம்பாணிசெய்யப் பயின்றவெம்பரமமூர்த்தி
காரிடந்தில்லைதன்னுட் கருதுசிற்றம்பலத்தே
பேரிடம்பெருகநின்று பிறங்கெரியாடுமாறே. (௬)

முதற்றனிச்சடையைமூழ்க முகிழ்நிலாவெறிக்குஞ்சென்னி
மதக்களிற்றுரிவைபோர்த்த மைந்தரைக்காணலாகு
மதத்துவண்டறையுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
கதத்ததோரரவமாடக் கனலெரியாடுமாறே. (௭)

மறையனார்மழுவொன்றேந்தி மணிநிலாவெறிக்குஞ்சென்னி
யிறைவனாரெம்பிரானா ரேத்துவாரிடர்கடீர்ப்பார்
சிறைகொணீர்த்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
யறைகழலார்க்கநின்று வனலெரியாடுமாறே. (௮)

விருத்தனாய்ப்பாலனாகி விரிநிலாவெறிக்குஞ்சென்னி
நிருத்தனார்நிருத்தஞ்செய்ய நீண்டபுன்சடைகடாழக்
கருத்தனார்தில்லைதன்னுட் கருதுசிற்றம்பலத்தே
யருத்தமாமேனிதன்னோ டனலெரியாடுமாறே. (௯)

பாலனாய்விருத்தனாகிப் பனிநிலாவெறிக்குஞ்சென்னி
காலனைக்காலாற்காய்ந்த கடவுளார்விடையொன்றேறி
ஞாலமாந்தில்லைதன்னு ணவின்றசிற்றம்பலத்தே
நீலஞ்சேர்கண்டனார்தாம் நீண்டெரியாடுமாறே. (௧0)

மதியிலாவரக்கனோடி மாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோணெரியவூன்றி நீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுள் மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்போலநின்று வனலெரியாடுமாறே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மூலத்தானநாயகர்-சபாநாதர்-தேவியார்-சிவகாமியம்மை.

## திருக்கழுமலம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக் கடல்கொண்டஞான்றுநின் பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளின மேந்தினவென்பர் நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச் சடைவிரித்தாடுங் கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண் டோவந்தணாழி யகலிடமே. (௧)

சடையார்கொடிநெடு மாடங்களோங்குங் கலந்திலங்கு
வுடையானுடைதலை மாலையுஞ்சூடி யுகந்தருளி
விடையானுடையவவ் வேதியன்வாழுங் கழுமலத்துள்
அடைவார்வினைக ளவையெள்கநாடொறு மாடுவனே (௨)

திரைவாய்ப்பெருங்கடன் முத்தங்குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய்நுளைச்சிய ரோடிக்கழுமலத் துள்ளழுந்தும்
விரைவாய்நறுமலர் சூடியவிண்ணவன் றன்னடிக்கே
வரையாப்பரிசிவை நாடொறுநந்தமை யாள்வனவே. (௩)

விரிக்குமரும்பதம் வேதங்களோதும் விழுமியநூல்
உரைக்கிலரும்பொரு ளுள்ளவாகேட்கி லுலகமுற்றும்
இரிக்கும்பறையொடு பூதங்கள்பாடக் கழுமலவன்
திருத்தன்பழம்படி யாடுங்கழனம்மை யாள்வனவே. (௪)

சிந்தித்தெழுமனமே நினையாமுன் கழுமலத்தைப்
பந்தித்தவல்வினை தீர்க்கவல்லானைப் பசுபதியைச்
சந்தித்தகால மறுத்துமென்றெண்ணி யிருந்தவர்க்கு
முந்தித்தொழுகழ னாடொறுநந்தம்மை யாள்வனவே. (௫)

நிலையும்பெருமையு நீதியுஞ்சால வழகுடைத்தா
யலையும்பெருவெள்ளத் தன்றுமிதந்தவித் தோணிபுரஞ்
சிலையிற்றிரிபுர மூன்றெரித்தார்தங் கழுமலவர்
அலருங்கழலடி நாடொறுநந்தம்மை யாள்வனவே, (௬)

முற்றிக்கிடந்துமுந் நீரின்மிதந்துடன் மொய்த்தமரர்
சுற்றிக்கிடந்து தொழப்படுகின்றது சூழரவந்
தெற்றிக்கிடந்துவெங் கோன்றளந்தூன்றிவெண் டிங்கட்சூடுங்
கற்றைச்சடைமுடி யார்க்கிடமாய கழுமலமே. (௭)

உடலுமுயிரு மொருவழிச்செல்லு முலகத்துள்ளே
படையுமுனைவந் தடைந்தாமரடியிணைக்கீழ்
நடையும்விழவொடு நாடொறுமல்கு கழுமலத்துள்
விடைபோன்றணிப்பத நாடொறுநந்தம்மை யாள்வனவே. (௮)



பரவைக்கடனஞ்சை யுண்டதுமில்லையிப் பார்முழுதுந்
திரவிக்கிடந்து தொழப்படுகின்றது நீண்டிருவர்
சிரமப்படவந்து சார்ந்தார்கழலடி காண்பதற்கே
யரவக்கழலடி நாடொறுநந்தம்மை யாள்வனவே. (௯)

கரையார்கடல்சூ ழிலங்கையர்கோன்றன் முடிசிதறத்
தொலையாமலரடி யூன்றலுமுள்ளம் விதிர்விதித்துத்
தலையாய்க்கிடந்துயர்ந் தான்றன்கழுமலங் காண்பதற்கே
யலையாப்பரிசிவை நாடொறுநந்தம்மை யாள்வனவே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம்-சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-பிரமபுரீசர்-தேவியார்-திருநிலைநாயகி.
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

---

## மூன்றாந்திருமுறை.

## திருஆவடுதுறை-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை ஞானப்பெருங்கடலைநன்மைதன்னைக், கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக் கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச், செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத் திங்களைஞாயிற்றைத்தீயைநீரை, யம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௧)

மின்னானைமின்னிடைச்சேருருமினானை வெண்முகிலாயெழுந்து மழைபொழியான்றன்னைத், தன்னானைத்தன்னொப்பாரில்லாதானைத் தாயாகிப்பல்லுயிர்க்கோர்தந்தையாகி, யென்னானையெந்தைபெருமான்றன்னை யிருநிலமுமண்டமுமாய்ச்செக்கர்வானே, யன்னானையாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௨)

பத்தர்கள்சித்தத்தேபாவித்தானைப் பவளக்கொழுந்தினைமாணிக்கத்தின், றொத்தினைத்தூநெறியாய்நின்றான்றன்னைச் சொல்லுவார்சொற்பொருளின்றோற்றமாகி, வித்தினைமுளைக்கிளையைவேரைச்சீரை வினைவயத்தின்றன்சார்வைவெய்யதீர்க்கு, மத்தனையாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே (௩)

பேணியநற்பிறைதவழ்செஞ்சடையினானைப் பித்தராமடியார்க்குமுத்திகாட்டு, மேணியையிடர்க்கடலுட்சுழிக்கப்பட்டிங் கிளைக்கின்றேற்கக்கரைக்கேயேறவாங்குந், தோணியைத்தொண்டனேன்றூய சோதிச் சுலாவெண்குழையானைச்சுடர்பொற்காசை, யாணியையாவடுதண்டுறையுண்மேய வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௪)

ஒருமணியை யுலகுக்கோ ருறுதிதன்னை யுதயத்தி னுச்சியையுருமானானைப், பருமணியைப் பாலோடஞ் சாடினானைப் பவித்திரனைப் பசுபதியைப் பவளக்குன்றைத், திருமணியைத் தித்திப்பைத் தேனதாகித் தீங்கரும்பி னின்சுவையைத் திகழுஞ்சோதி, யருமணியை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௫)

ஏற்றானை யெண்டோ ளுடையான்றன்னை யெல்லில் நடமாட வல்லான்றன்னைக், கூற்றானைக் கூற்ற முதைத்தான்றன்னைக் குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன்றன்னை, நீற்றானை நீளரவொன் றார்த்தான்றன்னை நீண்டசடைமுடிமே னீரார்கங்கை, யாற்றானை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௬)

கைம்மான மதகளிற்றை யுரித்தான்றன்னைக் கடல்வரைவா னாகாச மானான்றன்னைச், செம்மானப் பவளத்தைத் திகழுமுத்தைத் திங்களை ஞாயிற்றைத் தீயானானை, யெம்மானை யென்மனமே கோயிலாக விருந்தானை யென்புருக்கு மடியார்தங்க, ளெம்மானை யாவடுதண் டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௭)

மெய்யானைப் பொய்யரொடு விரவாதானை வெள்ளிடையைத் தண்ணிழலை வெந்தீயேந்துங், கையானைக் காமனுடல் வேவக்காய்ந்த கண்ணானைக் கண்மூன் றுடையான்றன்னைப், பையாடரவ மதியுடனே வைத்த சடையானைப் பாய்புலித்தோ லுடையான்றன்னை, யையானை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௮)

வேண்டாமை வேண்டுவது மில்லான்றன்னை விசயனை முன்னசைவித்த வேடன்றன்னைத், தூண்டாமைச் சுடர்விடுநற் சோதியானைச் சூலப்படையானைக் காலன்வாணாண், மாண்டோட வுதைசெய்த மைந்தன்றன்னை மண்ணவரும் விண்ணவரும் வணங்கியேத்தும், ஆண்டானை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௯)

பந்தணவு மெல்விரலாள் பாகன்றன்னைப் பாடலோ டாடல்பயின் றான்றன்னைக், கொந்தணவு நறுங்கொன்றை மாலையானைக் கோலமா நீலமிடற் றான்றன்னைச், செந்தமிழோ டாரியனைச் சீரியானைத் திருமார்பிற் புரிவெண்ணூ றிகழப்பூண்ட, வந்தணனை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே. (௰)

தரித்தானைத் தண்கடனஞ் சுண்டான்றன்னைத் தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தான்றன்னைப், பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையினானைப்



பெருவலியான் மலையெடுத்த வரக்கன்றன்னை, நெரித்தானை நேரிழையாள் பாகத்தானை நீசனே னுடலுறுநோ யானதீர, வரித்தானை யாவடுதண்டுறையுண்மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருச்சத்திமுற்றம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடின்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௧)

காய்ந்தா யனங்க னுடலம் பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தா யுயிர்செகப் பாதம் பணிவார்தம் பல்பிறவி
யாய்ந்தாய்ந் தறுப்பா யடியேற் கருளாயுன் னன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௨)

பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போன் மறுகுமென் சிந்தை மறுக்கொழிவி
யத்தா வடியே னடைக்கலங் கண்டா யமரர்கடஞ்
சித்தா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௩)

நில்லாக் குரம்பை நிலையாக் கருதியிந் நீணிலத்தொன்
றல்லாக் குழிவீழ்ந் தயர்வுறு வேனைவந் தாண்டுகொண்டாய்
வில்லேர் புருவத் துமையாள் கணவா விடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௪)

கருவுற் றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியிற்
றெருவிற் புகுந்தேன் றிகைத்தடி யேனைத் திகைப்பொழிவி
யுருவிற் றிகழு முமையாள் கணவா விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௫)

வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் றாளென்றன் னெஞ்சத் தெழுதிவை யீங்கிகழி
லம்மை யடியேற் கருளுதி யென்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. (௬)

விட்டார்புரங்க ளொருநொடிவேவவோர் வெங்கணையாற்
சுட்டாயென்பாசத் தொடர்பறுத்தாண்டுகொள் தும்பியம்பு
மட்டார்குழலி மலைமகள்பூசை மகிழ்ந்தருளுஞ்
சிட்டாதிருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (௭)

இகழ்ந்தவன்வேள்வி யழித்திட்டிமையோர் பொறையிரப்பத்
திகழ்ந்திடவன்றேவி சயமுங்கொண்டது நீலகண்டா
புகழ்ந்தவடியேன்றன் புன்மைகடீரப் புரிந்துநல்காய்
திகழ்ந்ததிருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (௮)

தக்கார்வமெய்திச் சமண்டவிர்ந்துன்றன் சரண்புகுந்தேன்
எக்காதலெப்பய னுன்றிறமல்லா லெனக்குளதே
மிக்கார்தில்லையுள் விருப்பாமிகவட மேருவென்னுந்
திக்காதிருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (௯)

பொறித்தேரரக்கன் பொருப்பெடுப்புற்றவன் பொன்முடிதோள்
இறத்தாளொருவிர லூன்றிட்டலற விரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய் கொடியேன்செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம்-சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-சிவக்கொழுந்தீசுவரர்- தேவியார் பெயர் பெரியநாயகியம்மை.

---

## மூன்றாந்திருமுறை.

### திருநல்லூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நினைந்துருகுமடியாரை நையவைத்தார் நில்லாமேதீவினைகணீங்க வைத்தார், சினந்திருகுகளிற்றுரிவைப் போர்வைவைத்தார் செழுமதியின்றளிர்வைத்தார் சிறந்துவானோர், இனந்துருவிமணிமகுடத்தேறத் துற்ற வினமலர்கள்போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி, நனைந்தனையதிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே.

பொன்னலத்தநறுங்கொன்றை சடைமேல்வைத்தார் புலியுரியினதள்வைத்தார் புனலும்வைத்தார், மன்னலத்ததிரடோண்மேன் மழுவாள்வைத்தார் வார்காதிற்குழைவைத்தார் மதியம்வைத்தார், மின்னலத்தநுண்ணிடையாள் பாகம்வைத்தார் வேழத்தினுரிவைத்தார் வெண்ணூல்வைத்தார், நன்னலத்ததிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௨)



தோடேறுமலர்க்கொன்றை சடைமேல்வைத்தார் துன்னெருக்கின்வடம்வைத்தார் துவலைசிந்தப் பாடேறுபடுதிரைகளெறியவைத்தார் பனிமத்தமலர்வைத்தார் பாம்பும்வைத்தார், சேடேறுதிருநுதன்மேனாட்டம்வைத்தார் சிலைவைத்தார்மலைபெற்ற மகளைவைத்தார், நாடேறுதிருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௩)

வில்லருளிவருபுருவத்தொருத்திபாகம் பொருத்தாகிவிரிசடைமேலருவிவைத்தார், கல்லருளிவருசிலையாவைத்தாரூராக் கயிலாயமலைவைத்தார் கடலூர்வைத்தார், சொல்லருளியறநால்வர்க்கறியவைத்தார் சுடுசுடலைப்பொடிவைத்தார் துறவிவைத்தார், நல்லருளாற்றிருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௪)

விண்ணிரியத்திரிபுரங்களெரியவைத்தார் வினைதொழுவார்க்கறவைத்தார் துறவிவைத்தார், கண்ணெரியாற்காமனையும்பொடியாவைத்தார் கடிக்கமலமலர்வைத்தார் கயிலைவைத்தார், திண்ணெரியுந்தண்புனலுமுடனேவைத்தார் திசைதொழுதுமிசையமரர் திகழ்ந்துவாழ்த்தி, நண்ணரியதிருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௫)

உற்றாலவுபிணியுலகத்தெழுமைவைத்தா ருயிர்வைத்தாருயிர்செல்லுங் கதிகள்வைத்தார், மற்றமரர்கணம்வைத்தாரமர்காணா மறைவைத்தார்குறைமதியம் வளரவைத்தார், செற்றமலியார்வமொடுகாமலோபஞ் சிறவாதநெறிவைத்தார் துறவிவைத்தார், நற்றவர்சேர்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௬)

மாறுமலைந்தாரரணமெரியவைத்தார் மணிமுடிமேலரவைத்தா ரணிகொண்மேனி, நீறுமலிந்தெரியாடனிலாவவைத்தார் நெற்றிமேற்கண்வைத்தார் நிலையம்வைத்தா, ராறுமலிந்தறுதிரைகளெறியவைத்தா ரார்வத்தாலடியமரர் பரவவைத்தார், ஏறுமலர்த்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௭)

குலங்கண்மிகுமலைகடல்கண்ஞாலம்வைத்தார் குருமணிசேரரவத்தார் கோலம்வைத்தார், உலங்கிளருமரவத்தினுச்சிவைத்தா ருண்டருளின்விடம்வைத்தா ரொண்டோள்வைத்தார், நிலங்கிளரும்புனல்கனலுமனிலம்வைத்தார் நிமிர்விசும்பின்மிசைவைத்தார் நினைந்தாரித்தாள், நலங்கிளருந்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௮)

சென்றுருளுங்கதிரிரண்டும் விசும்பில்வைத்தார் திசைபத்துமிருநிலத்திற் றிருத்தவைத்தார், நின்றருளியடியமரர்வணங்கவைத்தார் நிறைதவமுமறைப்பொருளு நிலவவைத்தார், கொன்றருளிக்கொடுங்கூற்றநடுங்கியோடக் குரைகழற்சேவடிவைத்தார் விடையும்வைத்தார், நன்றருளுந்திருவடியென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௯)

பாம்புரிஞ்சிமதிகிடந்ததிரைகளேங்கப் பனிக்கொன்றைசடைவைத்தார் பணிசெய்வாரோர், ஆம்பரிசுதமக்கெல்லாமருளும்வைத்தா ரடிசுடலைப்பொடிவைத்தா ரழகும்வைத்தார், ஒப்பரியவல்வினைநோய்தீரவைத்தா ருமையையொருபால்வைத்தா ருகந்துவானோர், நாம்பரவுமடியிணையென்றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௰)

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார் குருமணிசேர்மலைவைத்தார் மலையைக்கையா, லிலங்கிளரவெடுத்தவன்றன்முடியுந்தோள வொருவிரலாலுறவைத்தா ரிறைவாவென்று, புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார் புகழ்வைத்தார்புரிந்தாளாக் கொள்ளவைத்தார், நலங்கிளருந்திருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பெரியாண்டேசுவரர் - தேவியார் - திரிபுரசுந்தரியம்மை.

---

## முதற்றிருமுறை.

### விடந்தீர்த்ததிருப்பதிகம்-பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர் சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுய ருமதிசூடுவ
ரொன்றுகொலாமிடு வெண்டலைகையது
வொன்றுகொலாமவ ரூர்வதுதானே. (௧)

இரண்டுகொலாமிமை யோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங் குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுரு வஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவ ரெய்தினதாமே. (௨)



மூன்றுகொலாமவர் கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர் சூலத்தின்மொய்யிலை
* மூன்றுகொலாங்கணை கையதுவின்னாண்
மூன்றுகொலாம்புர மெய்தனர்தாமே. (௩)

நாலுகொலாமவர் தம்முகமாவன
நாலுகொலாஞ்சன னம்முதற்றோற்றமு
நாலுகொலாமவ ரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறை பாடினதாமே. (௪)

அஞ்சுகொலாமவ ராடரவின்படம்
அஞ்சுகொலாமவர் வெல்புலனாவன
வஞ்சுகொலாமவர் காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவ ராடினதாமே. (௫)

ஆறுகொலாமவ ரங்கம்படைத்தன
வாறுகொலாமவர் தம்மகனார்முக
மாறுகொலாமவர் தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவை யாக்கினதாமே. (௬)

ஏழுகொலாமவ ரூழிபடைத்தன
ஏழுகொலாமவர் கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவ ராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசை யாக்கினதாமே. (௭)

எட்டுக்கொலாமவ ரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர் சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர் தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசை யாக்கினதாமே. (௮)

ஒன்பதுபோலவர் வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர் மார்பினினூலிழை
யொன்பதுபோலவர் கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர் பாரிடந்தானே. (௯)

பத்துக்கொலாமவர் பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயி றுந்நெரிந்துக்கன

---

* வாயுதேவன் பாணத்தின் ஈர்க்கும் விஷ்ணு ... அக்னிதேவன் அந்தஅலகின் முனையில் கூர்மையுமாயிருந்ததைப்பற்றி மூன்றுகொலாங்கணையென்றருளிச்செய்தது.

பத்துக்கொலாமவர் காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடி யார்செய்கைதானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது அப்பூதிநாயனர் புத்திரரைத் தீண்டியவிஷம் நீங்கும்படி
அருளிச்செய்தது.

---

திருப்பழனம்-பண்-பழந்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்ற குயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டு பண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள் முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென் புதுநலமுண்டிகழ்வானே. (௧)

கண்டகங்காள்முண்டகங்காள் கைதைகாள்நெய்தல்காள்
பண்டரங்கவேடத்தன் பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கி மற்றவனென் றளிர்வண்ணங்
கொண்டநாள்தானறிவான் குறிக்கொள்ளாதொழிவானே. (௨)

* மனைக்காஞ்சியிளங்குருகே மறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான் பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லா முரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச்சோர்வாளே. (௩)

புதியையாயினியையாம் பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்று பலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனை மதித்திட்டமதிக்கங்கை
விதியாளனென்னுயிர்மேல் விளையாடல்விடுத்தானே. (௪)

மண்பொருந்திவாழ்பவர்க்கு மாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்துதேவர்க்கும் வீடுபேறாய்நின்றானைப்
பண்பொருந்தவிசைபாடும் பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போழ்தத்துங் கைவிடநான்கடவேனே. (௫)

பொங்கோதமால்கடலிற் புறம்புறம்போயிரைதேருஞ்
செங்கால்வெண்மடநாராய் செயற்படுவதறிவேனு
னங்கோலவளைகவர்ந்தா னணிபொழில்சூழ்பழனத்தான்
றங்கோலநறுங்கொன்றைத் தாரருளாதொழிவானே. (௬)

* மனைக்காஞ்சியென்பது - வீட்டுக்குச் சமீபத்திலிருக்குங் காஞ்சிமரம்.



துணையாரமுயங்கிப்போய்த் துறைசேருமடநாராய்
பணையாரவாரத்தான் பாட்டோவாப்பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற் கடியரணம்பொடிசெய்த
விணையாரமார்பனென் னெழினலமுண்டிகழ்வானே. (௭)

௦ கூவைவாய்மணிவரன்றிக் கொழித்தோடுங் ? காவிரிப்பூம்
பாவைவாய்முத்திலங்கப் பாய்ந்தாடும்பழனத்தான்
கோவைவாய்மலைமகள்கோன் கொல்லேற்றின்கொடியாடைப்
பூவைகாள்மழலைகாள் போகாதபொழுதுளதே. (௮)

புள்ளிமான்பொறியரவப் புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்த விருக்கின்றபழனத்தா
னுள்குவார்வினைதீர்க்கு மென்றுரைப்பருலகெல்லாங்
கள்ளியேனானிவற்கென் கனவளையுங்கடவேனே. (௯)

வஞ்சித்தென்வளைகவர்ந்தான் வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம் பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலிய வழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்ற சேவடியாய்கோடியையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபச்சகாயர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

---

திருஆரூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவரு குண்டர்முன்னேநமக் குண்டுகொல்லோ
அலம்பலம்பாவரு தண்புனலாரூ ரவிர்சடையான்
சிலம்பலம்பாவரு சேவடியான்றிரு மூலத்தானம்
புலம்பலம்பாவரு தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (௧)

௦ கூவைவாய்மணியென்பதற்குப் பூமியினிடத்தில் பொருந்திய முத்துக்களென்பது - கொக்கு யாவன-யானைக்கொம்பு-பன்றிக்கொம்பு-நாகம்-பசுவின்பல் - மூங்கிற்கணு - கொக்கின்கழுத்து - கர்ப்புவதிகள்கண்டம் என்று மிவ்விடங்களிலுண்டாயிருக்கு முத்துகளாம்.

? காவிரிப்பூம்பாவைவாய் முத்து என்பதற்கு முத்துஎனக்கொள்க - அவைசங்கு-இப்பி-மீன்-தாமரைமலர் என்று மிவைகளிலுண்டாகு முத்துகள் - இதனைசிதம்பரமுனிவர் [illegible] திருமாளிகைத்தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா-உ-வது-பதிகம்-௫-வது-திருப்பாடலாலுமுணர்க.

மற்றிடமின்றி மனைதுறந் தல்லுணா வல்லமணர்
சொற்றிடமென்று துரிசுபட்டேனுக்கு முண்டுகொல்லோ
விற்றிடம்வாங்கி விசயனோடன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங்கொண்டான்றன் றொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

ஒருவடிவின்றிநின் றுண்குண்டர்முன்னமக் குண்டுகொல்லோ.
செருவடிவெஞ்சிலை யாற்புரமட்டவன் சென்றடையாத்
திருவுடையான்றிரு வாரூர்த்திருமூலத் தானன்செங்கட்
பொருவிடையானடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே.

மாசினையேறிய மேனியர்வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனையேநினைந் தேசறவேனுக்கு முண்டுகொல்லோ
தேசனையாரூர் திருமூலத்தானனைச் சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (ச)

அருந்தும்பொழுதுரை யாடாவமணர் திறமகன்று
வருந்திநினைந்தர னேயென்றுவாழ்த்துவேற் குண்டுகொல்லோ
திருந்தியமாமதி லாரூர்த்திருமூலத் தானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

வீங்கியதோள்களுந் தாள்களுமாய்நின்று வெற்றரையே
மூங்கைகள்போலுண்ணு மூடர்முன்னேநமக் குண்டுகொல்லோ.
தேங்கமழ்சோலைத் தென்னாரூர்த்திருமூலத் தானன்செய்ய
பூங்கழலானடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (ரு)

பண்ணியசாத்திரப் பேய்கள்பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன் றன்னருள்பெற்றேற்கு முண்டுகொல்லோ
திண்ணியமாமதி லாரூர்த்திருமூலத் தானனெங்கள்
புண்ணியன்றன்னடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. ()

கரப்பர்கண்மெய்யைத் தலைபறிக்கச்சுக மென்னுங்குண்ட
ருரைப்பனகேளாதிங் குய்யப்போந்தேனுக்கு முண்டுகொல்லோ
திருப்பொலியாரூர்த் திருமூலத்தானன் றிருக்கயிலைப்
பொருப்பன்விருப்பமர் தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

கையிலிடுசோறு நின்றுண்ணுங்காத லமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங் குய்யப்போந்தேனுக்கு முண்டுகொல்லோ
ஐயனணிவய லாரூர்த்திருமூலத் தானனுக்குப்
பொய்யன்பிலாவடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே.()



குற்றமுடைய வமணர்திறமது கையகன்றிட்
டுற்றகருமஞ்செய் துய்யப்போந்தேனுக்கு முண்டுகொல்லோ
மற்பொலிதோளா னிராவணன்றன்வலி வாட்டுவித்த
பொற்கழலானடித் தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந்திருமுறை.

### திருஆரூர் - போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்களுண்ணுங் கனியேபோற்றி கழலடைந்தார்செல்லுங் கதியேபோற்றி, யற்றவர்கட்காரமுத மானாய்போற்றி யல்லலறுத்தடியேனை யாண்டாய்போற்றி, மற்றொருவரொப்பில்லா மைந்தாபோற்றி வானவர்கள்போற்று மருந்தேபோற்றி, செற்றவர்தம் புரமெரித்த சிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (க)

வங்கமலிகடனஞ்ச முண்டாய்போற்றி மதயானையீருரிவை போர்த்தாய்போற்றி, கொங்கலருநறுங்கொன்றைத் தாராய்போற்றி கொல்புலித்தோலாடைக் குழகாபோற்றி, யங்கணனேயமரர்கடம் மிறைவாபோற்றி யாலமாநீழலறஞ் சொன்னாய்போற்றி, செங்கனகத்தனிக்குன்றே சிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (உ)

மலையான்மடந்தை மணாளாபோற்றி மழவிடையாய் நின்பாதம் போற்றிபோற்றி, நிலையாகவென்னெஞ்சி னின்றாய்போற்றி நெற்றிமேலொற்றைக்கண் ணுடையாய்போற்றி, யிலையார்ந்தமூவிலைவே லேந்திபோற்றி யேழ்கடலுமேழ்பொழிலு மானாய்போற்றி, சிலையாலன்றெயிலெரித்த சிவனேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (ங)

பொன்னியலுமேனியனே போற்றிபோற்றி பூதப்படையுடையாய் போற்றிபோற்றி, மன்னியசீர்மறைநான்கு மானாய்போற்றி மறியேறுகையானே போற்றிபோற்றி, யுன்னுமவர்க்குண்மையனே போற்றிபோற்றி யுலகுக்கொருவனே போற்றிபோற்றி, சென்னிமிசைவெண்பிறையாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி

நஞ்சுடையகண்டனே போற்றிபோற்றி நற்றவனேநின்பாதம் போற்றிபோற்றி, வெஞ்சுடரோன்பல்லிறுத்த வேந்தேபோற்றி வெ

ண்மதியங்கண்ணி விகிர்தாபோற்றி, துஞ்சிருளிலாட லுகந்தாய்போற்றி தூநீறுமெய்க்கணிந்த சோதிபோற்றி, செஞ்சடையாய் நின்பாதம் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (௫)

சங்கரனே நின்பாதம் போற்றிபோற்றி சதாசிவனே நின்பாதம் போற்றிபோற்றி, பொங்கரவா நின்பாதம் போற்றிபோற்றி புண்ணியனே நின்பாதம் போற்றிபோற்றி, யங்கமலத் தயனோடுமா லுங்காணு வனலுருவா நின்பாதம் போற்றிபோற்றி, செங்கமலத்திருப்பாதம் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (௬)

வம்புலவுகொன்றைச் சடையாய்போற்றி வான்பிறையும்வாளரவும் வைத்தாய்போற்றி, கொம்பனைய நுண்ணிடையாள் கூறாபோற்றி குரைகழலாற் கூற்றுதைத்த கோவேபோற்றி, நம்புமவர்க்கரும் பொருளே போற்றிபோற்றி நால்வேதம்ஆறங்க மானாய்போற்றி, செம்பொனேமரகதமே மணியேபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (௭)

உள்ளமாயுள்ளத்தே நின்றாய்போற்றி யுகப்பார்மனத்தென்று நீங்காய்போற்றி, வள்ளலேபோற்றி மணாளாபோற்றி. வானவர்கோன் றோளிறுத்த மைந்தாபோற்றி, வெள்ளையேறேறும் விகிர்தாபோற்றி மேலோர்க்குமேலோர்க்கு மேலாய்போற்றி, தென்றுநீர்க்கங்கைச் சடையாய்போற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (௮)

பூவார்ந்தசென்னிப் புனிதாபோற்றி புத்தேளிர்போற்றும் பொருளேபோற்றி, தேவார்ந்ததேவர்க்குந் தேவேபோற்றி திருமாலுக்காழி யளித்தாய்போற்றி, சாவாமேகாத்தென்னை யாண்டாய்போற்றி சங்கொத்தநீற்றெஞ் சதுராபோற்றி, சேவார்ந்தவெல்கொடியாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. (௯)

பிரமன்றன்சிரமரிந்த பெரியோய்போற்றி பெண்ணுருவோடாணுருவாய் நின்றாய்போற்றி, கரநான்கு முக்கண்ணு முடையாய்போற்றி காதலிப்பார்க்காற்ற வெளியாய்போற்றி, யருமந்ததேவர்க் கரசேபோற்றி யன்றரக்கனைந்நான்கு தோளுந்தாளுஞ், சிரநெரித்தசேவடியாய் போற்றிபோற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி. ()

திருச்சிற்றம்பலம்.



## முதற்றிருமுறை

### திருவாரூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாநினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன் புறம்போயினாலறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளம்மதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே. (௧)

கடம்படநடமாடினாய் களைகண்ணெனக்கொருகாதல்செய்
தடியொடுங்கிவந்தடைந்தேனொழிப்பாய்பிழைப்பவெல்லா
முடங்கிறான்முதுநீர்மலங்கிளவாளைசெங்கயல்சேல்வரால்களி
றடைந்ததண்கழனியணியாரூரம்மானே. (௨)

அருமணித்தடம்பூண்முலையரம்பையோடருளப்பாடி
யுரிமையிற்றொழுவாருருத்திரபல்கணத்தார்
விரிசடைவிரதிகளந்தணர்சைவர்*பாசுபதர்கபாலிகள்
தெருவினிற்பொலியுந்திருவாரூரம்மானே. (௩)

பூங்கழல்தொழுதும்பரவியும்புண்ணியர்புனிதாவுன்பொற்கழ
லீங்கிருக்கப்பெற்றேனென்னகுறையுடையே
னோங்குதெங்கிலையார்கமுகிளவாழைமாவொடுமாதுளம்பல
தீங்கனிசிதறுந்திருவாரூரம்மானே. (௪)

நீறுசேர்செழுமார்பினாய்நிரம்பாமதியொடுநீள்சடையிடை
யாறுபாயவைத்தாயடியேயடைந்தொழிந்தே
னேறிவண்டொடுதும்பியஞ்சிறகூன்றவிண்டமலரிதழ்வழி
தேறல்பாய்ந்தொழுகுந்திருவாரூரம்மானே. (௫)

அளித்துவந்தடிகைதொழுமவர்மேல்வினைகெடுமென்றிவையகங்
களித்துவந்துடனேகலந்தாடக்காதலராய்க்
குளித்துமூழ்கியுந்தூவியுங்குடைந்தாடுகோதையர்குஞ்சியுள்புகத்
தெளிக்குந்தீர்த்தமறாதிருவாரூரம்மானே. (௬)

திரியுமூவெயிலிற்தீயெழச்சிலைவாங்கிநின்றவனேயென்சிந்தையுட்
பிரியுமாறெங்ஙனேபிழைத்தேயும்போகவொட்டேன்
பெரியசெந்நெற்பிரம்புரிசேர்ந்தசாலிதிப்பியமென்றிவையகத்
தரியுந்தண்கழனியணியாரூரம்மானே. (௭)

* பாசுபதர்—கபாலிகள் இவ்விருவகை யாரும் அறுவகை உட்சமயத்தாரிற் சேர்ந்தவர்கள்.

பிறத்தலும்பிறந்தாற்பிணிப்படவாய்ந்தசைந்துடலம்புகுந்துநின்
றிறக்குமாறுளதேயிழித்தேன்பிறப்பினைநா
னறத்தையேபுரிந்தமனத்தனாயார்வச்செற்றக்குரோதநீக்கியுன்
றிறத்தனாயொழிந்தேன்றிருவாரூரம்மானே. (௮)

முளைத்தவெண்பிறைமொய்சடையுடையா யெப்போதுமென்னெஞ்
சிடங்கொள்ள, வளைத்துக்கொண்டிருந்தேன்வலிசெய்துபோகவொட்
டேன்,வுளைப்பிரிந்தவலவன்போய்ப்புகுந்தந்தகாலமுங்கண்டுதன்பெ
டை,திளைக்குந்தண்கழனித்திருவாரூரம்மானே. (௯)

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாகங்கீண்டவ
னாடிக்காணமாட்டாததழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைக்கூறுபத்தர்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும் பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக் கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானு மொளிதிகழ்சூலத்தினானும்
மாடிளம்பாம்பசைத்தானு மாரூரமர்ந்தவம்மானே. (௧)

நரியைக்குதிரைசெய்வானு நரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும் விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோட முன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சார்த்திநின்றானு மாரூரமர்ந்தவம்மானே. (௨)

நீறுமெய்பூசவல்லானு நினைப்பவர்நெஞ்சத்துளானு
மேறுகந்தேறவல்லானு மெரிபுரைமேனியினானு
நாறுகரந்தையினானு நான்மறைக்கண்டத்தினானு
மாறுசடைக்கரந்தானு மாரூரமர்ந்தவம்மானே. (௩)

கொம்புநல்வேனிலவனைக் குழையமுறுவல்செய்தானுஞ்
செம்புனல்கொண்டெயின்மூன்றுந் தீயெழக்கண்சிவந்தானும்
வம்புநற்கொன்றையினானும் வாட்கண்ணிவாட்டமதெய்த
அம்பரவீருரியானு மாரூரமர்ந்தவம்மானே. (௪)



ஊழியளக்கவல்லானு முகப்பவருச்சியுள்ளானு
தாழிளஞ்செஞ்சடையானுந் தண்ணமர்திண்கொடியானுந்
தோழியர்தூதிடையாடத் தொழுதடியார்கள்வணங்க
ஆழிவளைக்கையினானு மாரூரமர்ந்தவம்மானே. (௫)

ஊர்திரைவேலையுள்ளானு முலகிறந்தொண்பொருளானுஞ்
சீர்தருபாடலுள்ளானுஞ் செங்கண்விடைக்கொடியானும்
வார்தருபூங்குழலாளை மருவியுடன்வைத்தவனு
மாதிரைநாளுகந்தானு மாரூரமர்ந்தவம்மானே. (௬)

தொழற்கங்கைதுன்னிநின்றார்க்குத் தோன்றியருளவல்லானுங்
கழற்கங்கைபன்மலர்கொண்டு காதல்கனற்றநின்றானுங்
குழற்கங்கையாளையுள்வைத்துக் கோலச்சடைக்கரந்தானு
மழற்கங்கையேந்தவல்லானு மாரூரமர்ந்தவம்மானே. (௭)

ஆயிரந்தாமரைபோலு மாயிரஞ்சேவடியானு
மாயிரம்பொன்வரைபோலு மாயிரந்தோளுடையானு
மாயிரஞாயிறுபோலு மாயிரநீண்முடியானு
மாயிரம்பேருகந்தானு மாரூரமர்ந்தவம்மானே. (௮)

வீடரங்காநிறுப்பானும் விசும்பினைவேதிதொடர
வோடரங்காகவைத்தானு மோங்கியோரூழியுள்ளானுங்
காடரங்காமகிழ்ந்தானுங் காரிகையார்கண்மனத்துள்
ஆடரங்கத்திடையானு மாரூரமர்ந்தவம்மானே. (௯)

பையஞ்சுடர்விடுநாகப் பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக் கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப் புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானு மாரூரமர்ந்தவம்மானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர்த்திருவாதிரைத் திருப்பதிகம்-பண் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிக
ளத்தனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௧)

நணியார்சேயார் நல்லார்தீயார் நாடோறும்
பிணிதான்றீரு மென்றுபிறங்கிக் கிடப்பாரு
மணியேபொன்னே மைந்தாமணாளா வென்பார்கட்
கணியானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௨)

வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்க
ளாதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௩)

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலு
மணங்கொளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௪)

நிலவெண்சங்கும் பறையுமார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்குங்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்துவந்
தலமராரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௫)

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார்தலையான் முட்டுவா
ரெம்மானீச னெந்தையென்னப்ப னென்பார்கட்
கம்மானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௬)

செந்துவர்வாயார் செல்வன்சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவா
ரிந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்து
மந்திரனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௭)

முடிகள்வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
வடிகொள்வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள்பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
வடிகளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௮)

துன்பநும்மைத் தொழாதநாள்க ளென்பாரு
மின்பநும்மை யேத்துநாள்க ளென்பாரு
நும்பினெம்மை நுழையப்பணியே யென்பாரு
மன்பனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (௯)



பாரூர்பவ்வத் தானைப்பத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்து
மாரூரன்ற னாதிரைநாளா லதுவண்ணம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந்திருமுறை.

### திருவீழிமிழலை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப் போர்வையானைப் புலியதளேயுடையா
டை போற்றினானைப், பாரானைமதியானைப் பகலானானைப் பல்லுயி
ராய்நெடுவெளியாய்ப் பரந்துநின்ற, நீரானைக்காற்றானைத் தீயானானை
நினையாதார்புரமெரிய நினைந்ததெய்வத், தேரானைத்திருவீழி மிழலை
யானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௧)

சவந்தாங்குமயானத்துச் சாம்பலென்பு தலையோடுமயிர்க்கயி
று தரித்தான்றன்னைப், பவந்தாங்குபாசுபத வேடத்தானைப் பண்டம
ரர்கொண்டுகந்த வேள்வியெல்லாங், கவர்ந்தானைக்கச்சியே கம்பன்ற
ன்னைக் கழலடைந்தான்மேற்கறுத்த காலன்வீழச், சிவந்தானைத்திரு
வீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௨)

அன்றாலின்கீழிருந்தங் கறஞ்சொன்னானை யகத்தியனையுகப்பா
னை யயன்மாறேட, நின்றானைக்கிடந்தகட னஞ்சுண்டானை நேரிழை
யைக்கலந்திருந்தே புலன்களைந்தும், வென்றானைமீயச்சூர் மேவினா
னை மெல்லியலாடவத்தினிறை யளக்கலுற்றாச், சென்றானைத்திருவீழி
மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௩)

தூயானைச்சுடர்ப்பவளச் சோதியானைத் தோன்றியவெவ்வுயிர்க்
குந் துணையாய்நின்ற, தாயானைச்சக்கரமாற் கீந்தான்றன்னைச் சங்கர
னைச்சந்தோக சாமமோதும், வாயானைமந்திரிப்பார் மனத்துளானை
வஞ்சனையாலஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச், சேயானைத்திருவீழி
மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௪)

நற்றவத்தினல்லானைத் தீதாய்வந்த நஞ்சமுதுசெய்தானை யமு
தமுண்ட, மற்றமரருலந்தாலு முலவாதானை வருகாலஞ்செல்காலம்
வந்தகால, முற்றவத்தையுணர்ந்தாரு முணரலாகா வொருசுடரையிரு
விசும்பி னூர்மூன்றோன்றச், செற்றவனைத்திருவீழி மிழலையானைச்
சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௫)

மைவானமிடற்றானை யவ்வான்மின்போல் வளர்சடைமேன்மதியானை மழையாயெங்கும், பெய்வானைப்பிச்சாட லாடுவானைப் பிலவா யபேய்க்கணங்க ளார்க்கச்சூலம், பொய்வானைப்பொய்யிலா மெய்யன்றன்னைப் பூதலமுமண்டலமும் பொருந்தும்வாழ்க்கை, செய்வானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. ௬

மிக்கானைக்குறைந்தடைந்தார் மேவலானை வெவ்வேறாயிருமூன்று சமயமாகிப், புக்கானையெப்பொருட்கும் பொதுவானானைப் பொன்னுலகத்தவர்போற்றும் பொருளுக்கெல்லாந், தக்கானைத்தானன்றி வேறொன்றில்லாத் தத்துவனைத்தடவரையை நடுவுசெய்த, திக்கானைத் திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௭)

வானவர்கோன்றோளிறுத்த மைந்தன்றன்னை வளைகுளமுமறைக்காடு மன்னினானை, யூனவனையுயிரவனை யொருநாட்பார்த்த னுயர்தவத்தினிலையறிய வுற்றாற்சென்ற, கானவனைக்கயிலாயமேவினானைக் கங்கைசேர்சடையானைக் கலந்தார்க்கென்றுந், தேனவனைத்திருவீழிமிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௮)

பாத்தானையிப்பக்கம் பலவானானைப் பசுபதியைப்பத்தர்க்கு முத்திகாட்டும், வரத்தானைவணங்குவார் மனத்துளானை மாருதமாலெரிமூன்று வாயம்பிர்க்காரஞ், சரத்தானைச்சரத்தையுந்தன் றாட்கீழ்வைத்த தபோதனனைச்சடாமகுடத் தணிந்தபைங்கட், சிரத்தானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே. (௯)

அறுத்தானையயன்றலைக ளஞ்சிலொன்றை யஞ்சாதேவரையெடுத்த வரக்கன்றோள்க, ளிறுத்தானையெழுநரம்பி னிசைகேட்டானை யிந்துவினைத்தேய்த்தானை யிரவிதன்பற், பறித்தானைப்பகீரதற்கா வானோர்வேண்டப் பரந்திழியும்புனற்கங்கை பனிபோலாகச், செறுத்தானைத்திருவீழி மிழலையானைச் சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.

---

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழி யாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்ம்மினே. (௧)



ஈண்டுசெஞ்சடை யாகத்துளீசரோ
மூண்டகார்முகி லின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டநீ ரேயருள்செய்திடும்
நீண்டமாக்கத வின்வலிநீக்குமே. (௨)

அட்டமூர்த்திய தாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ் சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப்பாமரோ
சட்டவிக்கதவந் திறப்பிம்மினே. (௩)

அரியநான்மறை யோதியநாவரோ
பெரியவான்புரஞ் சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவண வாடைவிருத்தரோ
பெரியவான்கத வம்பிரிவிக்கவே. (௪)

மலையில்நீடிருக்கும் மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ் சுங்கழலேத்தரோ
விலையில்மாமணி வண்ணவுருவரோ
தொலைவிலாக்கத வந்துணைநீக்குமே. (௫)

பூக்குந்தாழை புறணியருகெலா
மாக்குந்தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரி யீரடியேனுமை
நோக்கிக்காணக் கதவைத்திறவுமே. (௬)

வெந்தவெண்பொடிப் பூசும்விகிர்தரோ
வந்தமில்லி யணிமறைக்காடரோ
எந்தைநீயடியார் வந்திறைஞ்சிட
விந்தமாக்கத வம்பிணிநீக்குமே. (௭)

ஆறுசூடு மணிமறைக்காடரோ
கூறுமாதுமைக் கீந்தகுழகரோ
ஏறதேறிய வெம்பெருமானிந்த
மாறிலாக்கத வம்வலிநீக்குமே. (௮)

சுண்ணவெண்பொடிப் பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந் தேறும்பரமரோ
வண்ணலாதி யணிமறைக்காடரோ
திண்ணமாக்கத வந்திறப்பிம்மினே. (௯)

அரக்கனைவிர லாலடர்த்திட்டநீ
 இரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே
 சுரக்கும்புன்னைகள் சூழ்மறைக்காடரோ
 சரக்கவிக்கத வந்திறப்பிம்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாந்திருமுறை

### திருவாய்மூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னை யிருந்திடந்தேடிக்கொண்
 டங்கேவந்தடை யாளமருளினார்
 தெங்கேதோன்றுந் திருவாய்மூர்ச்செல்வனா
 ரங்கேவாவென்று போனாரதென்கொலோ. (க)

மன்னுமாமறைக் காட்டுமணாளனா
 ருன்னியுன்னி யுறங்குகின்றேனுக்குத்
 தன்னைவாய்மூர்த் தலைவனாஞ்சொல்லி
 யென்னைவாவென்று போனாரதென்கொலோ. (உ)

அஞ்சேகண்டேன் றரிக்கிலாதாரென்றேன்
 அஞ்சேலுன்னை யழைக்கவந்தேனென்றார்
 உஞ்சேனென்றுகந் தேயெழுந்தோட்டந்தேன்
 வஞ்சேவல்லரோ வாய்மூரடிகளே. (ங)

கழியக்கண்டிலேன் கண்ணெதிரேகண்டேன்
 ஒழியப்போந்திலே னொக்கவேயோட்டந்தேன்
 வழியிற்கண்டிலேன் வாய்மூரடிகள்தஞ்
 சுழியிற்பட்டுச் சுழல்கின்றதென்கொலோ. (ச)

ஒள்ளியாரிவ ரன்றிமற்றில்லையென்
 றுள்கியுள்கி யுகந்திருந்தேனுக்குத்
 தெள்ளியாரிவர் போலத்திருவாய்மூர்க்
 கள்ளியாரவர் போலக்கரந்ததே. (ரு)

யாதேசெய்துமி யாமலோநீயென்னி
 லாதேயேயு மளவில்பெருமையன்
 மாதேவாகிய வாய்மூர்மருவினார்
 போதேயென்றும் புகுந்ததும்பொய்கொலோ. (சா)



பாடிப்பெற்ற பரிசில்பழங்காசு
 வாடவாட்டந்தவிர்ப்பா ரவரைப்போல்
 தேடிக்கொண்டு திருவாய்மூர்க்கேயென
 ஓடிப்போந்திங் கொளித்தவாறென்கொலோ. (எ)

திறக்கப்பாடிய வென்னினுஞ்செந்தமிழ்
 உறைப்புப்பாடி யடைப்பித்தாருந்நின்றார்
 மறைக்கவல்லரோ தம்மைத்திருவாய்மூர்ப்
 பிறைக்கொள்செஞ்சடை யாரிவர்பித்தரே. (அ)

தனக்கேருமை தவிர்கென்றுவேண்டினும்
 நினைத்தென்பொய்க்கருள் செய்திடுநின்மலன்
 எனக்கேவந்தெதிர் வாய்மூருக்கேயெனப்
 புனற்கேபோற்கோயில் புக்கதும்பொய்கொலோ. (கூ)

தீண்டற்கரிய திருவடியொன்றினால்
 மீண்டற்குமிதித் தாரரக்கன்றனை
 வேண்டிக்கொண்டேன்திரு வாய்மூர்விளக்கினைத்
 தூண்டிக்கொள்வ னென்றலுந்தோன்றுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாய்மூரீசுவரர்-தேவியார்-பாலினன்மொழியம்மை.

---

## மூன்றாந்திருமுறை

### திருவாய்மூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன் பத்தர்கணங்கண்டேன் மொய்த்தபூத, மாடன்முழவமதிரக்கண்டே னங்கையனல்கண்டேன் கங்கையாளைக், கோடலரவார்சடையிற்கண்டேன் கொக்கினிதழ்கண்டேன் கொன்றைகண்டேன், வாடற்றலையொன்றுகையிற்கண்டேன் வாய்மூரடிகளைநான் கண்டவாறே. (க)

பாலின்மொழியாளோர்பாகங்கண்டேன் பதினெண்கணமும்பயிலக்கண்டே, னீலநிறமுண்டகண்டங்கண்டே னெற்றிநுதல்கண்டேன் பெற்றங்கண்டேன், காலைக்கதிர்செய்மதியங்கண்டேன் கரந்தை திருமுடிமேற்றோன்றக்கண்டேன், மாலைச்சடையுமுடியுங்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (உ)

மண்ணைத்திகழநடமதாடும் வரைசிலம்பார்க்கின்றபாதங்கண்டேன், விண்ணைத்திகழுமுடியுங்கண்டேன் வேடம்பலவாஞ்சரிதைகண்டேன், நண்ணிப்பிரியாமழுவுங்கண்டே னாலுமறையங்கமோதக்கண்டேன், வண்ணப்பொலிந்திலங்குகோலங்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௩)

விளைத்தபெரும்பத்திகூரநின்று மெய்யடியார்தம்மை விரும்பக்கண்டேன், இளைக்குங்கதநாகமேனிகண்டே னெண்பிறைக்கலந்திகழ்ந்து தோன்றக்கண்டேன், திளைக்குந்திருமார்பி னீறுகண்டேன் சேணுரி மதின்மூன்றும்பொன்றவன்று, வளைத்தவரிசிலையுங்கையிற்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௪)

கான்மறையும்போதகத்தினுரிவைகண்டேன் காலிற்கழல்கண்டேன் கரியின்றோல்கொண், டூன்மறையப்போர்த்தவடிவுங்கண்டே னுள்கமனம்வைத்த வுணர்வுங்கண்டே, னான்மறையானோடுநெடியமாலு நண்ணிவரக்கண்டேன்றிண்ணமாக, மான்மறிதங்கையின்மருவக்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௫)

அடியார்சிலம்பொலிகளார்ப்பக்கண்டே னவ்வவர்க்கேயீந்தகருணைகண்டேன், முடியார்சடைமேலரவமூழ்கி மூரிப்பிறைபோய்மறையக்கண்டேன், கொடியாரதன்மேலிடவங்கண்டேன் கோவணமுங்கீளுங்குலாவக்கண்டேன், வடியார்மூவிலைவேல்கையிற்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௬)

குழையார்திருத்தோடு காதிற்கண்டேன் கொக்கரையுஞ் சச்சரியுங்கொள்கைகண்டே, னிழையார்புரிநூல்வலத்தேகண்டே னேழிசையாழ்வீணைமுரலக்கண்டேன், றழையார்சடைகண்டேன் றன்மைகண்டேன் றக்கையொடுதாளங்கறங்கக்கண்டேன், மழையார்திருமிடறுமற்றுங்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௭)

பொருந்தாதசெய்கைபொலியக்கண்டேன் போற்றிசைத்துவிண்ணோர் புகழக்கண்டேன், பரிந்தார்க்கருளும்பரிசுங்கண்டேன் பாராகிப்புனலாகி நிற்கைகண்டேன், விருந்தாய்ப்பரந்ததொகுதிகண்டேன் மெல்லியலும்விநாயகனுந் தோன்றக்கண்டேன், மருந்தாயப்பிணிதீர்க்கு மாறுகண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௮)

மெய்யன்பரானார்க்கருளுங்கண்டேன், வேடுவனாய்நின்றநிலையுங்கண்டேன், கையம்பரனெரித்தகாட்சிகண்டேன் கங்கணமுமங்கைக்க



னலுங்கண்டே, னையம்பலவூர்திரியக்கண்டே னற்றவன்றன்வேள்வியழித்துகந்து, வையம்பரவவிருத்தல்கண்டேன் வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௯)

கலங்கவிருவர்க்கழலாய்நீண்ட காரணமுங்கண்டேன்கருவாய்நின்று, பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன் பாடலொலியெலாங்கூடக்கண்டே, னிலங்கைத்தலைவன்சிரங்கள்பத்து மிறுத்தவனுக்கீந்தபெருமைகண்டேன், வலங்கைத்தலத்துளனலுங்கண்டேன் வாய்மூரடிகளை நான்கண்டவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருஆவடுதுறை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லா மலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப் படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்த கழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலு மாவடுதுறையனாரே. (௧)

மடந்தைபாகத்தர்போலு மான்மறிக்கையர்போலுங்
குடந்தையிற்குழகர்போலுங் கொல்புலித்தோலர்போலுங்
கடைந்தநஞ்சுண்பர்போலுங் காலனைக்காய்வர்போலும்
அடைந்தவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (௨)

உற்றநோய்தீர்ப்பர்போலு முறுதுணையாவர்போலுஞ்
செற்றவர்புரங்கண்மூன்றுந் தீயெழச்செறுவர்போலுங்
கற்றவர்பரவியேத்திக் கலந்துலந்தலந்துபாடும்
அற்றவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (௩)

மழுவமர்கையர்போலு மாதவள்பாகர்போலும்
எழுநுனைவேலர்போலு மென்புகொண்டணிவர்போலுந்
தொழுதெழுந்தாடிப்பாடித் தோத்திரம்பலவுஞ்சொல்லி
யழுமவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே. (௪)

பொடியணிமெய்யர்போலும் பொங்குவெண்ணூலர்போலுங்
கடியதோர்விடையர்போலுங் காமனைக்காய்வர்போலும்
வெடிபடுதலையர்போலும் வேட்கையாற்பரவுந்தொண்டர்
அடிமையையளப்பர்போலு மாவடுதுறையனாரே. (௫)

வக்கரனுயிரைவவ்வக் கண்மலர்கொண்டுபோற்றச்
சக்கரங்கொடுப்பர்போலுந் தானவர்தலைவர்போலுந்
துக்கமாமூடர்தம்மைத் துயரிலேவீழ்ப்பர்போலும்
அக்கரையார்ப்பர்போலு மாவடுதுறையனாரே. (௬)

விடைதருகொடியர்போலும் வெண்புரிநூலர்போலும்
படைதருமழுவர்போலும் பாய்புலித்தோலர்போலும்
உடைதருகீளர்போலு முலகமுமாவர்போலும்
அடைபவரிடர்கடிக்கு மாவடுதுறையனாரே. (௭)

முந்திவானோர்கள்வந்து முறைமையால்வணங்கியேத்த
நந்திமாகாளரென்பார் நடுவுடையார்கணிற்பச்
சிந்தியாதேயொழிந்தார் திரிபுரமெரிப்பர்போலும்
அந்திவான்மதியஞ்சூடு மாவடுதுறையனாரே. (௮)

பானமமேனமாகிப் பாரிடந்திட்டமாலுந்
தேனமர்தேறுமல்லித் திசைமுகமுடையகோவுந்
தீனரைத்தியக்கறுத்த திருவுருவுடையர்போலும்
ஆனையேற்றர்போலு மாவடுதுறையனாரே. (௯)

பார்த்தனுக்கருள்வர்போலும் படர்சடைமுடியர்போலும்
ஏத்துவாரிடர்கடா வின்பங்கள்கொடுப்பர்போலுங்
கூத்தராய்ப்பாடியாடிக் கொடுவலியரக்கன்றன்னை
யார்த்தவாயலறுவிப்பா ராவடுதுறையனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மாசிலாமணியீசுவரர் - தேவியார்-ஒப்பிலாமுலையம்மை.

---

## இரண்டாந்திருமுறை.

### திருஆறைவடதளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ் சமண்கையருள்
நிலையினால்மறைத் தால்மறைக்கொண்ணுமே
அலையினார்பொழி லாறைவடதளி
நிலையினானடியே நினைந்துய்ம்மினே. (௧)

மூக்கினால்முரன் றோதியக்குண்டிகை
தூக்கினார்குலந் தூரறுத்தேதனக்



காக்கினானணி யாறைவடதளி
நோக்கினார்க்கில்லை யாலருநோய்களே. (௨)

குண்டரைக்குண மில்லாரைக்கூறையில்
மிண்டரைத்துரந்த விமலன்றனை
யண்டரைப்பழை யாறைவடதளிக்
கண்டரைத்தொழு துய்ந்தனகைகளே. (௩)

முடையரைத்தலை முண்டிக்குமொட்டரைக்
கடையரைக்கடிந் தார்கனல்வெண்மழுப்
படையரைப்பழை யாறைவடதளி
யுடையரைக்குளிர்ந் துள்குமென்னுள்ளமே. (௪)

ஒள்ளரிக்கணார் முன்° அமணின்றுணுங்
கள்ளரைக்கடிந்த * கருப்பூறலை
யள்ளலைப்புன லாறைவடதளி
வள்ளலைப்புகழத் துயர்வாடுமே. (௫)

தீதினைக்கெட நின்றமணேயனுஞ்
சாதியைக்கெடு மாசெய்தசங்கரன்
ஆதியைப்பழை யாறைவடதளிச்
சோதியைத்தொழு வார்துயர்தீருமே. (௬)

திரட்டிரைக்கவ ளந்தினிக்குஞ்சமண்
பிரட்டரைப் பிரித்தபெருமான்றனை
யருட்டிறத்தணி யாறைவடதளித்
தெருட்டரைத்தொழத் தீவினைதீருமே. (௭)

ஒதினத்தெழுத் தஞ்சுணராச்சமண்
† வேதினைப்படுத் தானைவெங்கூற்றுதை
பாதனைப்பழை யாறைவடதளி
நாதனைத்தொழ நம்வினைநாசமே. (௮)

வாயிருந்தமிழே படித்தாளுறு
ஆயிரஞ்சமணும் மழிவாக்கினான்
பாயிரும்புன லாறைவடதளி
மேயவன்னென வல்வினைவீடுமே. (௯)

---

° அமணின்றுணும்-என்பது—நிருவாணமாகநின்று உண்ணுதல்.
* கருப்புறல்-என்பது—கரும்புரம். கருப்பு-வலித்தல்விகாரம்.
† வேது-என்பது—வெப்பம்.

செருத்தனைச்செயுஞ் சேனரக்கனுடல்
எருத்திறவிர லாலிறையூன்றிய
அருத்தனைப்பழை யாறைவடதளித்
திருத்தனைத்தொழு வார்வினைதேயுமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-சோமேசுவரர்-தேவியார்-சோமகலாநாயகியம்மை.

---

## முதற்றிருமுறை.

### திருவண்ணாமலை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவி யுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட் சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியணாமலையுளானே
நீதியால்நின்னையல்லால் நினையுமாநினைவிலேனே. (௧)

பண்டனைவென்றவின்சொற் பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக் கடவுளேகமலபாதா
அண்டனேயமரர்கோவே யணியணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற் சொல்லுமாசொல்விலேனே. (௨)

உருவமுமுயிருமாகி யோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்மிக்க
அருவிபொன்சொரியுமண்ணா மலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான் மற்றொருமாடிலேனே. (௩)

பைம்பொனேபவளக்குன்றே பரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதா சீர்தருமணியேமிக்க
அம்பொனேகொழித்துவீழு மணியணாமலையுளானே
என்பொனேயுன்னையல்லா லேதுநானினைவிலேனே. (௪)

பிறையணிமுடியினானே பிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டார் கொன்றையாய்வாமதேவா
அறைகழலமரரேத்து மணியணாமலையுளானே
யிறைவனேயுன்னையல்லா லியாதுநானினைவிலேனே. (௫)

புரிசடைமுடியின்மேலோர் பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக் கருதியகாலகாலா



அரிகுலமலிந்தவண்ணா மலையுளாயலரின்மிக்க
வரியிருவண்டுபண்செய் பாதநான்மறப்பிலேனே. (௬)

இரவியுமதியும்விண்ணு மிருநிலம்புனலுங்காற்று
முரகமார்பவனமெட்டுந் திசையொளியுருவமானா
யரவுமிழ்மணிகொள்சோதி யணியணாமலையுளானே
பரவுநின்பாதமல்லாற் பரமநான்பற்றிலேனே. (௭)

பார்த்தனுக்கன்றுநல்கிப் பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கை நெடுமுடிநிலாவவைத்தா
யார்த்துவந்தீண்டுகொண்ட லணியணாமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத் திறமலால்திறமிலேனே. (௮)

பாலுநெய்முதலாமிக்க பசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக் காண்கிலாவகையுணின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூக மணியணாமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன் மலரடிமறப்பிலேனே. (௯)

இரக்கமொன்றியாதுமில்லாக் காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்க வொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணா மலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித் திருவடிமறப்பிலேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - அருணாசலேசுவரர் - தேவியார்-உண்ணாமுலையம்மை.

---

### திருவேகம்பம்-பண்-சாதாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க் கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானை விடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழ வங்கையிலனலேந்தி
யிரவாடும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (௧)

தேனோக்குங்கிளிமழலை யுமைகேள்வன்செழும்பவளந்
தானோக்குந்திருமேனி தழலுருவாஞ்சங்கரனை
வானோக்கும்வளர்மதிசேர் சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (௨)

கைப்போதுமலர்தூவிக் காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத் தொழநின்றமுதல்வனை

யப்போதுமலர் தூவி யைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமுனியானை யென்மனத்தேவைத்தேனே. (௩)
அண்டமாயாதியா யருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர் பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர் தூவிச் சொன்மாலைபுனைகின்ற
* இண்டைசேர்சடையானை யென்மனத்தேவைத்தேனே. (௪)
ஆறேறுசடையானை யாயிரம்பேரம்மானைப்
பாறேறுபடுதலையிற் பலிகொள்ளும்பரம்பரனை
நீறேறுதிருமேனி நின்மலனைநெடுந்தூவி
யேறேறும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே. (௫)
தேசனைத்தேசங்கள் தொழநின்றதிருமாலாற்
பூசனைப்பூசனைக ளுகப்பானைப்பூவின்கண்
வாசனைமலைநிலநீர் தீவளியாகாசமாம்
ஈசனையெம்மானை யென்மனத்தேவைத்தேனே. (௬)
நல்லானைநல்லான நான்மறையோடாறங்கம்
வல்லானைவல்லார்கள் மனத்துறையுமைந்தனைச்
சொல்லானைச்சொல்லார்ந்த பொருளானைத்துகளேது
மில்லானையெம்மானை யென்மனத்தேவைத்தேனே. (௭)
விரித்தானைநால்வர்க்கு வெவ்வேறுவேதங்கள்
புரித்தானைப்பதஞ்சந்திப் பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக்கங்கைநீர் தாழ்சடைமேல்மதின்மூன்று
மெரித்தானையெம்மானை யெம்மனத்தேவைத்தேனே. (௮)
ஆகம்பத்தரவணையா னயனறிதற்கரியானைப்
பாகம்பெண்ணுண்பாக மாய்நின்றபசுபதியை
மாகம்பமறையோது மிறையானைமதிட்கச்சி
யேகம்பமேயானை யென்மனத்தேவைத்தேனே. (௯)
அடுத்தானையுரித்தானை யருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையே சிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச் சினமல்குகயி[illegible]ய
மெடுத்தானைத்தடுத்தானை யென்மனத்தேவைத்தேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டி[illegible]ள்ளது.
சுவாமிபெயர்-ஏகாம்பரநாதர்-தே[illegible]யார்-காமாக்ஷியம்மை.

* இண்டை-சருக்குமாலை.



## மூன்றாந்திருமுறை.

### திருவேகம்பம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றவன்காண்கூற்றவனைக் குமைத்தகோன்காண் குவலயன்காண்குவலயத்தி னீரானான்காண்; காற்றவன்காண்கனலவன்காண் கலிக்குமின்காண் கனபவளச்செம்மேனி கலந்தவெள்ளை, நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்கா ணிரையார்ந்தபுனற்கங்கை நிமிர்சடைமே, லேற்றவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௧)

பரந்தவன்காண்பல்லுயிர்க ளாகியெங்கும் பணிந்தெழுவார்பாவமும்வினையும்போகத், துரந்தவன்காண்டூமலரங் கண்ணியான்காண் டோற்றநிலையிறுதிப் பொருளாய்வந்த, மருந்தவன்காண்வையங்கள் பொறைதீர்ப்பான்காண் மலர்தூவிநினைந்தெழுவா ருள்ளநீங்கா, திருந்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௨)

நீற்றவன்காணீராகித் தீயானான்கா ணிறைமழுவுந்தமருகமு மெரியுங்கையிற், றேற்றவன்காண் டோற்றக்கேடில்லாதான்காண் டுணையிலிகாண்டுணையென்று தொழுவாருள்ளம், போற்றவன்காண்புகழ்கடனைப் படைத்தான்றான்காண் பொறியரவும்விரிசடைமேற் புனலுங்கங்கை, யேற்றவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௩)

தாயவன்காணுலகிற்குத் தன்னொப்பில்லாத் தத்துவன்காண்மலைமங்கை பங்காவென்பார், வாயவன்காண்வரும்பிறவி நோய்தீர்ப்பான்காண் வானவர்க்குந்தானவர்க்கு மண்ணுளோர்க்குஞ், சேயவன்காணினைவார்க்குச்சித்தமாரத் திருவடியேயுள்கிநினைந் தெழுவாருள்ள, மேயவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௪)

அடுத்தானையுரித்தான்காண். (௫)

அழித்தவன்காணெயின்மூன்று மயில்வாயம்பா லையாறுமிடைமருது மாள்வான்றான்காண், பழித்தவன்காணடையாரை யடைவார்தங்கள் பற்றவன்காண்புற்றரவ நாணினான்காண், சுழித்தவன்காண்முடிக்கங்கை யடியேபோற்றுந் தூயமாமுனிவர்க்காய் பார்மேனிற்க, விழித்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௬)

அசைந்தவன்காணடமாடிப் பாடல்பேணி யழல்வண்ணத்தில்லடியுமுடியுந்தேடப், பசைந்தவன்காண்பேய்க்கணங்கள் பரவியேத்தும் பான்மையன்காண்பரவிநினைந் தெழுவார்தம்பாற், கசிந்தவன்காண் கரியினுரிபோர்த்தான்றான்காண் கடலில்விடமுண்டமரர்க் கமுதமீய, விசைந்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (எ)

முடித்தவன்காண்வன்கூற்றைச் சிற்றத்தியால் வலியார்தம்புரமூன்றும் வேவச்சாபம், பிடித்தவன்காண்பிஞ்ஞகனும் வேடத்தான்காண் பிணையல்வெறிகமழ்கொன்றை யரவுசென்னி, முடித்தவன்காண்மூவிலைநல் வேலினான்காண் முழங்கியுருமெனத்தோன்று மழையாய்மின்னி, யிடித்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (அ)

வருந்தான்காண்மனமுருகி நினையாதார்க்கு வஞ்சன்காண்அஞ்செழுத்து நினைவார்க்கென்று, மருந்தவன்காண் வான்பிணிகடீரும்வண்ணம் வானகமுமண்ணகமு மற்றுமாகிப், பரந்தவன்காண்படர்சடையெட் டுடையான்றான்காண் பங்கயத்தோன்றன்சிரத்தை யேந்தியூரூ, ரிரந்தவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௯)

வெம்மானவுழுவையத ளுரிபோர்த்தான்காண் வேதத்தின்பொருளான்கா ணென்றியம்பி, விம்மாநின்றழுவார்கட் களிப்பான்றான்காண் விடையேறித்திரிவான்கா ணடஞ்செய்பூதத், தம்மான்காணகலிடங்க டாங்கினான்கா ணற்புதன்காண்சொற்பதமுங் கடந்துநின்ற, எம்மான்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௰)

அறுத்தான்காணயன்சிரத்தை யமரர்வேண்ட வாழ்கடலினஞ்சுண்டங் கணிநீர்க்கங்கை, செறுத்தான்காண்டேவர்க்குந் தேவன்றான்காண் டிசையனைத்துந்தொழுதேத்தக் கலைமான்கையிற், பொறுத்தான்காண் புகலிடத்தைநலியவந்து பொருகயிலையெடுத்தவன்றன் முடிதோளலஞ், சிறுத்தான்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---



## திருவேகம்பம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உரித்தவன்காணுரக்களிற்றை யுமையாளொல்க வோங்காரத்தொருவன்காணுணர்மெய்ஞ்ஞானம், விரித்தவன்காண் விரித்தநால்வேதத்தான்காண் வியனுலகிற்பல்லுயிரைவிதியினாலே, தெரித்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றியெங்குந்திரண்டவன்காண் டிரிபுரத்தைவேவவில்லா, லெரித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௧)

நேசன்காணேசர்க்கு நேசந்தன்பா லில்லாதநெஞ்சத்து நீசர்தம்மைக், கூசன்காண்கூசாதார் நெஞ்சந்தஞ்சே குடிகொண்டகுழகன்கா ணழகார்கொன்றை, வாசன்காண்மலைமங்கை பங்கன்றான்கா ணவானவர்களெப்பொழுதும்வணங்கியேத்து, மீசன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௨)

பொறையவன்காண்பூமியேழ் தாங்கியோங்கு புண்ணியன்காணண்ணியபுண்டரீகப்போதின், மறையவன்காண்மறையவனைப் பயந்தோன்றான்கா ண்வார்சடைமாசுணமணிந்துவளரும்பிள்ளைப், பிறையவன்காண்பிறைதிகழு மெயிற்றுப்பேழ்வாய்ப் பேயோடங்கிக்காட் டிலெல்லியாடு, மிறையவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௩)

பாரவன்காண்விசும்பவன்காண் பவ்வந்தான்காண் பனிவரைகளிரவினொடுபகலாய்நின்ற, சீரவன்காண்டிசையவன்காண் டிசைகளெட்டுஞ்செறிந்தவன்காண் சிறந்தடியார்சிந்தைசெய்யும், பேரவன்காண் பேராயிரங்களேத்தும் பெரியவன்காணரியவன்காண் பெற்றமூர்ந்த, ஏரவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௪)

பெருந்தவத்தெம்பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண் பேதையேன் வாதையுறுபிணியைத்தீர்க்கு, மருந்தவன்காண்மந்திரங்களாயினான்கா ண்வானவர்கடாம்வணங்குமாதேவன்கா, ணருந்தவத்தாளாயிழையா ளுமையாள்பாக மமர்ந்தவன்காணமரர்கடா மர்ச்சித்தேத்த, விருந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ணத்தானே. (௫)

ஆய்ந்தவன்காணருமறையோடங்கமாறு மணிந்தவன்காணுடர
வோடென்புமாமை, காய்ந்தவன்காண்கண்ணழலாற்காமனாகங் கன
ன்றெழுந்த காலனுடல்பொடியாய்வீழப், பாய்ந்தவன்காண்பண்டுப
ல சருகாற்பந்தர் பயின்றநூற்சிலந்திக்குப்பாராள்செல்வ, மீந்தவன்
காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெண்ண
த்தானே. (௬)

உமையவளையொருபாகஞ்சேர்த்தினான்கா ணுகந்தொளிநீர்க்க
ங்கைசடை யொழுக்கினான்கா, ணிமையவடகயிலைச்செல்வன்றான்கா
ணில்பலிக்குச்சென்றுழலு நல்கூர்ந்தான்காண், சமையமவையாறினு
க்குந்தலைவன்றான்காண் டத்துவன்காணுத்தமன்காண் டானேயாய, வி
மையவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென்
னெண்ணத்தானே. (௭)

தொண்டுபடுதொண்டர்துயர் தீர்ப்பான்றான்காண் டூமலர்ச்சே
வடியிணையென் சோதியான்கா, ணுண்டுபடுவிடங்கண்டத்தொடுக்கினா
ன்கா ணொலிகடலிலமுதமரர்க் குதவினான்காண், வண்டுபடுமலர்க்கொ
ன்றை மாலையான்காண் வாண்மதியாய்நாண்மீனுமாயினான்கா, ணெ
ண்டிசையுமெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெ
ண்ணத்தானே. (௮)

முந்தைகாண்மூவரினுமுதலானான்காண் மூவிலைவேன்மூர்த்திகா
ண் முருகவேட்குத், தந்தைகாண்டண்கடமாமுகத்தினார்க்குத் தாதை
காண்டாழ்ந்தடியே வணங்குவார்க்குச், சிந்தைகாண்சிந்தாத சித்தத்
தார்க்குச் சிவனவன்காண்செங்கண்மால் விடையொன்றேறு, மெந்
தைகாணெழிலாரும்பொழிலார்கச்சி யேகம்பன்காணவனென் னெ
ண்ணத்தானே. (௯)

பொன்னிசையும்புரிசடையெம் புனிதன்றான்காண் பூதகணநா
தன்காண் புலித்தோலாடை, தன்னிசையவைத்தவெழிலரவினான்காண்
சங்கவெண்குழைக்காதிற் சதிரன்றான்காண், மின்னிசையும்வெள்ளெ
யிற்றோன்வெகுண்டுவெற்பை யெடுக்கவடியடர்ப்பமீண் டவன்றன்
வாயி, லின்னிசைகேட்டிலங்கொளிவாளீந்தோன்கச்சி யேகம்பன்கா
ணவனென் னெண்ணத்தானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---



## திருவொற்றியூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்கு மதமத்தஞ்செஞ்சடை
மேன் மதியஞ்சூடித், திண்டோள்களாயிரமும்வீசிநின்று திசைசேர
நடமாடிச் சிவலோகனா, ருண்டார்நஞ்சுலகுக்கோ ருறுதிவேண்டி
யொற்றியூர்மேயவொளிவண்ணனார், கண்டேனான்கனவகத்திற்கண்டே
ற்கென்றன் கடும்பிணியுஞ்சுடுந்தொழிலுங் கைவிட்டவே. (௧)

ஆகத்தோர்பாம்பசைத்துவெள்ளேறேறி யணிகங்கைசெஞ்சடை
மேலார்க்கச்சூடிப், பாகத்தோர்பெண்ணுடையாரானுமாவர் பசுவே
றியுழிதருமெம்பரமயோகி, காமத்தாலங்கணையான்றன்னைவீழக் கன
லாவெரிவிழித்த கண்மூன்றினா, ரோமத்தானான்மறைகளோதலோவா
வொளிதிகழுமொற்றியூ ருறைகின்றாரே. (௨)

வெள்ளத்தடஞ்சடைமேல்விரும்பிவைத்தீர் வெண்மதியும்பாம்
பு முடனேவைத்தீர், கள்ளத்தைமனத்தகத்தேகரந்துவைத்தீர் கண்டா
ர்க்குப்பொல்லாது கண்டரல்லே, கொள்ளத்தானிசைபாடிப் பலியுங்
கொள்ளீர் கோளரவுங்குளிர்மதியுங் கொடியுங்காட்டி, யுள்ளத்தைநீர்
கொண்டீரோதலோவா வொளிதிகழுமொற்றியூ ருடையகோவே. (௩)

நரையார்ந்தவிடையேறிநீறுபூசி நாகங்கச்சரைக்கார்த்தோர் தலை
கையேந்தி, யுரையாவந்தில்புகுந்துபலிதான்வேண்ட வெம்மடிகளும்
மூர்தா னேதோவென்ன, விரையாதேகேட்டியேல் வேற்கணல்லாய்
விடுங்கலங்கணெடுங்கடலு ணின்றுதோன்றுந், திரைமோதக்கரையே
றிச்சங்கமூருந் திருவொற்றியூரென்றார் தீயவாறே. (௪)

மத்தமாகளியானையுரிவைபோர்த்து வானகத்தார்தானகத்தா ரா
கிநின்று, பித்தர்தாம்போலங்கோர்பெருமைபேசிப் பேதையரைய
ச்சுறுத்திப் பெயரக்கண்டு, பத்தர்கடாம்பலருடனேகூடிப்பாடிப் ப
யின்றிருக்குமூரேதோ பணியீரென்ன, வொத்தமைந்தவுத்திரநாடீர்த்
தமாக வொளிதிகழுமொற்றியூ ரென்கின்றாரே. (௫)

கடியவிடையேறிக்காளகண்டர் கலையோடுமழுவாளோர் கையி
லேந்தி, யிடியபலிகொள்ளார்போவாரல்ல ரெல்லாந்தானிவ்வடிகள்
யாரென்பாரோ, வடிவுடையமங்கையுந்தாமுமெல்லாம் வருவாரையெ
திர்கண்டோ மயிலாப்புள்ளே, செடிபடுவெண்டலையொன்றேந்திவந்
து திருவொற்றியூர்புக்கார் தீயவாறே. (௬)

வல்லராய்வானவர்களெல்லாங்கூடி வணங்குவார்வாழ்த்துவார் வந்துநிற்பர், ரொல்லையெம்பெருமானைக்காணோமென்ன வெவ்வாற்று லெவ்வகையாற் காணமாட்டார், நல்லார்களானமறையோர்கூடிநேடி நாமிருக்குமூர்பணியீ ரடிகேளென்ன, வொல்லைத்தான்றிரையேறி யோதமீளு மொளிதிகழுமொற்றியூ ரெனகின்றாரே. (௭)

நிலைப்பாடேநான்கண்டதேடிச்சொல்லாய் நெருநலைநற்பகலிங்கோ ரடிகள்வந்து, கலைப்பாடுங்கண்மலருங்கலக்கநோக்கிக் கலந்துபலியிடுவேனெங்குங்காணேன், சலப்பாடேயினியொருநாட் காண்பேனாகிற் றன்னாகத்தென்னாக மொடுங்கும்வண்ணம், முலைப்பாடேபடத்தழுவிப்போகலொட்டே னொற்றியூருறைந்திங்கே திரிவானையே. (௮)

மண்ணல்லைவிண்ணல்லைவலயமல்லை மலையல்லைகடலல்லை வாயுவல்லை, யெண்ணல்லையெழுத்தல்லையெரியுமல்லை யிரவல்லைபகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லையாணல்லைபேடுமல்லை பிறிதல்லையானாயும் பெரியாய்நீயே, யுண்ணல்லைநல்லார்க்குத்தீயையல்லை யுணர்வரியவொற்றியூருடையகோவே. (௯)

மருவுற்றமலர்க்குழலிமடவாளஞ்ச மலைதுளங்கத்திசைநடுங்கச் செறுத்துநோக்கிச், செருவுற்றவாளரக்கன்வலிதான்மாளத் திருவடியின்விரலொன்றா லலறவூன்றி, யுருவொற்றியங்கிருவ ரோடிக்காணவோங்கினவவ்வொள்ளழலா ரிங்கேவந்து, திருவொற்றியூர்நம்மூரென்றுபோனார் செறிவளைகளொன்றொன்றாச் சென்றவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருவொற்றியூர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரி கொள்கின்றஞான்று செருவெண்கொம்பொன்
றிற்றுக்கிடந்தது போலுமிளம்பிறை பாம்பதனைச்
சுற்றிக்கிடந்தது கிம்புரிபோலச் சுடரிமைக்கு
நெற்றிக்கண்மற்றதன் முத்தொக்குமாலொற்றி யூரனுக்கே. (௧)

சொல்லக்கருதிய தொன்றுண்டுகேட்கிற் றொண்டாயடைந்தார்
அல்லற்படக்கண்டு பின்னென்கொடுத்தி யலைகொண்டுமுந்நீர்
மல்லற்றிரைச்சங்க நித்திலங்கொண்டு வம்பக்கரைக்கே
யொல்லைத்திரைகொணர்ந் தெற்றொற்றியூருறை யுத்தமனே. (௨)

பரவைவருதிரை நீர்க்கங்கைபாய்ந்துக்க பல்சடைமே
லரவமணிதரு கொன்றையிளந்திங்கள் சூடியதோர்
குரவநறுமலர் கோங்கமணிந்து குலாயசென்னி
யுரவுதிரைகொணர்ந் தெற்றொற்றியூருறை யுத்தமனே. (௩)

தானகங்காடரங் காகவுடையது தன்னடைந்தா
ரூனகநாறு முடைதலையிற்பலி கொள்வதுந்தான்
தேனகநாறுந் திருவொற்றியூருறை வாரவர்தாந்
தானகமேவந்து போனகம்வேண்டி யுழிதர்வரோ. (௪)

வேலைக்கடனஞ்ச முண்டுவெள்ளேற்றொடும் வீற்றிருந்த
மாலைச்சடையார்க் குறைவிடமாவது வாரிகுன்றா
வாலைக்கரும்பொடு செந்நெற்கழனி யருகணைந்த
சோலைத்திருவொற்றி யூரையெப்போதுந் தொழுமின்களே. (௫)

புற்றினில்வாழு மரவுக்குந்திங்கட்குங் கங்கையென்னுஞ்
சிற்றிடையாட்குஞ் செறிதருகண்ணிக்குஞ் சேர்விடமாய்ப்
பெற்றுடையான்பெருப் பேச்சுடையான்பிரி யாதெனையாள்
விற்றுடையானொற்றி யூருடையான்றன் விரிசடையே. (௬)

இன்றரைக்கண்ணுடை யாரெங்கு மில்லை யிமயமென்னுங்
குன்றரைக்கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக்கண்ணுங் கொடுத்துமையாளையும் பாகம்வைத்த
வொன்றரைக்கண்ணன்கண் டீரொற்றியூருறை யுத்தமனே. (௭)

சுற்றிவண்டியாழ்செயுஞ் சோலையுங்காவுந் துதைந்திலங்கு
பெற்றிகண்டான்மற் றியாவருங்கொள்வர் பிறரிடைநீ
யொற்றிகொண்டாயொற்றி யூரையுங்கைவிட் டுறுமென்றெண்ணி
விற்றிகண்டாய்மற் றிதுவொப்பதில்லிடம் வேதியனே. (௮)

சுற்றிக்கிடந்தொற்றி யூரனென்சிந்தை பிரிவறியா
னொற்றித்திரிதந்து நீயென்னசெய்தி யுலகமெல்லாம்
பற்றித்திரிந்தது பல்லொடுநாமென்று கண்குழித்துக்
கெற்றித்திருப்பதல்லா லென்னசெய்யுமித் தீவினையே. (௯)

அங்கட்கடுக்கைக்கு முல்லைப்புறவ முறுவல்செய்யும்
பைங்கட்டலைக்குச் சுடலைக்களரிப் பருமணிசேர்
கங்கைக்குவேலை யரவுக்குப்புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்குவானந் திருவொற்றியூரர் திருமுடியே. (௧௦)

தருக்கினவாளரக் கன்முடிபத்திறப் பாதத்தன்று
லொருக்கினவாறடி யேனைப்பிறப்பறுத் தாளவல்லா
னெருக்கினவானவர் தானவர்கூடிக் கடைந்தநஞ்சைப்
பருக்கினவாறென்செய்கே னொற்றியூருறை பண்டங்கனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாந் திருமுறை.

### திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூரு மொளிமதிபாம்பினை
யொற்றியூருமப் பாம்புமதனையே
யொற்றியூர வொருசடைவைத்தவ
னொற்றியூர்தொழ நம்வினையோயுமே. (௧)

வாட்டமென்றுணைக் கும்மலையான்மக
ளீட்டவேயிரு ளாடியிடுபிணைக்
காட்டிலோரி கடிக்கவெடுத்ததோ
ரோட்டைவெண்டலைக் கையொற்றியூரரே. (௨)

கூற்றுத்தண்டத்தை யஞ்சிக்குறிக்கொண்மி
னூற்றுத்தண்டத் தடக்குமாரனடி
நீற்றுத்தண்டத்த ராய்நினைவார்க்கெலா
மூற்றுத்தண்டொப்பர் போலொற்றியூரரே. (௩)

சுற்றும்பேய்சுழ லக்குகாட்டெரி
பற்றியாடுவர் பாய்புலித்தோலினர்
மற்றையூர்களெல்லாம் பலிதேர்ந்துபோ
யொற்றியூர்புக் குறையுமொருவரே. (௪)

புற்றிலாடர வாட்டியுமையொடு
பெற்றமேறுகந் தேறும்பெருமையான்
மற்றையாரொடு வானவருந்தொழ
வொற்றியூருறை வானோர்கபாலியே. (௫)

போதுதாழ்ந்து புதுமலர்கொண்டுநீர்
மாதுதாழ்சடை வைத்தமணாளனை
ரேதுவேதிய னூர்திருவொற்றியூர்
பாதமேத்தப் பறையுநம்பாவமே. (௬)



பலவுமன்னங்கள் பன்மலர்மேற்றுஞ்சுங்
கலவமஞ்ஞைகள் காரெனவெள்குறு
முலவுபைம்பொழில் சூழ்திருவொற்றியூர்
நிலவினானடி யேயடைநெஞ்சமே. (௭)

ஒன்றுபோலு முகந்தவரேற்று
ஒன்றுபோலு முகைத்துக்களைந்தது
ஒன்றுபோலொளி மாமதிசூடிற்று
ஒன்றுபோலுகந் தாரொற்றியூரரே. (௮)

படைகொள்பூதத்தர் வேதத்தர்கீதத்தர்
சடைகொள்வெள்ளத்தர் சாந்தவெண்ணீற்றின
ருடையுந்தோலுகந் தானுறையொற்றியூ
ரடையுமுள்ளத் தவர்வினையல்குமே. (௯)

வரையினாருயர் தோளுடைமன்னனை
வரையினால்வலி செற்றவர்வாழ்விடந்
திரையினார்புடை சூழ்திருவொற்றியூ
ருறையினாற்பொலிந் தாருயர்ந்தார்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருவொற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையுள்வைத்த வேதகீதன்றன்பாத
மெள்ளத்தானடையவேண்டின் மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்க் காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகு மொற்றியூருடையகோவே. (௧)

வசிப்பெனும்வாழ்க்கைவேண்டா வானவரிறைவனின்று
புசிப்பதோர்பொன்னலாக்கை யதனொடும்புணர்வுவேண்டில்
சிறப்பெனுமருந்தவத்தா லரனடிவிடமதாகி
புசிற்பெனுமுணர்வுமுள்ளா ரொற்றியூருடையகோவே. (௨)

தானத்தைச்செய்துவாழ்வான் சலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டில் வம்மின்கள்வல்லீராகின்
ஞானத்தைவிளக்கையேற்றி நாடியுள்விரவவல்லார்க்
கூனத்தையொழிப்பர்போலு மொற்றியூருடையகோவே. (௩)

காமத்துளழுந்திநின்று கண்டராலொறுப்புண்ணாதே
சாமத்துவேதமாகி நின்றதோர்சயம்புதன்னை
யேமத்துமிடையிராவு மேகாந்தமியம்புவார்க்கு
ஓமத்தினொளியதாகு மொற்றியூருடையகோவே. (௪)

சமையமேலாறுமாகித் தானொருசயம்புவாகி
யிமையவர்பரவியேத்த வினிதினங்கிருந்தவீசன்
கமையினையுடையராகிக் கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலு மொற்றியூருடையகோவே. (௫)

ஒருத்திதன்றலைச்சென்றாளைக் கருத்திட்டானுலகமேத்த
ஒருத்திக்குநல்லனாகி மறுப்படுத்தொளித்துமீண்டே
யொருத்தியைப்பாகம்வைத்தா ருணர்விலையமுன்னி
யொருத்திக்குநல்லனல்ல னொற்றியூருடையகோவே. (௬)

பிணமுடையுடலுக்காகப் பித்தராய்த்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டா போக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடைநெஞ்சினுள்ளா வினைக்குமாநினைக்கின்றார்க்கு
உணர்வினோடிருப்பர்போலு மொற்றியூருடையகோவே. (௭)

பின்னுவார்சடையான்றன்னைப் பிதற்றிலாப்பேதைமார்கள்
துன்னுவார்நரகந்தன்னுட் டொல்வினைதீரவேண்டின்
மன்னுவான்மறைகளோதி மனத்தினுள்விளக்கொன்றேற்றி
யுன்னுவாருள்ளத்துள்ளா ரொற்றியூருடையகோவே. (௮)

முள்குவார்போகம்வேண்டி முயற்றியாவிடர்கள்வந்தால்
எள்குவாரெள்கிநின்றங் கிதுவொருமாயமென்பார்
பள்குவார்பத்தராகிப் பாடியுமாடிநின்று
உள்குவாருள்ளத்துள்ளா ரொற்றியூருடையகோவே. (௯)

வெறுத்துகப்புலன்களைந்தும் வேண்டிற்றாவேண்டுநெஞ்சே
மறுத்தவர்வச்செற்றக் குரோதங்களானமாயப்
பொறுத்தகப்புட்பகத்தே ருடையானையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தா ரொற்றியூருடையகோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மாணிக்கத்தியாகர், தேவியார் - வடிவுடையம்மை.

---



## திருவொற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளா வுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக் கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப் பலபலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளா யொற்றியூருடையகோவே. (௧)

மனமெனுந்தோணிபற்றி மதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச் செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கி மறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்கா யொற்றியூருடையகோவே. (௨)

திருச்சிற்றம்பலம்.

---

# இரண்டாந்திருமுறை

## திருப்பாசூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயி லெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ்செல்வனார்
அந்திக்கோன்றனக் கேயருள்செய்தவர்
பந்திச்செஞ்சடைப் பாசூரடிகளே. (௧)

மடந்தைபாக மகிழ்ந்தமணாளனார்
தொடர்ந்தவல்வினை போக்கிடுஞ்சோதியார்
கடந்தகாலனைக் கால்கொடுபாய்ந்தவர்
படர்ந்தநாகத்தர் பாசூரடிகளே. (௨)

நாறுகொன்றையு நாகமுந்திங்களும்
ஆறுஞ்செஞ்சடை வைத்தவழகனார்
காறுகண்டத்தர் கையதோர்சூலத்தர்
பாறினோட்டினர் பாசூரடிகளே. (௩)

வெற்றியூருறை வேதியராவர்தம்
ஒற்றியேறுகந் தேறுமொருவனார்
நெற்றிக்கண்ணினர் நீளரவந்தனைப்
பற்றியாட்டுவர் பாசூரடிகளே. (௪)

மட்டவிழ்ந்த மலர்நெடுங்கண்ணிபால்
இட்டவேட்கைய ராகியிருப்பவர்
துட்டரோலறி யேனிவர்சூழ்ச்சிமை
பட்டநெற்றியர் பாசூரடிகளே. (௫)

பல்லிலோடுகை யேந்திப்பகலெலாம்
எல்லிநின்றிடு பெய்ப்பலியேற்பவர்
சொல்லிப்போய்ப்புகு மூரறியேன்சொலீர்
பல்குநீற்றினர் பாசூரடிகளே. (௬)

கட்டிவிட்ட சடையர்கபாலியர்
எட்டிநோக்கிவந் தில்புகுந்தவ்வவ
ரிட்டமாவறி யேனிவர்செய்வன
பட்டநெற்றியர் பாசூரடிகளே. (௭)

வேதமோதிவந் தில்புகுந்தாரவர்
காதில்வெண்குழை வைத்தகபாலியார்
நீதியொன்றறி யார்நிறைகொண்டனர்
பாதிவெண்பிறைப் பாசூரடிகளே. (௮)

சாம்பற்பூசுவர் தாழ்சடைகட்டுவர்
ஓம்பன்மூதெரு தேறுமொருவனார்
தேம்பல்வெண்மதி சூடுவர்தீயதோர்
பாம்புமாட்டுவர் பாசூரடிகளே. (௯)

மாலினோடு மறையவன்றானுமாய்
மேலுங்கீழு மளப்பரிதாயவ
ராலினீழ லறம்பகர்ந்தார்மிகப்
பால்வெண்ணீற்றினர் பாசூரடிகளே. (௧௰)

திரியுமூவெயில் செங்கணையொன்றினால்
எரியவெய்தன ரேனுமிலங்கைக்கோ
னெரியவூன்றியிட் டார்விரலொன்றினாற்
பரியர்நுண்ணியர் பாசூரடிகளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாசூர்நாதர் - தேவியார் - பசுபதிநாயகி.

---



## மூன்றாந்திருமுறை

### திருப்பாசூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணாகிநிலனாகிவிசும்புமாகி வேலைசூழ்ஞாலத்தார் விரும்புகின்ற, எண்ணாகியெழுத்தாகியியல்புமாகி யேழுலகுந்தொழுதேத்திக் காணநின்ற, கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக் காதலித்தங்கடியார்கள் பரவநின்ற, பண்ணாகியின்னமுதாம்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௧)

வேதமோர்நான்காயாறங்கமாகி விரிகின்றபொருட்கெல்லாம் வித்துமாகிக், கூதலாய்ப்பொழிகின்றமாரியாகிக் குலவரையங்கண்முழுதுமாய்க் கொண்டலாகிக், காதலால்வானவர்கள்போற்றியென்றங்கடிமலர்களவைதூவி யேத்தநின்ற, பாதியோர்மாதினனைப்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௨)

தடவரைகளேழுமாய்க்காற்றாய்த்தீயாய்த் தண்விசும்பாய்த்தண் விசும்பி னுச்சியாகிக், கடல்வலயஞ்சூழ்ந்ததொருஞாலமாகிக் காண்கின்றகதிரவனு மதியுமாகிக், குடமுழவச்சரிவழியேயனல்கையேந்திக் கூத்தாடவல்ல குழகனாகிப், படவரவொன்றதுவாட்டிப்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௩)

நீராருஞ்செஞ்சடைமேலரவங்கொன்றை நிறைமதியமுடன்சூடி நீதியாலே, சீராருமறையோதியுலகமுய்யச் செழுங்கடலைக்கடைந்தகட னஞ்சமுண்ட, காராருங்கண்டனைக்கச்சிமேய கண்ணுதலைக்கடலொற்றி யுறைவானைப், பாரோரும்விண்ணோரும்பரசும்பாசூர்ப் பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௪)

வேடனாய்விசயன்றன்வியப்பைக்காண்பான் விற்பிடித்துக்கொம்புடைய வேனத்தின்பின், கூடினாருமையவளுங்கோலங்கொள்ளக் கொலைப்பகழியுடன்கோத்துக் கோரப்பூசல், ஆடினார்பெருங்கூத்துக்காளிகாண வருமறையோடாறங்க மாய்ந்துகொண்டு, பாடினார்நால்வேதம்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௫)

புத்தியினாற்சிலந்தியுந்தன் வாயினூலாற் பொதுப்பந்தலதுவிழைத்துச் சருகால்மேய்ந்த, சித்தியினாலரசாண்டு சிறப்புச்செய்யச் சிவகணத்துப்புகப்பெய்தார் திறலான்மிக்க, வித்தகத்தால்வெள்ளா

னைவிள்ளாவன்பு விரவியவாகண்டதற்கு விட்டோட்டிப், பத்தர்களுக்கின்னமுதாம்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே ()

இணையொருவர்தாமல்லா வியாருமில்லா ரிடைமருதோடேகம்பத் தென்றுநீந்கா, ரணைவரியரியாவூர்க்குமாதிதேவ ரருமந்தநன்மையெலா மடியார்க்கீவர், தனைன்முழுக்குபொடியாடுஞ் செக்கர்மேனித் தத்துவனைச்சாந்தகிலி னளறுதோய்ந்த, பனைமுலையாள்பாகனையெம் பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௭)

அண்டவர்கள்கடல்கடைய வதனுட்டோன்றி யதிர்ந்தெழுந்தவாலாலம் வேலைஞால, மெண்டிசையுஞ்சுடுகின்றவாற்றைக்கண்டு மிமைப்பளவிலுண்டிருண்ட கண்டர்தொண்டர், வண்டுபடுமதுமலர்கடூவிநின்று வானவர்கடானவர்கள் வணங்கியேத்தும், பண்டரங்கவேடனையெம்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௮)

ஞாலத்தையுண்டதிருமாலுமற்றை நான்முகனுமறியாத நெறியான்கையிற், சூலத்தாலந்தகனைச்சுருளக்கோத்துத் தொல்லுலகிற்பல்லுயிரைக் கொல்லுங்கூற்றைக், காலத்தாலுதைசெய்துகாதல்செய்த வந்தணனைக்காக்கக்கொண்ட செவ்வான்வண்ணர், பாலொத்தவெண்ணீற்றர்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே. (௯)

வேந்தனெடுமுடியுடையவரக்கர்கோமான் மெல்லியலாளுமைவெருவ விரைந்திட்டோடிச், சாந்தமெனநீறணிந்தான் கயிலைவெற்பைத் தடக்கைகளாலெடுத்திடலுந் தாளாலூன்றி, யேந்துதிரடிண்டோளுந்தலைகள்பத்து மிறுத்தவன்றனிசைகேட்டு விரக்கங்கொண்ட, பாந்தளணிசடைமுடியெம்பாசூர்மேய பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாலங்காடு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமே யூழிதோறூழியுயர்ந்தார்தாமே, நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமே நீர்வளிதீயாகாசமானார்தாமே, கொன்றுங்கூற்றை யுதைத்தார்தாமே கோலப்பழனை யுடையார்தாமே, சென்றுதிக்கள்ளானார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே. (௧)



மலைமகளைப்பாகமமர்ந்தார்தாமே வானோர்வணங்கப்படுவார்தாமே, சலமகளைச்செஞ்சடைமேல்வைத்தார்தாமே சரணென்றிருப்பார்கட்கன்பர்தாமே, பலபலவும்வேடங்களானார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, சிலைமலையாமூவெயிலுமட்டார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௨)

ஆவுற்றவைந்துமுகந்தார்தாமே யளவில்பெருமையுடையார்தாமே, பூவுற்றநாற்றமாய்நின்றார்தாமே புனிதப்பொருளாகிநின்றார்தாமே, பாவுற்றபாடலுகப்பார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, தேவுற்றடிபரவநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

நாறுபூக்கொன்றைமுடியார்தாமே நான்மறையோடாறங்கஞ்சொன்னார்தாமே, மாறிலாமேனியுடையார்தாமே மாமதியஞ்செஞ்சடைமேல்வைத்தார்தாமே, பாறினார்வெண்டலையிலுண்டார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, தேறினார்சித்தத்திருந்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௪)

அல்லும்பகலுமாய்நின்றார்தாமே யந்தியுஞ்சந்தியுமானார்தாமே, சொல்லும்பொருளெலாமானார்தாமே தோத்திரமுஞ்சாத்திரமுமானார்தாமே, பல்லுரைக்கும்பாவெலாமானார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, செல்லுநெறிகாட்டவல்லார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௫)

தொண்டாய்ப்பணிவார்க்கணியார்தாமே தூநீறணியுஞ்சுவண்டர்தாமே, தண்டாமரையானுமாலுந்தேடத் தழலுருவாயோங்கிநிமிர்ந்தார்தாமே, பண்டாரிசைபாடநின்றார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, திண்டோள்களெட்டுமுடையார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௬)

மையாருங்கண்டமிடற்றார்தாமே மயானத்திலாடல்மகிழ்ந்தார்தாமே, ஐயாறுமாரூருமானைக்காவு மம்பலமுங்கோயிலாக் கொண்டார்தாமே, பையாடரவமசைத்தார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, செய்யாள்வழிபடநின்றார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (௭)

விண்முழுதுமண்முழுதுமானார்தாமே மிக்கோர்களேத்துங்குணத்தார்தாமே, கண்விழியாற்காமனையுங்காய்ந்தார்தாமே காலங்களூழிகடந்தார்தாமே, பண்ணியலும்பாடலுகப்பார்தாமே பழனைபதி

யாவுடையார்தாமே, திண்மழுவாளேந்துகரத்தார்தாமே திருவாலங் காடுறையுஞ்செல்வர்தாமே. (௮)

காரார்கடனஞ்சையுண்டார்தாமே கயிலைமலையையுடையார்தா மே, பூராவேகம்பமுகந்தார்தாமே யொற்றியூர்பற்றியிருந்தார்தா மே, பாரார்புகழப்படுவார்தாமே பழனைபதியாவுடையார்தாமே, தீராதவல்வினைநோய்தீர்ப்பார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர் தாமே. (௯)

மாலைப்பிறைசென்னிவைத்தார்தாமே வண்கயிலைமாமலையைவந் தியாத, நீலக்கடல்சூழிலங்கைக்கோனை நெரியவிரலாலடர்த்தார்தா மே, பாலொத்தமேனிநிறத்தார்தாமே பழனைபதியாவுடையார்தா மே. சீலத்தாரொத்துந்திறத்தார்தாமே திருவாலங்காடுறையுஞ்செல்வர் தாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-ஊர்த்ததாண்டவேசுவரர்-தேவியார்-வண்டார்குழலியம்மை.

## திருக்காளத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன்றில்லாத நல்கூர்ந்தான்காண் வியன்கச்சிக்கம்பன் காண் பிச்சையல்லால், மற்றூணொன்றில்லாத மாசதுரன்காண் மயா னத்துமைந்தன்காண் மாசொன்றில்லாப், பொற்றூண்காண் மாமணி நற் குன்றொப்பான்காண் பொய்யாதபொழிலேழுந் தாங்கிநின்ற, க ற்றூண்காண் காளத்தி காணப்பட்ட கணநாதன் காணவனென் கண்ணு ளானே. (௧)

இடிப்பான்காணென்வினையை யேகம்பன்கா ணெலும்பாபரண ன்கா ணெல்லாமுன்னே, முடிப்பான்காண் மூவுலகுமாயினான்காண் முறைமுறையாலைம்பொறியும் வழுவாவண்ணம், படித்தான்றலையறு த்த பாசுபதன்காண் பருப்பதத்துறையான் பழனம்பைஞ்ஞீலியான்கா ண், கடித்தார்கமழ்கொன்றைக் கண்ணியான்காண் காளத்தியானவ னென்கண்ணுளானே. (௨)

நாரணன்காணான்முகன்கா ணால்வேதன்கா ண் ஞானப்பெருங்க டற்கோர் நாவாயன்ன, பூரணன்காண்புண்ணியன்காண் புராணந்தா ன்காண் புரிசடைமேற்புனலேற்ற புனிதன்றான்காண், சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன்றான்காண் தன்மைக்கட்டானேகாண் டக்



கோர்க்கெல்லாங், காரணன்காண் காளத்திகாணப்பட்ட கணநாதன்கா ணவனென் கண்ணுளானே. (௩)

செற்றான்கா ணென்வினையைத்தீயாடீகாண் டிருவொற்றியூரா ன்காண் சிந்தைசெய்வார்க், குற்றான்காணேகம்பமேவினான்கா ணு மையாணற்கொழுநன்கா ணிமையோரேத்துஞ், சொற்றான்கா ண் சோற்றுத்துறையுளான்காண் சுறவேந்தனேவலத்தை நீறுநோக்கக், கற்றான்காண்காளத்திகாணப்பட்ட கணநாதன்காணவனென் கண்ணு ளானே. (௪)

மனத்தகத்தான்றலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத்தன்னடி யே பாடுந்தொண்டர், இனத்தகத்தானிமையவர்தஞ் சிரத்தின்மேலா னேழண்டத்தப்பாலா னிப்பாற்செம்பொன், புனத்தகத்தானறுங் கொன்றைப் போதினுள்ளான் பொருப்பிடையானெருப்பிடையான் காற்றினுள்ளான், கனத்தகத்தான்கயிலாயத் துச்சியுள்ளான் காளத்தி யானவனென் கண்ணுளானே. (௫)

எல்லாமுன்றோன்றுமே தோன்றினான்கா ணேகம்பமேயான்கா ணிமையோரேத்தப், பொல்லாப்புலனைந்தும் போக்கினான்காண் புரி சடைமேற்பாய்கங்கை பூரித்தான்காண், நல்லவிடமேற்கொண்டு நா கம்பூண்டு நளிசிரமொன்றேந்தியோர் ஞாணயற்ற, கல்லாடைமேல் கொண்டகாபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே. (௬)

கரியுருவுகண்டத்தெங் கண்ணுளான்காண் கண்டன்காண் வண்டு ண்ட கொன்றையான்காண், எரிபவளவண்ணன்கா ணேகம்பன்கா ணெ ண்டிசையுந்தானாய குணத்தினான்காண், திரிபுரங்கடீயிட்டதீயாடிகா ண்டீவினைகள்தீர்த்திடுமென் சிந்தையான்காண், கரியுரிவைபோர்த் துகந்தகாபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே. (௭)

இல்லாடிச்சில்பலிசென் றேற்கின்றான்கா ணிமையவர்கடொழு திறைஞ்ச விருக்கின்றான்காண், வில்லாடிவேடனா யோடினான்காண் வெண்ணூலுஞ்சேர்ந்த வகலத்தான்காண், மல்லாடுதிரடோண்மேன் மழுவாளன்காண் மலைமகடன்மணாளன்காண் மகிழ்ந்துமுன்னாட், கல் லாலின்கீழிருந்தகாபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே.

தேனப்பூவண்டுண்ட கொன்றையான்காண் டிருவேகம்பத்தான் காண் டேனார்ந்துக்க, ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்கா ணம்ப ன்காண் ஞானத் தொளியானான்காண், வானப்பேராறுமறியவோர்டி ம

ட்டித்துநின்றான்காண் வண்டார்சோலைக், கானப்பேரான்காண் க
றைக்கண்டன்காண் காளத்தியானவனென் கண்ணுளானே. (௯)

இறையவன்காணேழுலகுமாயினான்கா ணேழ்கடலுஞ்சூழ்மலையு
மாயினான்காண், குறையுடையார்குற்றேவல் கொள்வான்றான்காண் கு
டமூக்கிற்கீழ்க்கோட்டமேயினான்காண், மறையுடையவானோர்பெரு
மான்றான்காண் மறைக்காட்டுறையு மணிகண்டன்காண், கறையுடைய
கண்டத்தெங்காபாலிகாண் காளத்தியானவனென் கண்ணுளானே. (௧௦)

உண்ணுவருநஞ்சமுண்டான்றான்கா ணூழித்தீயன்னான்கா ணுகப்
பார்காணப், பண்ணாரப்பல்லியம் பாடினான்காண் பயின்றநால்வே
தத்தின் பண்பினான்காண், அண்ணாமலையான்காணடியாரீட்ட மடியி
ணைகடொழுதேத்த வருளுவான்காண், கண்ணாரக்காண்பார்க்கோர் கா
ட்சியான்காண் காளத்தியானவனென் கண்ணுளானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம்-தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-காளத்திநாதர்-தேவியார்-ஞானப்பூங்கோதையார்.

---

# முதற்றிருமுறை.

## திருப்பருப்பதம்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கன்றினார்புரங்கண்மூன்றுங் கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னை நீர்மையுநிறையுங்கொண்டும்
ஒன்றியாங்குமையுந்தாமு மூர்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப் பருப்பதநோக்கினாரே. (௧)

கற்றமாமறைகள்பாடிக் கடைதொறும்பலியுந்தேர்வார்
வற்றலோர்தலையையேந்தி வானவர்வணங்கிவாழ்த்த
முற்றவோர்சடையினீரை யேற்றமுக்கண்ணர்தம்மைப்
பற்றினார்க்கருள்கள்செய்து பருப்பதநோக்கினாரே. (௨)

கரவிலாமனத்தராகிக் கைதொழுவார்கட்கென்றும்
இரவினின்றெரியதாடி யின்னருள்செய்யுமெந்தை
மருவலர்புரங்கண்மூன்று மாட்டியவகையராகிப்
பரவுவார்க்கருள்கள்செய்து பருப்பதநோக்கினாரே. (௩)



கட்டிட்டதலைகையேந்திக் கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச் சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்கு வேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப் பருப்பதநோக்கினாரே. (௪)

கையராய்க்கபாலமேந்திக் காமனைக்கண்ணாற்காய்ந்து
மெய்யராய்மேனிதன்மேல் விளங்குவெண்ணீறுபூசி
யுய்யராயுள்குவார்க்கு வுவகைகள்பலவுஞ்செய்து
பையராவரையிலார்த்துப் பருப்பதநோக்கினாரே. (௫)

வேடராய்வெய்யராகி வேழத்தினுரிவைபோர்த்து
ஓடராயுலகமெல்லா முழிதர்வருமையுந்தாமுங்
காடராய்க்கனல்கையேந்திக் கடியதோர்விடைமேற்கொண்டு
பாடராய்ப்பூதஞ்சூழப் பருப்பதநோக்கினாரே. (௬)

மேகம்போன்மிடற்றராகி வேழத்தினுரிவைபோர்த்து
யேகம்பமேவினார்தா மிமையவர்பரவியேத்தக்
காகம்பர்கழறராகிக் கடியதோர்விடையொன்றேறிப்
பாகம்பெண்ணுருவமானார் பருப்பதநோக்கினாரே. (௭)

பேரிடர்ப்பிணிகடீர்க்கும் பிஞ்ஞகனெந்தையெம்மான்
காருடைக்கண்டராகிக் கபாலமோர்கையிலேந்திச்
சீருடைச்செங்கண்வெள்ளே றேறியசெல்வர்நல்ல
பாரிடம்பாணிசெய்யப் பருப்பதநோக்கினாரே. (௮)

அங்கண்மாலுடையராய வைவராலாட்டுணாதே
யுங்கண்மால்தீரவேண்டி லுள்ளத்தாலுள்கியேத்துஞ்
செங்கண்மால்பரவியேத்திச் சிவனெனநின்றசெல்வர்
பைங்கண்வெள்ளேறதேறிப் பருப்பதநோக்கினாரே. (௯)

அடல்விடையூர்தியாகி யரக்கன்றோளடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்ட கறையணிகண்டனார்தாஞ்
சுடர்விடுமேனிதன்மேற் சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப் பருப்பதநோக்கினாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம்-வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பருப்பதேசுவரர்-தேவியார்-[illegible]மணியம்மை.

---

## மூன்றாந்திருமுறை.

### திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீறாநோக்கு மனலாடியாரமுதே யென்றேனானே, கூரார்மழுவாட்படையொன்றேந்திக் குறட்பூதப்பல்படையா னென்றேனானே, பேராயிரமுடையாயென்றேனானே பிறைசூடும்பிஞ்ஞகனே யென்றேனானே, யாராவமுதேயென்னையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௧)

தீவாயின்முப்புரங்கணீறாநோக்குந் தீர்த்தாபுராணனே யென்றேனானே, மூவாமதிசூடியென்றேனானே முதல்வாமுக்கண்ணனே யென்றேனானே, யேவார்சிலையானேயென்றேனானே யிடிமினைக்க டனின்று மேறவாங்கி, யாவாவென்றருள்புரியுமையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௨)

அஞ்சனவண்ணனேயென்றேனானே யடியார்கட்காரமுதே யென்றேனானே, நஞ்சணிகண்டனே யென்றேனானே நாவலர்களான் மறையே யென்றேனானே, நெஞ்சுணரவுள்புக்கிருந்தபோது நிறைவு மமுதமே யென்றேனானே, யஞ்சாதேயாள்வானே யையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௩)

தொல்லைத்தொடுகடலே யென்றேனானே துலங்குமிளம்பிறையா யென்றேனானே, யெல்லைநிறைந்தானே யென்றேனானே யேழ்நரம்பினின்னிசையா யென்றேனானே, யல்லற்கடல்புக்கழுந்துவேனை வாங்கியருள்செய்தா யென்றேனானே, யெல்லையாமையாறாவென்றேனானே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௪)

இண்டைச்சடைமுடியாயென்றேனானே யிருசுடர்வானத்தா யென்றேனானே, தொண்டாற்றொழப்படுவா யென்றேனானே துருத்தி நெய்த்தானத்தா யென்றேனானே, கண்டங்கறுத்தானேயென்றேனானே கனலாடுங்கண்ணனே யென்றேனானே, யண்டத்துக்கப்பாலா மையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௫)

பற்றார்புரமெரித்தாயென்றேனானே பசுபதிபாண்டரங்கா வென்றேனானே, கற்றார்களுவிறையென்றேனானே கடுவிடையொன்றூர்தியா யென்றேனானே, யற்றுனார்நெஞ்சுளாயென்றேனானே பார்த்தற்கருள்செய்தா யென்றேனானே, யற்றார்க்கருள்செய்யுமையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௬)



விண்ணோர்தலைவனேயென்றேனானே விளங்குமிளம்பிறையா யென்றேனானே, யெண்ணாரெயிலெரித்தாயென்றேனானே யேகம்பமேயானே யென்றேனானே, பண்ணார்மறைபாடியென்றேனானே பசுபதீபானீற்று யென்றேனானே, யண்ணாவையாறனே யென்றேனானே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௭)

அவனென்றுநானுன்னையஞ்சாதேனை யல்லலறுப்பானே யென்றேனானே, சிவனென்றுநானுன்னை யெல்லாஞ்சொல்லச் செல்வந்தருவானே யென்றேனானே, பவனாகியென்னுள்ளத்துள்ளேநின்று பண்டைவினையறுப்பா யென்றேனானே, யவனென்றேயாதியேயையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௮)

கச்சியேகம்பனேயென்றேனானே கயிலாயாகாரோணா வென்றேனானே, நிச்சனிமலனேயென்றேனானே நினைப்பார்மனத்துளா யென்றேனானே, யுச்சம்போதேறேறீ யென்றேனானே யுள்குவாருள்ளத்தா யென்றேனானே, யச்சம்பிணிதீர்க்குமையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௯)

வில்லாடிவேடனேயென்றேனானே வெண்ணீறுமெய்க்கணிந்தா யென்றேனானே, சொல்லாயசூழலாயென்றேனானே சுலாவாயதொன்னெறியே யென்றேனானே, யெல்லாமாயென்னுயிரே யென்றேனானே யிலங்கையர்கோன்றோளிறுத்தா யென்றேனானே, யல்லாவினைதீர்க்குமையாறனே யென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

### திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயே யுலகுக்கொருவனாய் நின்றாய்நீயே, வாசமலரெலாமானாய்நீயே மலையான்மருகனாய் நின்றாய்நீயே, பேசப்பெரிதுமினியாய்நீயே பிரானாயடியென்மேல் வைத்தாய்நீயே, தேசவிளக்கெலாமானாய்நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ. (௧)

நோக்கரியதிருமேனி யுடையாய்நீயே நோவாமேநோக்கருள வல்லாய்நீயே, காப்பரியவைம்புலனுங்காத்தாய்நீயே காமனையுங்கண்ணழலாற் காய்த்தாய்நீயே, யார்ப்பரியமாநாக மார்த்தாய்நீயே யடி

யானென்றடியென்மேல் வைத்தாய்நீயே, தீர்ப்பரியவல்வினைநோய் தீர்ப்பாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௨)

கனத்தகத்துக்கடுஞ்சுடராய் நின்றாய்நீயே கடல்வரைவானாகாய மானாய்நீயே, தனத்தகத்துத்தலைகலனாக் கொண்டாய்நீயே சார்ந்தாரைத்தகைந்தாள வல்லாய்நீயே, மனத்திருந்தகருத்தறிந்து முடிப்பாய்நீயே மலர்ச்சேவடியென்மேல் வைத்தாய்நீயே, சினத்திருந்ததிருநீலகண்டனீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௩)

வானுற்றமாமலைகளானாய்நீயே வடகயிலைமன்னி யிருந்தாய்நீயே, ஊனுற்றவொளிமழுவாட்படையாய்நீயே, யொளிமதியோடரவு புனல் வைத்தாய்நீயே, ஆனுற்றவைந்துமமர்ந்தாய்நீயே யடியானென்றடியென்மேல் வைத்தாய்நீயே, தேனுற்றசொன்மடவாள்பங்கனீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௪)

பெண்ணாண்பிறப்பிலியாய் நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம் பெரியாய்நீயே, யுண்ணாவருநஞ்சமுண்டாய்நீயே ஊழிமுதல்வனாய் நின்றாய்நீயே, கண்ணாவுலகெலாங்காத்தாய்நீயே கழற்சேவடியென்மேல் வைத்தாய்நீயே, திண்ணார்மழுவாட்படையாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௫)

உற்றிருந்தவுணர்வெலா மானாய்நீயே யுற்றவர்க்கோர்சுற்றமாய் நின்றாய்நீயே, கற்றிருந்தகலைஞானமானாய்நீயே கற்றவர்க்கோர்கற்பகமாய் நின்றாய்நீயே, பெற்றிருந்ததாயவளினல்லாய்நீயே பிரானாயடியென்மேல் வைத்தாய்நீயே, செற்றிருந்ததிருநீலகண்டனீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௬)

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவி யிருந்தாய்நீயே, நல்லாரைநன்மையறிவாய்நீயே ஞானச்சுடர்விளக்காய் நின்றாய்நீயே, பொல்லாவினைகளறுப்பாய்நீயே புகழ்ச்சேவடியென்மேல் வைத்தாய்நீயே, செல்வாயசெல்வந்தருவாய்நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௭)

ஆவினிலைந்துமமர்ந்தாய்நீயே யளவில்பெருமை யுடையாய்நீயே, பூவினினாற்றமாய் நின்றாய்நீயே போர்க்கோலங்கொண்டெயிலெய்தாய்நீயே, நாவினடுவுரையாய்நின்றாய்நீயே நண்ணியடியென்மேல் வைத்தாய்நீயே, தேவரறியாததேவனீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. (௮)



எண்டிசைக்குமொண்சுடராய் நின்றாய்நீயே யேகம்பமேயவிறைவனீயே, வண்டிசைக்குநறுங்கொன்றைத் தாராய்நீயே வாராவுலகருளவல்லாய்நீயே, தொண்டிசைத்துன்னடிபரவநின்றாய்நீயே தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திண்சிலைக்கோர்சரங்கூட்டவல்லாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதி. (௯)

விண்டார்புரமூன்றுமெய்தாய்நீயே விண்ணவர்க்குமேலாகிநின்றாய்நீயே, கண்டாரைக்கொல்லுநஞ்சுண்டாய்நீயே காலங்களூழியாய்நின்றாய்நீயே, தொண்டாயடியேனையாண்டாய்நீயே தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திண்டோள்விட்டெரியாடலுகந்தாய் நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதி. (௧௦)

ஆருமறியாவிடத்தாய்நீயே யாகாயந்தேரூரவல்லாய்நீயே, பேரும்பெரியவிலங்கைவேந்தன் பெரியமுடிபத்திறுத்தாய்நீயே, ஊரும்புரமூன்றுமட்டாய்நீயே யொண்டாமரையானுமாலுங்கூடித், தேருமடியென்மேல்வைத்தாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதி.

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருவையாறு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங் களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௧)

போழிளங்கண்ணியினானைப் பூந்துகிலாளொடும்பாடி
வாழியப்போற்றியென்றேத்தி வட்டமிட்டாடாவருவேன்
ஆழிவலவனின்றேத்து மையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக் குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன் (௨)

எரிப்பிறைக்கண்ணியினானை யேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டு முகமலர்ந்தாடாவருவேன்
அரித்தொழுகுவெள்ளருவி யையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடி வைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௩)

பிறையிளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித் தோளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலு மையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச் சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௪)

ஏடுமதிக்கண்ணியானை யேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங் கைதொழுதாடாவருவே
னாடலமர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப் பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௫)

தண்மதிக்கண்ணியினானைத் தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனாகி யுணராவுருகாவருவே
னண்ணலமர்ந்துறைகின்ற வையாறடைகின்றபோது
வண்ணப்பகின்றிலொடாடி வைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௬)

கடிமதிக்கண்ணியினானைக் காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும் வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்க்குங்கழலா னையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேன மிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௭)

விரும்புமதிக்கண்ணியானை மெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்து பெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்து மையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக் கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௮)

முற்பிறைக்கண்ணியினானை மொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன் பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோ டையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடி நாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௯)

திங்கள்மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தை யெனக்கினியென்னாவருவேன்



அங்கிளமங்கையராடு மையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப் பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௧௦)

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங் காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போ டையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவி யேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங் கண்டறியாதனகண்டேன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே
கயிலாயமாகச் சுவாமி தரிசனங் கட்டளையிட்டபோது வோதியருளியபதிகம்.

---

## இரண்டாந்திருமுறை.

### திருஐயாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவாய்த லுளான்வந்துசிரியன்
பொந்துவார்புலால் வெண்டலைக்கையினன்
முந்திவாயதோர் மூவிலைவேல்பிடித்
தந்திவாயதோர் பாம்பரையையனே. (௧)

பாகமாலை மகிழ்ந்தனர்பான்மதி
போகவானையி னீருரிபோர்த்தவர்
கோகமாலை குலாயதோர்கொன்றையு
மாகவானெயஞ் சாடுமையாறரே. (௨)

நெஞ்சமென்பதோர் நீள்கயந்தன்னுளே
வஞ்சமென்பதோர் வான்சுழிப்பட்டுநான்
துஞ்சும்போழ்துநின் னாமத்திருவெழுத்
தஞ்சுந்தோன்ற வருளுமையாறரே. (௩)

நினைக்குநெஞ்சினுள் ளார்நெடுமாமதில்
அனைத்துமொள்ளழல் வாயெரியூட்டினார்
பனைக்கைவேழத் துரியுடல்போர்த்தவ
ரனைத்துவாய்தலு ளாருமையாறரே. (௪)

பரியர்நுண்ணியர் பார்த்தற்கரியவர்
அரியபாடல ராடலரன்பியுங்

கரியகண்டத்தர் காட்சிபிறர்க்கெலாம்
அரியர்தொண்டர்க் கெளியரையாறரே. (௫)

புலரும்போது மலர்ப்பட்டபொற்சுடர்
மலரும்போதுக ளாற்பணியச்சிலர்
திலரும்போது மிலாததுமன்றியும்
அலரும்போது மணியுமையாறரே. (௬)

பங்கமாலைக் குழலியோர்பால்திகழ்
கங்கைமாலையாக் காதன்மைசெய்தவர்
பங்கமாலை மதியமுங்கண்ணியும்
அங்கமாலையுஞ் சூடுமையாறரே. (௭)

முன்னையாறு முயன்றெழுவீரெலாம்
பின்னையாறு பிரியெனும்பேதைகாள்
மன்னையாறு மருவியமாதவன்
றன்னையாறு தொழத்தவமாகுமே. (௮)

ஆனையாறென வாடுகின்றான்முடி
வானையாறுவ ளாயதுகாண்மினோ
நானையாறுபுக் கேத்தவனின்னருள்
தேனையாறு திறந்தாலேயொக்குமே. (௯)

அரக்கின்மேனி யனந்தளிர்மேனியன்
அரக்கின்சேவடி யாளஞ்சவஞ்சலென்
றரக்கனீரைந்து வாயுமலறவே
யரக்கினானடி யாலுமையாறனே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஐயாறு-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்த ராய்த்திறம்பாவண
மூந்திவண்ணத்த ராய்முழுநீறணி
சந்திவண்ணத்தராய்த் தழல்போல்வதோ
ரந்திவண்ணமு மாவரையாறரே. (௧)

மூலவண்ணத்த ராய்முதலாகிய
கோலவண்ணத்த ராகிக்கொழுஞ்சுடர்



நீலவண்ணத்த ராகிநெடும்பளிங்
காலவண்ணத்த ராவரையாறரே. (௨)

சிந்தைவண்ணமுந் தீயதோர்வண்ணமும்
அந்திப்போதழ காகியவண்ணமும்
பந்திக்காலனைப் பாய்ந்ததோர்வண்ணமும்
அந்திவண்ணமு மாவரையாறரே. (௩)

இருளின்வண்ணமு மேழிசைவண்ணமுஞ்
சுருளின்வண்ணமுஞ் சோதியின்வண்ணமு
மருளுநான்முகன் மாலொடுவண்ணமும்
அருளும்வண்ணமும் மாவரையாறரே. (௪)

இழுக்கின்வண்ணங்க ளாகியவெவ்வழல்
குழைக்கும்வண்ணங்க ளாகியுங்கூடியு
மழைக்கண்மாமுகி லாகியவண்ணமும்
அழைக்கும்வண்ணமு மாவரையாறரே. (௫)

இண்டைவண்ணமு மேழிசைவண்ணமுந்
தொண்டர்வண்ணமுஞ் சோதியின்வண்ணமுங்
கண்டவண்ணங்க ளாய்க்கனல்மாமணி
யண்டவண்ணமு மாவரையாறரே. (௬)

விரும்பும்வண்ணமும் வேதத்தின்வண்ணமுங்
கரும்பின்மென்மொழிக் காரிகைவண்ணமும்
விரும்புவார்வினை தீர்த்திடும்வண்ணமும்
அரும்பின்வண்ணமு மாவரையாறரே. (௭)

ஊழிவண்ணமு மொண்சுடர்வண்ணமும்
வேழவீருரி போர்த்ததோர்வண்ணமும்
வாழித்தீயுரு வாகியவண்ணமும்
ஆழிவண்ணமு மாவரையாறரே. (௮)

செய்தவன்றிரு நீறணிவண்ணமும்
எய்தநோக்கரி தாகியவண்ணமுங்
கைதுகாட்சி யரியதோர்வண்ணமும்
ஐதுவண்ணமு மாவரையாறரே. (௯)

எடுத்தவாளரக் கன்றிறல்வண்ணமும்
இடர்க்கள்போற்பெரி தாகியவண்ணமுங்

கடுத்தகைந்நரம் பாலிசைவண்ணமு
மடுத்தவண்ணமு மாவனையாறரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-செம்பொற்சோதிசுவரர்-தேவியார்-அறம்வளர்த்தநாயகி.

---

## முதற்றிருமுறை.

### திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார் கதிர்ப்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும்வைத்தா ரையனையாறனாரே. (௧)

பொடிதனைப்பூசவைத்தார் பொங்கும்வெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார் காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னை மார்பிலோர்பாகம்வைத்தார்
அடியிணைதொழவும்வைத்தா ரையனையாறனாரே. (௨)

உடைதருகீளும்வைத்தா ருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார் பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார் வெண்புரிநூலும்வைத்தார்
அடைதரவருளும்வைத்தா ரையனையாறனாரே. (௩)

தொண்டர்கள்தொழவும்வைத்தார் தூமதிசடையில்வைத்தார்
இண்டையைத்திகழவைத்தா ரெமக்கென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாளை மருவியோர்பாகம்வைத்தார்
அண்டவானவர்களேத்து மையனையாறனாரே. (௪)

வானவர்வணங்கவைத்தார் வல்வினைமாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார் காமனைக்கனலாவைத்தார்
ஆனிடையைந்தும்வைத்தா ராட்டுவார்க்கருளும்வைத்தார்
ஆனையினுரிவைவைத்தா ரையனையாறனாரே. (௫)

சங்கணிகுழையும்வைத்தார் சாம்பல்மெய்ப்பூசவைத்தார்
வெங்கதிரெரியவைத்தார் விரிபொழிலனைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார் கடுவினைகளையவைத்தார்
அங்கமதோதவைத்தா ரையனையாறனாரே. (௬)



பத்தர்கட்கருளும்வைத்தார் பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார் சிவமதேநினையவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார் முறைமுறைநெறிகள்வைத்தார்
அத்தியினுரிவைவைத்தா ரையனையாறனாரே. (௭)

ஏறுகந்தேறவைத்தா ரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தார் நாகமுமரையில்வைத்தார்
கூறுமையாகம்வைத்தார் கொல்புலித்தோலும்வைத்தார்
ஆறுமோர்சடையில்வைத்தா ரையனையாறனாரே. (௮)

பூதங்கள்பலவும்வைத்தார் பொங்குவெண்ணீறும்வைத்தார்
கீதங்கள்பாடவைத்தார் கின்னரந்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார் பத்தர்கள்பணியவைத்தார்
ஆதியுமந்தம்வைத்தா ரையனையாறனாரே. (௯)

இரப்பவர்க்கீயவைத்தா ரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங் கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்கங்கைதன்னைப் படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தா ரையனையாறனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

### திருவையாறு-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடே கூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கொள்சோதி தூநெறியாகிநின்ற
வண்டனேயமரரேறே திருவையாறமர்ந்ததேனே
தொண்டனேன்றொழுதுன்பாதஞ் சொல்லினாதிரிகின்றேனே. (௧)

பீலிகையிடுக்கிநாளும் பெரியதோர்தவமென்றெண்ணி
வாலியதறிகள்போல மதியிலார்பட்டதென்னே
வாலியார்வணங்கியேத்துந் திருவையாறமர்ந்ததேனே
டாலியாவெழுந்தநெஞ்ச மழகிதாவெழுந்தவாறே. (௨)

தட்டிடுஞ்சமணரோடே தருக்கிநான்றவமென்றெண்ணி
யொட்டிடுமனத்தினீரோ யும்மையான்செய்வதென்னே
மொட்டிடுகமலப்பொய்கைத் திருவையாறமர்ந்ததேனே
டொட்டிடுமுள்ளத்தீரோ யும்மைநானுகந்திட்டேனே. (௩)

பாசிப்பல்மாசுமெய்யர் பலமிலாச்சமணரோடு
நேசத்தாலிருந்தநெஞ்சை நீக்குமாறறியமாட்டேன்
தேசத்தார்பரவியேத்துந் திருவையாறமர்ந்ததேனை
வாசத்தால்வணங்கவல்லார் வல்வினைமாயுமன்றே.

கடுப்பொடியட்டிமெய்யிற் கருதியோர்தவமென்றெண்ணி
வடுக்களோடிசைந்தநெஞ்சே மதியிலிபட்டதென்னே
மடுக்களில்வாளைபாயுந் திருவையாறமர்ந்ததேனை
யடுத்துநின்றுன்னுநெஞ்சே யருந்தவஞ்செய்தவாறே. (௫)

துறவியென்றவமதோரேன் சொல்லியசெலவுசெய்து
உறவினாலமணரோடு முணர்விலேனுணர்வொன்றின்றி
நறவமார்பொழில்கள்சூழ்ந்த திருவையாறமர்ந்ததேனை
மறவலாநெஞ்சமேநன் மதியுனக்கடைந்தவாறே. (௬)

பல்லுரைச்சமணரோடே பலபலகாலமெல்லாஞ்
சொல்லியசெலவுசெய்தேன் சோர்வனுவினைந்தபோது
மல்லிகைமலருஞ்சோலைத் திருவையாறமர்ந்ததேனை
யெல்லியும்பகலுமெல்லா நினைந்தபோதினியவாறே. (௭)

மண்ணுளார்விண்ணுளாரும் வணங்குவார்பாவம்போக
எண்ணிலாச்சமணரோடே யிசைந்தனையேழைநெஞ்சே
தெண்ணிலாவெறிக்குஞ்சென்னித் திருவையாறமர்ந்ததேனைக்
கண்ணினாற்காணப்பெற்றுக் கருதிற்றேமுடிந்தவாறே. (௮)

குருந்தமதொசித்தமாலுங் குலமலர்மேவினானுந்
திருந்துநற்றிருவடியுந் திருமுடிகாணமாட்டார்
அருந்தவமுனிவரேத்துந் திருவையாறமர்ந்ததேனைப்
பொருந்திநின்றுன்னுநெஞ்சே பொய்வினைமாயுமன்றே. (௯)

அறிவிலாவரக்கனோடி யருவரையெடுக்கலுற்று
முறுகினான்முறுகக்கண்டு மூதறிவாளனோக்கி
நிறுவினான்சிறுவிரலால் நெரிந்துபோய்நிலத்தில்வீழ
அறிவினாலருள்கள்செய்தான் திருவையாறமர்ந்ததேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-செம்பொற்சோதீசுவரர்-தேவியார்-அறம்வளர்த்தநாயகி.



திருவையாறு-பண்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைச் சகமிலாதடிமையில்லைக்
கானலாதாடலில்லைக் கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லை வார்குழன்மங்கையோடும்
ஆனலாதூர்வதில்லை யையனையாறனார்க்கே. (௧)

ஆலலாலிருக்கையில்லை யருந்தவமுனிவர்க்கன்று
நூலலாநொடிவதில்லை நுண்பொருளாய்ந்துகொண்டு
மாலுநான்முகனுங்கூடி மலரடிவணங்கவேலை
ஆலலாலமுதமில்லை யையனையாறனார்க்கே. (௨)

நரிபுரிசுடலைதன்னி னடமலானவிற்றமில்லைச்
சுரிபுரிகுழலியோடுந் துணையலாலிருக்கையில்லைத்
தெரிபுரிசிந்தையார்க்குத் தெளிவலாலருளுமில்லை
யரிபுரிமலர்கொண்டேத்து மையனையாறனார்க்கே. (௩)

தொண்டலாற்றுணையுமில்லைத் தோலலாதுடையுமில்லைக்
கண்டலாதருளுமில்லைக் கலந்தபின்பிரிவதில்லைப்
பண்டைதான்மறைகள்காணாப் பரிசினனென்றென்றெண்ணி
யண்டவானவர்களேத்து மையனையாறனார்க்கே. (௪)

எரியலாலுருவமில்லை யேறலாலேறலில்லைக்
கரியலாற்போர்வையில்லைக் காண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப் பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லை யையனையாறனார்க்கே. (௫)

என்பலாற்கலனுமில்லை யெருதலாலூர்வதில்லைப்
புன்புலால்நாறுகாட்டிற் பொடியலாற்சாந்துமில்லைத்
துன்பிலாத்தொண்டர்கூடித் தொழுதழுதாடிப்பாடும்
அன்பலாற்பொருளுமில்லை யையனையாறனார்க்கே. (௬)

கீளலாலுடையுமில்லைக் கிளர்பொறியரவம்பைம்பூண்
டோளலாற்றுணையுமில்லைத் தொத்தலர்கின்றவேனில்
வேளலாற்காயப்பட்ட வீரருமில்லைமீளா
ஆளலாற்கைம்மாறில்லை யையனையாறனார்க்கே. (௭)

சகமலாதடிமையில்லைத் தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையா னான்மலர்தொழுதுதூவி

முகமெலாங்கண்ணீர்மல்க முன்பணிந்தேத்துந்தொண்டர்
அகமலாற்கோயிலில்லை யையனையாறனார்க்கே. (அ)

உமையலா துருவமில்லை யுலகலா துடையதில்லை
நமையெலாமுடையராவர் நன்மையே தீமையில்லைக்
கமையெலாமுடையராகிக் கழலடிபரவுந்தொண்டர்க்
கமைவிலாவருள்கொடுப்பா ரையனையாறனார்க்கே. (கூ)

மலையலாவிருக்கையில்லை மதித்திடாவரக்கன்றன்னைத்
தலையலானெரித்ததில்லைத் தடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவ நெருப்பலால்விரித்ததில்லை
யலையினார்பொன்னிமன்னு மையனையாறனார்க்கே (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

---

## திருஐயாறு திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவாகுற்ற நோய்வினைகாட்டிக் குறுவித்தநோ
யுறுவித்தவாவுற்ற நோய்வினைதீர்ப்பா னுகந்தருளி
யறிவித்தவாறடி யேனையையாற னடிமைக்களே
செறிவித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (க)

கூர்வித்தவாகுற்ற நோய்வினைகாட்டியுங் கூர்வித்தநோ
யூர்வித்தவாவுற்ற நோய்வினைதீர்ப்பா னுகந்தருளி
பார்வித்தவாறடி யேனையையாற னடிமைக்களே
சேர்வித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (உ)

தாக்கினவாசல மேவினைகாட்டியுந் தண்டித்தநோய்
நீக்கினவாநெடு நீரினின்றேற்றி நினைந்தருளி
யாக்கினவாறடி யேனையையாற னடிமைக்களே
நோக்கினவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (ந)

தருக்கினநான்றக வின்றியுமோடிச் சலமதனால்
நெருக்கினவாநெடு நீரினின்றேற நினைந்தருளி
யுருக்கினவாறடி யேனையையாற னடிமைக்களே
பெருக்கினவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (ச)



இழிவித்தவாறிட்ட நோய்வினைகாட்டி யிடர்ப்படுத்துக்
கழிவித்தவாகட்ட நோய்வினைதீர்ப்பான் கலந்தருளி
யழிவித்தவாறடி யேனையையாற னடிமைக்களே
தொழுவித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (ரு)

இடைவித்தவாறிட்ட நோய்வினைகாட்டி யிடர்ப்படுத்த
உடைவித்தவாறுற்ற நோய்வினைதீர்ப்பா னுகந்தருளி
யடைவித்தவாறடி யேனையையாற னடிமைக்களே
தொடர்வித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (சு)

படக்கினவாபட நின்றுபன்னாளும் படக்கினநோ
யடக்கினவாறது வன்றியுந்தீவினை பாவமெல்லாம்
அடக்கினவாறடி யேனையையாற னடிமைக்களே
துடக்கினவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (எ)

மறப்பித்தவாவல்லை நோய்வினைகாட்டி மறப்பித்தநோய்
துறப்பித்தவாதுக்க நோய்வினைதீர்ப்பா னுகந்தருளி
யிறப்பித்தவாறடி யேனையையாற னடிமைக்களே
சிறப்பித்தவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (அ)

துயக்கினவாதுக்க நோய்வினைகாட்டித் துயக்கியநோ
யியக்கினவாறிட்ட நோய்வினைதீர்ப்பா னிசைந்தருளி
யயக்கினவாறடி யேனையையாற னடிமைக்களே
மயக்கினவாதொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே. (கூ)

கறுத்துமிட்டார்கண்டங் கங்கைசடைமேற் கரந்தருளி
யிறுத்துமிட்டாரிலங்கைக்கிறைதன்னை யிருபதுதோள்
அறுத்துமிட்டாரடி யேனையையாற னடிமைக்களே
பொறுத்துமிட்டார்தொண்ட னேனைத்தன்பொன்னடிக் கீழெனையே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருஐயாறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினைதீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப்பிறையணிந் தாடுமையாற னடித்தலமே. (க)

இழித்தனவேழேழ் பிறப்புமறுத்தன வென்மனத்தே
பொழித்தனபோரெழிற் கூற்றையுதைத்தன போற்றவர்க்காய்
கிழித்தனதக்கன் கிளரொளிவேள்வியைக் கீழ்முகஞ்சென்று
அழித்தனவாறங்க மானவையையாற னடித்தலமே. (௨)

மணிநிறமொப்பன பொன்னிறமன்னின மின்னிலவாய்க்
கணிநிறமன்ன கயிலைப்பொருப்பன காதல்செய்யத்
துணிவனசீலத்த ராகித்தொடர்ந்து விடாததொண்டர்க்
கணியனசேயன தேவர்க்கையாற னடித்தலமே. (௩)

இருடருதுன்பப் படலமறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடருகண்ணிழந் துண்பொருணாடிப் புகலிழந்த
குருடருந்தம்மைப் பரவக்கொடுநர கக்குழிநின்
றருடருகைக்கொடுத் தேற்றுமையாற னடித்தலமே. (௪)

எழுவாயிறுவா யிலாதனவெங்கள் பிணிதவிர்த்து
வழுவாமருத்துவ மாவனமாநர கக்குழிவாய்
விழுவாரவர்தம்மை வீழ்ப்பனமீட்பன மிக்கவன்போ
டழுவார்க்கமுதங்கள் காண்கவையாற னடித்தலமே. (௫)

துன்பக்கடலிடைத் தோணித்தொழில்பூண்ட தொண்டர்தம்மை
யின்பக்கரைமுகந் தேற்றுந்திறத்தன மாற்றயலே
பொன்பட்டொழுகப் பொருந்தொளிசெய்யுமப் பொய்பொருந்தா
வன்பர்க்கணியன காண்கவையாற னடித்தலமே. (௬)

களித்துக்கலந்ததோர் காதற்கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத்தொழுதுமுன் னின்றவிப்பத்தரைக் கோதில்செந்தேன்
றெளித்துச்சுவையமு தூட்டியமரர்கள் சூழிருப்ப
வளித்துப்பெருஞ்செல்வ மாக்குமையாற னடித்தலமே. (௭)

திருத்திக்கருத்தினைச் செவ்வேநிறுத்திச் செறுத்துடலை
வருத்திக்கடிமலர் வாளெடுத்தோச்சி மருங்குசென்று
விருத்திக்குழக்கவல் லோர்கட்குவிண்பட் டிகையிடுமால்
அருத்தித்தருந்தவ ரேத்துமையாற னடித்தலமே. (௮)

பாடும்பறண்டையு மொந்தையுமார்ப்பப் பரந்துபல்பேய்
கூடிமுழவக் குவிகவிழ்கொட்டக் குறுநரிகள்



நீடுங்குழல்செய்ய வையநெளிய நிணப்பிணக்காட்
டாடுந்திருவடி காண்கவையாற னடித்தலமே. (௯)

நின்போலமரர்க ணீண்முடிசாய்த்து நியமித்துகுத்த
பைம்போதுழக்கிப் பவளந்தழைப்பன பாங்கறியா
வென்போலிகள்பறித் திட்டவிலையு முகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளு மையனையாற னடித்தலமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

11689

திருவையாறு-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட் கண்ணியனையா றமர்ந்துவந்தென்
புந்திவட்டத்திடைப் புக்குநின்றானையும் பொய்யென்பனோ
சிந்திவட்டச்சடைக் கற்றையலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடு கொன்றைவளாவிய நம்பனையே. (௧)

பாடகக்கால்கழற் கால்பருதிக்கதிருக்கவந்தி
நாடகக்காணங்கை முன்செங்கனைத்தின் பின்னடந்த
காடகக்கால்கணங் கைதொழுங்காலெங்க ளாய்நின்றகா
லாடகக்காலரி மான்றேர்வலவனை யாறனவே. (௨)

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந் திருமுறை.

### திருப்பூந்துருத்தி-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமே னிற்பித்தானை நினையாவென்னெஞ்சை நினைவித்தானைக், கல்லாதனவெல்லாங் கற்பித்தானைக் காணாதனவெல்லாங் காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ் சொல்லியென்னைத் தொடர்ந்திங்கடியேனை யாளாக்கொண்டு, பொல்லாவென்னோய்தீர்த்த புனிதன்றன்னைப் புண்ணியனைப்பூந் துருத்திக் கண்டேனானே. (௧)

குற்றாலங்கோகரண மேவினானைக் கொடுங்கைக்கடுங்கூற்றைப் பாய்ந்தான்றன்னைப், புற்றாலநஞ்சுண் டொடுக்கினானைப் புணராவென்னெஞ்சை புணர்வித்தானைப், பற்றாலின்கீழங் கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்தவீணை பயின்றான்றன்னைப், புற்றாடரவார்த்த புனிதன்றன்னைப் புண்ணியனைப்பூந் துருத்திக் கண்டேனானே. (௨)

எனக்கென்றுமினியானை யெம்மான்றன்னை யெழிலாருமேகம்ப மேயான்றன்னை, மனக்கென்றும்வருவானை வஞ்சர்நெஞ்சி னில்லானை நின்றியூர் மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனை யாளாக்கொண்ட சங்கரனைச்சங்கவார் குழையான்றன்னைப் புனக்கொன்றைத்தாரணிந்த புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே.

வெறியார்மலர்க்கொன்றை சூடினானை வெள்ளானைவந்திறைஞ்சும் வெண்காட்டானை, யறியாதடியே னகப்பட்டேனை யல்லற்கடனின்று மேறவாங்கி, நெறிதானிதுவென்று காட்டினானை நிச்சனவிபிணிகடீர்ப்பான்றன்னைப், பொறியாடரவார்த்த புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௪)

மிக்கானை வெண்ணீறு சண்ணித்தானை விண்டார்புரமூன்றும் வேவநோக்கி, நக்கானை நான்மறைகள் பாடினானை நல்லார்கள்பேணிப் பரவநின்ற, தக்கானைத்தண்டா மரைமேலண்ண றலைகொண்டுமாத்திரைக் கணுலகமெல்லாம், புக்கானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௫)

ஆர்த்தானை வாசுகியை யரைக்கோர்கச்சா வசைத்தானையழகாய பொன்னார்மேனிப், பூத்தானத்தான்முடியைப் பொருந்தாவண்ணம் புணர்ந்தானைப்பூங்கணையா னுடலம்வேவப், பார்த்தானைப்பரிந்தானைப் பனிநீர்க்கங்கை படர்சடைமேற்பயின்றானைப் பதைப்பயானை, போர்த்தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௬)

எரித்தானையெண்ணார் புரங்கண்மூன்று மிமைப்பளவிற்பொடியாக வெழிலார்கையா, லுரித்தானைமதகரியை யுற்றுப்பற்றி யுமையவளைக்கண்டஞ்சி நடுங்கக்கண்டு, சிரித்தானைச்சீரார்ந்த பூதஞ்சூழத் திருச்சடைமேற்றிங்களும் பாம்புநீரும், புரித்தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௭)

வைத்தானைவானோ ருலகமெல்லாம் வந்திறைஞ்சிமலர்கொண்டு நின்றுபோற்றும், வித்தானைவேண்டிற்றொன் றீவான்றன்னை விண்ணவர்தம்பெருமானை வினைகள்போக, வுய்த்தானையொலிகங்கை சடைமேற்றாங்கி யொளித்தானையொருபாகத் துமையோடாங்கே, பொய்த்தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௮)



ஆண்டானைவானோ ருலகமெல்லா மந்நாளறியாத தக்கன்வேள்வி, மீண்டானைவிண்ணவர்க ளோடுங்கூடி விளைமலர்மேனான்முகனு மாலுந்தேர, நீண்டானைநெருப்புருவ மானான்றன்னை நிலையிலார்மும்மதிலும் வேவவில்லைப், பூண்டானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௯)

மறுத்தானைமலைகோத்தங் கெடுத்தான்றன்னை மணிமுடியோடிருபதுதோ ளொரியக்காலா, லிறுத்தானையெழுநரம்பி னிசைகேட்டானை யெண்டிசைக்குங்கண்ணானான் சிரமேலொன்றை, யறுத்தானையமரர்களுக் கமுதீந்தானை யாவர்க்குந்தாங்கொணா நஞ்சமுண்டு, பொறுத்தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக் கண்டேனானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## இரண்டாந்திருமுறை.

### திருப்பூந்துருத்தி — திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடிகொள்செல்வ விழாக்குணலையறாக்
கடிகொள்பூம்பொழிற் கச்சியேகம்பனூர்
பொடிகள்பூசிய பூந்துருத்திந்நக
ரடிகள்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (௧)

ஆர்த்ததோலுடை கட்டியோர்வேடனாய்ப்
பார்த்தனோடு படைதொடுமாகிலும்
பூத்தநீள்பொழிற் பூந்துருத்திந்நகர்த்
தீர்த்தன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (௨)

மாதினைமதித் தாளொருபாகமாக்
காதலாற்கரந் தான்சடைக்கங்கையைப்
பூதனாயகன் பூந்துருத்திந்நகர்க்
காதிசேவடிக் கீழ்நாமிருப்பதே. (௩)

மூவருமுத லாயிவ்வுலகெலாங்
காவலாய்க்கடுங் காலனைக்காய்ந்தவன்
பூவினாயகன் பூந்துருத்திந்நகர்த்
தேவன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (௪)

செம்பொனேயொக்கு மேனியன்றேசத்தில்
உம்பராரவ ரோடங்கிருக்கினும்
பொன்பொனார்செல்வப் பூந்துருத்திந்நகர்
நம்பன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (ரு)

வல்லம்பேசி வலிசெய்மூழ் றாரினைக்
கொல்லம்பேசிக் கொடுஞ்சாராறிறேன்
புல்லம்பேசியும் பூந்துருத்திந்நகர்ச்
செல்வன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (சு)

ஒருத்தனுயுல கேழுந்தொழநின்ற
பருத்தபாம்பொடு பான்மதிகங்கையும்
பொருத்தனுகிலும் பூந்துருத்திந்நகர்த்
திருத்தன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (எ)

அமரர்தேவ ரியக்கர்விச்சாதரர்
கருதநின்றவர் காண்பரிதாயினன்
பொருதநீர்வரு பூந்துருத்திந்நகர்ச்
சதிரன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (அ)

செறுகருமனத் தார்புறங்கூறினுங்
கொறுகருக்கண்ணி னேன்பிகள்கூறினும்
பொறுவினயகன் பூந்துருத்திந்நகர்க்
கதியன்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (கூ)

முடித்ததோள்வலி வாளரக்கன்றனைப்
பிடித்தகைஞ்ஞெரித் துற்றனகண்ணெலாய்
பொடிக்கலுன்றிய பூந்துருத்திந்நகர்ப்
படிக்கொள்சேவடிக் கீழ்நாமிருப்பதே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

* இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - புஷ்பவனநாதர் - தேவியார் - அழகாலமர்ந்தநாயகி.

---

## மூன்றாந்திருமுறை.

### திருப்பூந்துருத்தி-திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுற நின்றான்மலைமக டன்னுடைய
பாலனைப்பான்மதி சூடியைப்பண்புண ரார்மதின்மேற்



போலனைப்போர்விடை யேறியைப்பூந் துருத்திமகிழும்
ஆலனையாதி புராணனைநாமடி போற்றுவதே. (க)

மதியுடையான்மழு வாளினன்மாமலை மங்கையோர்பாற்
குறியுடையான்குண மொன்றறிந்தாரில்லைக் கூறிலவன்
பொறியுடைவாளர வத்தவன்பூந் துருத்தியுறையும்
அறிவுடையாதி புராணனைநானடி போற்றுவதே. (உ)

மறுத்தவர்மூமதில் மாயவோர்வெஞ்சிலை கோத்தோரம்பால்
அறுத்தனையாலதன் கீழனையால்விட முண்டனைப்
பொறுத்தனைப்பூதப் படையனைப்பூந் துருத்தியுறையு
நிறத்தனைநீல மிடற்றனையானடி போற்றுவதே. (ங)

உருவினையூழி முதல்வனையோதி நிறைந்துநின்ற
திருவினைத்தேசம் படைத்தனைச்சென் றடைந்தேனுடைய
பொருவினையெல்லாந் துரந்தனைப்பூந் துருத்தியுறையுங்
கருவினைக்கண்மூன் றுடையனையானடி போற்றுவதே. (ச)

தக்கன்றன்வேள்வி தகர்த்தவன்சார மதுவன்றுகொள்
மிக்கனமூம்மதில் வீயவோர்வெஞ்சிலை கோத்தோரம்பாற்
புக்கனல்பொன்திகழ்ந் தன்னதோர்பூந் துருத்தியுறையு
நக்கனைநங்கள் பிரான்றனைநானடி போற்றுவதே. (ரு)

அருகடைமாலையுந் தானுடையானழ காலமைந்த
வுருவுடைமங்கையுந் தன்னொருபாலுல காயுநின்றான்
பொருபடைவேலினன் வில்லினன்பூந் துருத்தியுறையுந்
திருவுடைத்தேச மதியனையானடி போற்றுவதே. (சு)

மந்தியுநின்ற மதிலவைமாய வகைகெடுக்கக்
கன்றியுநின்று கடுஞ்சிலைவாங்கிக் கனலம்பினாற்
பொன்றியும்போகப் புரட்டினன்பூந் துருத்தியுறையு
மன்றியுஞ்செய்த பிரான்றனையானடி போற்றுவதே. (எ)

மின்னிறமிக்க விடையுமைநங்கையோர் பான்மகிழ்ந்தான்
எந்நிறமென் றமரர்பெரியாரின்னந் தாமறியார்
பொன்னிறமிக்க சடையவன்பூந் துருத்தியுறையும்
என்னிறவெந்தை பிரான்றனையானடி போற்றுவதே. (அ)

அந்திவைநல்ல மதியனையார்க்கு மறிவரிய
செந்திவைவாட்டுஞ் செம்பொன்னினைச்சென் றடைந்தேனுடைய

புத்தியைப்புக்க வறிவினைப்பூந் துருத்தியுறையு
நத்தியைநங்கள் பிரான்றனைநானடி போற்றுவதே. (௯)

பைக்கையும்பாந்தி விழிக்கையும்பாம்பு சடையிடையே
வைக்கையும்வானிழி கங்கையுமங்கை நடுக்குறவே
மொய்க்கையானையுரி போர்த்தவனைப்பூந் துருத்தியுறையு
மிக்கநல்வேத விகிர்தனைநானடி போற்றுவதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந் திருமுறை.

### பலவகைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்தியொருபாகத் தடங்கக்கண்டு நிலைதளரவாயிர மா முகத்தினொடு, பாய்ந்தொருத்தி படர்சடை மேற்பயிலக்கண்டு படவரவும்பனிமதியும் வைத்தசெல்வர், தாந்திருத்தித்தம்மனத்தை யொருக்காத்தொண்டர் தனித்தொருதண்டேசிமேல் தளராமுன்னம், பூந்துருத்திபூந்துருத்தி யென்பீராகிற் பொல்லாப்புலாற்றுருத்தி போக்கலாமே. (௧)

ஐத்தானத்தகமிடறு சுற்றியாங்கே யகத்தடைந்தாலியாதொன்று மிடுவாரில்லை, மைத்தானக்கண்மடவார் தங்களோடு மாயமனைவாழ்க்கை மகிழ்ந்துவாழ்வீர், பைத்தானத்தொண்மதியும் பாம்புநீரும் படர்சடைமேல்வைத்துகந்த பண்பன்மேய, நெய்த்தானநெய்த்தான மென்பீராகி னிலாவாப்புலாற்றனை நீக்கலாமே. (௨)

பொய்யாறுவாறே புனைந்துபேசிப்புலர்ந்தெழுந்தகாலைப் பொருளேதேடிக், கையாறுக்காண முடையோமென்று களித்தமனத்தராய்க் கருதிவாழ்வீர், நெய்யாறுவாடிய நீலகண்டர் நிமிர்புன்சடைநெற்றிக் கண்ணர்மேய, ஐயாறேயையாறே யென்பீராகி லல்லறீர்ந்தமருலகமாளலாமே. (௩)

இழவொன்றுதாமொருவர்க் கிட்டோம்நீயா மீன்றெடுத்ததாய்தந்தை பெண்டீர்மக்கள், சுழனக்கோவையாதல் கண்டுந்தேறார் களித்தமனத்தராய்க் கருதிவாழ்வீர், அழனம்மைநீக்குவிக்கு மனையனுக்கு மமருலகமாள்விக்கு மம்மானன்மேய, பழனம்பழனமே யென்பீராகிற் பயின்றெழுந்தபழவினைநோய் பாற்றலாமே. (௪)



ஊற்றுத்துறையொன்ப தன்னிக்ரேறி நோக்கவடைக்கும் போதுணரமாட்டீர், மாற்றுத்துறைவழிகொண் டோடாமுன்ன மாமனைவாழ்க்கை மகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டார் புசிங்கண்மூன்றும் வெவ்வழல்வாய்வீழ்விக்கும் வேந்தன்மேய, சோற்றுத்துறைசோற்றுத்துறை யென்பீராகிற் றுயர்நீங்கித்தூநெறிக்கட் சேரலாமே. (௫)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ் வையந்தன்னிற் கள்ளக்கடலி லழுந்திவாளா, நலஞ்சுழியாவெழுநெஞ்சே யின்பம்வேண்டி னம்பன்றன் னடியிணைக்கே நவில்வாயாகில், அலஞ்சுழிக்குமன்னுகந் தன்னுன்மேயவருமறையோடாறங்க மானார்கோயில், வலஞ்சுழியேவலஞ்சுழியே யென்பீராகில் வல்வினைகடீர்ந்துவானாளலாமே. (௬)

தண்டிகுண்டோதரன் பிங்கிருடி சார்ந்தபுகழ்நந்தி சங்குகன்னன், பண்டையுலகாளுடைத்தான்றுனும் பாரைபளத்தான் பல்லாண்டிசைப்பத், திண்டியெயிற்றுச் சிறுகட்பூதஞ் சிலபாடச்செங்கண் விடையொன்றூர்வான், கண்டியூர்கண்டியூ ரென்பீராகிற் கடுநரம்வல்வினையைக் கழற்றலாமே. (௭)

விடமூக்கப்பாம்பேபோற் கிந்திநெஞ்சே வெள்ளேற்றான்றன் றமனைக் கண்டபோதே குடமூக்கமாமுனிவர் போலச்சென்று மாதவத்தார்மனத்துள்ளார் மழுவாட்செல்வர், படமூக்கப்பாம்பணையிற் பள்ளியானும் பங்கயத்துமேலயனும் பாவிக்காணக், குடமூக்கேகுடமூக்கே யென்பீராகிற் கொடுவினைகடீர்ந்தரனைக் குறுகலாமே. (௮)

தண்காட்டாச்சந்தனமுந் தவளநீறுந் தழைபணுக்குக்குறுங்கொன்றைமாலைசூடிக், கண்காட்டாக்கருவரைபோ லனையகாஞ்சிக் காரமயிலஞ்சாயலார் கலந்துகாண, வெண்காட்டாக் காடகிடமாதின்றுள்ளிவிமியிரவாடு மிறைவர்மேய, வெண்காடேவெண்காடே யென்பீராகில் வீடாதவல்வினையை விட்டலாமே. (௯)

தந்தையார்தாயா ருடன்பிறந்தார் தாரமார்புத்திரரார் தாந்தாமாரோ, வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாமிதற்கேது மகிழவேண்டா, சிந்தையீருமக்கொன்று சொல்லக்கேண்மின் றிகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாம நமச்சிவாய வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியுநீ,
யொப்புடையமாதரு மொண்பொருளுநீ யொருகுலமுஞ்சுற்றமு
மோரூருநீ, துய்ப்பனவுமுய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயெ
ன்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, யிப்பொன்னீயிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்த செல்வனீயே. (௧)

வெம்பவருகிற்ப தன்றுகூற்றம் வெய்யவினைப்பகையும் பைய
நையு,மெம்பரிவுதீர்ந்தோ மிடுக்கணில்லோ மெங்கெழிலென்ஞாயி
றெளியோமல்லோ, மம்பவளச்செஞ்சடைமே லாறுசூடி யனலாடி
யானஞ்சு மாட்டுகந்த, செம்பவளவண்ணர்செங் குன்றவண்ணர் செ
வ்வானவண்ணரென் சிந்தையாரே. (௨)

ஆட்டுவித்தாலாரொருவ ராடாதாரே யடக்குவித்தாலாரொருவ
ரடங்காதாரே, யோட்டுவித்தாலாரொருவ ரோடாதாரே யுருகுவித்தா
லாரொருவ ருருகாதாரே, பாட்டுவித்தாலாரொருவர் பாடாதாரே ப
ணிவித்தாலாரொருவர் பணியாதாரே, காட்டுவித்தாலாரொருவர் கா
ணாதாரே காண்பாரார்கண்ணுதலாய்க் காட்டாக்காலே. (௩)

நற்பதத்தார்நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே நால்வேதத்
தப்பானின்ற, சொற்பதத்தார்சொற்பதமுங் கடந்துநின்ற சொலற்க
ரியசூழலா யிதுவுன்றன்மை, நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னு
ணிலாவாதபுலா லுடம்பே புகுந்துநின்ற, கற்பகமேயானுன்னை விடு
வேனல்லேன் கனகமாமணிநிறத்தெங் கடவுளானே. (௪)

திருக்கோயிலில்லாத திருவிலூருந் திருவெண்ணீறணியாத திரு
விலூரும், பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடுப
லதளிக ளில்லாவூரும், விருப்போடுவெண்சங்க மூதாவூரும் விதான
மும்வெண்கொடியு மில்லாவூரும், அருப்போடுமலர்பறித்திட் டுண்ணா
வூரு மவையெல்லாமூரல்ல வடவிகாடே. (௫)

திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகிற் தீவண்ணர்திறமொரு
காற் பேசாராகி, லொருகாலுந்திருக்கோயில் சூழாராகி லுண்பதன்
முன்மலர்பறித்திட் டுண்ணாராகி, லருநோய்கள்கெடவெண்ணீ றணி
யாராகி லளியற்றார்பிறந்தவா றேதோவென்னிற், பெருநோய்கண்
மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப் பிறப்பதற்கேதொழிலாகி யிறக்
கின்றாரே. (௬)



நின்னாவார்பிறரன்றி நீயேயானாய் நினைப்பார்கண்மனத்துக்
கோர் வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோ ரமுதமானாய் மறை
நான்குமானாயா றங்கமானாய், பொன்னானாய்மணியானாய் போகமா
னாய் பூமிமேற்புகழ்தக்க பொருளேயுன்னை, யென்னானாயென்னா
யென்னினல்லா லேழையேனென்சொல்லி யேத்துகேனே. (௭)

அத்தாவுன்னடியேனை யன்பாலார்த்தா யருணோக்கிற்றீர்த்தநீ ரா
ட்டிக்கொண்டா, யெத்தனையுமரியைநீ யெளியையானா யெனையாண்டு
கொண்டிரங்கி யேன்றுகொண்டாய், பித்தனேன்பேதையேன் பே
யேனாயேன் பிழைத்தனகளெத்தனையும் பொறுத்தாயன்றே, யித்தனை
யுமெம்பரமோ வையவையோ வெம்பெருமான்றிருக்கருணை யிருந்த
வாறே. (௮)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்
றமேபெரிதுடையேன் கோலமாய, நலம்பொல்லேனான்பொல்லே
ன் ஞானியல்லே னல்லாரோடிசைந்திலே னடுவேநின்ற, விலங்கலே
ல்விலங்கலா தொழிந்தேனல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிதும் பே
சவல்லே, னிலம்பொல்லே னிரப்பதே யீயமாட்டே னென்செய்வா
ன்றோன்றினே னேழையேனே. (௯)

சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடுவானாளத் தருவ
ரேனு, மங்குவாரவர்செல்வ மதிப்போமல்லோ மாதேவர்க்கேகாந்த
ரல்லாராகி, லங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயராயாவுரித்
துத்தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்ப
ராகி லவர்கண்டீர்நாம்வணங்குங் கடவுளாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஅடைவு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருப்பள்ளிவரைவில்லாப் புரமூன்றெய்து புலந்தழியச்சல
ந்தரனைப் பிளந்தான்பொற்சக், கரப்பள்ளிதிருக்காட்டுப் பள்ளிகள்
ளார் கமழ்கொல்லியறைப்பள்ளி கலவஞ்சாரற், சிரப்பள்ளிசிவப்பள்
ளி செம்பொன்பள்ளி செழுநனிபள்ளிதவப்பள்ளிசீரார், பரப்பள்ளி
யென்றென்று பகர்வோரெல்லாம் பரலோகத்தினிதாகப் பாலிப்
பாரே. (௧)

காவிரியின்கரைக்கண்டி வீரட்டானங் கடவூர்வீரட்டானங் கா
மருசீரதிகை, மேவியவீரட்டானம் வழுவைவீரட்டம் வியன்பறியல்

வீரட்டம் விடையூர்திக்கிடமாங், கோவலூர்வீரட்டங்கொறுக்கைவீ
ரட்டங் கோத்திட்டைகுடிவீரட் டானமிவைகூறி, நாவினவின்றுரை
ப்பார்க்கு நணுகச்செய்ன்று னமன்றமருஞ்சிவன்றமரென் றகல்வர்நன்
கே. (௨)

நற்கொடிமேல்விடையுயர்த்த நம்பன்செம்பங்குடிநல்லக்குடி
நளி நாட்டியத்தான்குடி, கற்குடிதென்களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக்குடிகடையக் குடிகாணுங்கால், விற்குடிவேள்விக்குடி
நல் வேட்டக்குடி வேதிகுடிமாணிகுடி விடைவாய்க்குடி, புற்குடி
மாகுடிதேவன்குடிநீலக்குடி புதுக்குடியும் போற்றவிடர் போகும
ன்றே. (௩)

பிறையூருஞ்சடைமுடியெம் பெருமானாரூர் பெரும்பற்றப்பு
லியூரும் பேராவூரு, நறையூருநல்லூரு நல்லாற்றூரு நாலூருஞ்சேற்
றூரு நாரையூரு, முறையூருமோத்தூரு மூற்றத்தூரு மளப்பூரோ
மாம்புலியூ ரொற்றியூருந், துறையூருந்துவையூருந் தோழூர்தானுந்
துடையூருந்தொழவிடர்க டொடராவன்றே. (௪)

பெருக்காறுசடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்கோயி
லெழுபதினோ டெட்டுமற்றுங், கரக்கோயில்கடிபொழில்சூழ் ஞாழற்
கோயில் கருப்பறியற்பொருப்பனைய கொகுடிக்கோயி, லிருக்கோ
திமறையவர்கள் வழிபட்டேத்து மிளங்கோயில்மணிக்கோயி லாலக்
கோயில், திருக்கோயில்சிவனுறையுங் கோயில்சூழ்ந்து தாழ்ந்திறைஞ்
சத்தீவினைக டீருமன்றே. (௫)

மலையார்தமகளோடுமா தேவன்சேரு மறைக்காடுவண்பொழில்
சூழ் தலைச்சங்காடு, தலையாலங்காடுதடங் கடல்சூழ்ந்தண் சாய்க்காடுதெ
ள்ளுபுனற் கொள்ளிக்காடு, பலர்பாடும்பழையனூ ராலங்காடு பனங்கா
டுபாவையர்கள் பாவநீங்க, விலையாடும்வளைதிளைக்கக் குடையும்பொய்
கை வெண்காடுமடையவினை வேறுமன்றே. (௬)

கடுவாயர்தமைநீக்கி யென்னையாட்கொள் கண்ணுதலோனண்ணு
மிட மண்ணல்வாயில், நெடுவாயினிறைவயல்சூழ் நெய்தல்வாயி னி
கழ்முல்லைவாயிலொடு ஞாழல்வாயில், மடுவார்தென்மதுரைநக ரால
வாயில் மறிகடல்சூழ்புனவாயில் மாடநீடு, குடவாயில்குணவாயி லா
னவெல்லாம் புகுவாரைக்கொடுவினைகள் கூடாவன்றே. (௭)

நாடகமாடிடநந்தி கேச்சரமாகாளேச்சர நாகேச்சரநாகளேச்
சரநன்கான, கோடீச்சரங்கொண்டீச்சரந் திண்டீச்சரங் குக்குடேச்



சரமக்கீச்சரங்கூறுங்கா, லாடகேச்சரமகத்தீச்சர மயனீச்சர மத்தீச்ச
ரஞ்சித்தீச்சர மந்தண்கான, லீடுதிரையிராமேச்சர மென்றென்றே
த்தி யிறைவனுறைசுரம்பலவு மியம்புவோமே. (௮)

கந்தமாதனங்கயிலை மலைகேதாரங் காளத்திகழுக்குன்றங் கண்ணா
ரண்ணா, மந்தமாம்பொழிற்சாரல் வடபற்பத மயேந்திரமாமலைநீல
மேமகூடம், விந்தமாமலைவேதஞ் சையமிக்க வியன்பொதியின்மலை
மேருவுதையமத்த, மிந்துசேகரனுறையு மலைகண்மற்று மேத்துவோ
மிடர்கெடநின் றேத்துவோமே. (௯)

நள்ளாறும்பழையாறுங் கோட்டாற்றோடு நலந்திகழுநாலாறுந்
திருவையாறுந், தென்னாறும்வளைகுளமுந் தளிக்குளமு நல்லிடைக்கு
ளமுந் திருக்குளத்தோடஞ்சைக்களம், விள்ளாதநெடுங்களம்வேட் க
ளநெல்லிக்கா கோலக்காவானைக்கா வியன்கோடிகா, கள்வார்ந்தகொ
ன்றையா னின்றவாறுங் குளங்களங்காவெனவனைத்துங் கூறுவோமே.

கயிலாயமலையெடுத்தான் கரங்களோடு சிரங்களுரநெரியக்கால்
விரலாற்செற்றோன், பயில்வாயபராய்த்துறை தென்பாலைத்துறை ப
ண்டெழுவர்தவத்துறை வெண்டுறைபைம்பொழிற், குயிலாலந்துறை
சோற்றுத்துறைபூந்துறை பெருந்துறையுங்குரங்காடு துறையினோடு,
மயிலாடுதுறைகடம்பத் துறையாவடு துறைமற்றுந்துறையனைத்தும்
வணங்குவோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## முதற்றிருமுறை.

### திருவங்கமாலை-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய், தலை-மாலைதலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத், தலையேநீவணங்காய். (௧)

கண்காள்காண்மின்களோ, கடல்-நஞ்சுண்டகண்டன்றன்னை
யெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ

செவிகாள்கேண்மின்களோ, சிவ-னெம்மிறைசெம்பவள [ளோ.
வெரிபோல்மேனிப் பிரான்றிறமெப்போதுஞ், செவிகாள்கேண்மின்க

மூக்கேநீமுரலாய், முது-காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய். (௨)

வாயேவாழ்த்துகண்டாய், மத-யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத் தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துகண்டாய்.

நெஞ்சேநீநினையாய், நிமிர்-புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலை மங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய். (௬)

கைகாள்கூப்பித்தொழீர், கடி-மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்தபரமனைக், கைகாள்கூப்பித்தொழீர். (௭)

ஆக்கையாற்பயனென், அரன்-கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ், வாக்கையாற்பயனென். ()

கால்களாற்பயனென், கறைக்-கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென். (௯)

உற்றாராருளரோ, வுயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக், குற்றாராருளரோ. (௧௦)

இறுமாந்திருப்பன்கொலோ, வீசன்-பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங்,கிறுமாந்திருப்பன்கொலோ

தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே, தேடிக்கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

---

## மூன்றாந் திருமுறை.

### திருவாலவாய்த்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்கு முன்னேதோன்றி முதிருஞ்சடைமுடிமேன் முகிழ்வெண்டிங்கள், வளைத்தானைவல்லசுரர் புரங்கண்மூன்றும் வரைசிலையாவாசுகிமா நாணாக்கோத்துத், துளைத்தானைச்சுடுசரத்தாற் றுவளநீறாத் தூமுத்தவெண்முறுவ லுமையோடாடித், திளைத்தானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே.

விண்ணுலகின்மேலார்கண் மேலான்றன்னை மேலாடுபுரமூன்றும் பொடிசெய்தானைப், பண்ணிலவுபைம்பொழில்சூழ் பழனத்தானைப் பசும்பொன்னினிறத்தானைப் பானீற்றானை, யுண்ணிலவுசடைக்கற்றைக் கங்கையாளைக் கரந்துமையோடொருங்கிருந்தான்றன்னைத், தெண்ணிலவுதென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௨)

நீர்த்திரளைநீள்சடைமே னிறைவித்தானை நிலமருவிநீரோடக் கண்டான்றன்னைப், பாற்றிரளைப்பயின்றாட வல்லான்றன்னைப் பகைத்



தெழுந்தவெங்கூற்றைப் பாய்ந்தான்றன்னைக், காற்றிரளாய்மேகத்தி னுள்ளேநின்று கடுங்குரலாயிடிப்பானைக் கண்ணோர்நெற்றித், தீத்திரளைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௩)

வானமிதுவெல்லா முடையான்றன்னை வரியரவக்கச்சானை வன்பேய்சூழக், கானமதினடமாட வல்லான்றன்னைக் கடைக்கணாலுமங்கை யுமைநோக்காவென்மேல், ஊனமதுவெல்லா மொழித்தான்றன்னை யுணர்வாகியடியேன துள்ளேநின்ற, தேனமுதத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௪)

ஊரானையுலகேழாய் நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானை யுமையோடென்றும், பேரானைப்பிறர்க்கென்று மரியான்றன்னைப் பிணக்காட்டினடமாடல் பேயோடென்றும், ஆரானையமரர்களுக் கமுதீந்தானை யருமறையானான்முகனு மாலும்போற்றுஞ், சீரானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. ()

மூவனைமூர்த்தியை மூவாமேனி யுடையானைமூவுலகுந் தானேயெங்கும், பாவனைப்பாவமறுப்பான்றன்னைப் படியெழுதலாகாத மங்கையோடு, மேவனைவிண்ணோர் நடுங்கக்கண்டு விரிகடலினஞ்சுண்டமுதமீந்த, தேவனைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௬)

துறந்தார்க்குத்தூநெறியாய் நின்றான்றன்னைத் துன்பந்துடைத்தாள வல்லான்றன்னை, யிறந்தார்களென்பே யணிந்தான்றன்னை யெல்லிநடமாட வல்லான்றன்னை, மறந்தார்மதின்மூன்று மாய்த்தான்றன்னை மற்றொருபற்றில்லா வடியேற்கென்றுஞ், சிறந்தானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௭)

வாயானைமனத்தானை மனத்துணின்ற கருத்தானைக்கருத்தறிந்து முடிப்பான்றன்னைத், தூயானைத்தூவெள்ளை யேற்றான்றன்னைச் சுடர்த்திங்கட்சடையானைத் தொடர்ந்துநின்றென், றாயானைத்தவமாய தன்மையானைத் தலையாயதேவாதி தேவர்க்கென்றுஞ், சேயானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௮)

பகைச்சுடராய்ப்பாவ மறுப்பான்றன்னைப் பழியிலியாய்நஞ்சமுண்டமிர்தீந்தானை, வகைச்சுடராய்வல்லசுரர் புரமட்டானை வளைவிலியாயெல்லார்க்கு மருள்செய்வானை, மிகைச்சுடராய்விண்ணவர்கண்

மேலைப்பால் மேலாயதேவாதி தேவர்க்கென்றுந், திகைச்சுடராந்தெ
ன்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௯)

மலையானைமாமேரு மன்னினானை வளர்புன்சடையானை வானோர்
தங்கள், தலையானையென்றலையி லுச்சியென்றுந் தாபித்திருந்தானைத்
தானேயெங்குந், தொலையாதவொருவனையு மில்லாதானைத் தோன்றாதா
ர்மதில்மூன்றுந் துளையவெய்த, சிலையானைத்தென்கூடற் றிருவாலவாய்
ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. (௧௦)

தூர்த்தனைத்தோள்முடிபத் திறுத்தான்றன்னைத் தொன்னரம்
பினின்னிசைகேட் டருள்செய்தானைப், பார்த்தனைப்பணிகண்டு பரி
ந்தான்றன்னைப் பரிந்தவர்க்குப்பாசுபத மீந்தான்றன்னை, யாத்தனைய
டியேனுக் கன்பன்றன்னை யளவிலாப்பல்லூழி கண்டுநின்ற, தீர்த்தனை
த்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே.

திருச்சிற்றம்பலம்.

## முதற்றிருமுறை.

### திருவாலவாய் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியர்வேதகீதர் விண்ணவ ரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவி யொருங்கிநின் கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய் படர்சடை மதியஞ்சூடும்
ஆதியேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௧)

நம்பனேநான்முகத்தாய் நாதனே ஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென் றேத்திநா னேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன் பேர்த்தினிப் பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௨)

ஒருமருந்தாகியுள்ளா யும்பரோ டுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய் பேரமு தின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளா யாளும்வல் வினைகடீர்க்கும்
அருமருந்தாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௩)

செய்யநின்கமலபாதஞ் சேருமா தேவர்தேவே
மையணிகண்டத்தானே மான்மறி மழுவொன்றேந்துஞ்
சைவனேசாலஞானங் கற்றறி விலாதநாயேன்
ஐயனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௪)



வெண்டலைகையிலேந்தி மிகவுமூர் பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லி யுண்டது நஞ்சுதன்னைப்
பண்டுனைநினையமாட்டாப் பளகனே னுளமதார
அண்டனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௫)

எஞ்சலில்புகலிதென்றென் றேத்திநா னேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றி மலரடி காணும்வண்ணம்
நஞ்சினைமிடற்றில்வைத்த நற்பொருட் பதமேநாயேற்
கஞ்சலென்றாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௬)

வழுவிலாதுன்னைவாழ்த்தி வழிபடுந் தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத் தெண்டிரை நஞ்சமுண்ட
குழகனேகோலவில்லீ கூத்தனே மாத்தாயுள்ள
அழகனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௭)

நறுமலர்நீருங்கொண்டு நாடொறு மேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத் திருவடிச் சேரும்வண்ணம்
மறிகடல்வண்ணன்பாகா மாமறை யங்கமாறும்
அறிவனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௮)

நலந்திகழ்வாயினூலாற் சருகிலைப் பந்தர்செய்த
சிலந்தியையரசதாள வருளினா யென்றுநின்னைக்
கலந்துடன்வந்துநின்றாள் கருதிநான் காணுமாறு
அலந்தனேனாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௯)

பொடிக்கொடுபூசிப்பொல்லாக் குரம்பையிற் புந்திபொன்றிப்
பிடிக்கநின்றுள்ளமென்றும் பிதற்றிநா னிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந் தெடுத்தலு மிருபதுதோ
ளடர்த்தனேயாலவாயி லப்பனே யருள்செய்யாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சொக்கநாதேசுவரர் - தேவியார் - மீனாட்சியம்மை.

## மூன்றாந்திருமுறை.

### திருப்பூவணம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந் தோன்றுந்தோன்றும் வளர்சடைமேலிளம
தியந் தோன்றுந்தோன்றுங், கடியேறுகமழ்கொன்றைக் கண்ணிதோ
ன்றுங் காதில்வெண்குழைதோடு கலந்துதோன்று, மிடியேறுகளிற்று

ரிவைப் போர்வைதோன்று மெழில்திகழுந்திருமுடியு மிலங்கித்தோன்றும், பொடியேறுதிருமேனி பொலிந்துதோன்றும் பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (௧)

ஆணாகிப்பெண்ணாய வடிவுதோன்று மடியவர்கட்காரமுத மாகித்தோன்றும், ஊணாகவூர்திரிவா னாகித்தோன்று மொற்றைவெண்பிறைதோன்றும் பற்றார்தம்மேற், சேணாகவரைவில்லா லெரித்தறோன்றுஞ் செற்றவர்தம்மெலும்பினாற் செறியச்செய்த, பூணாணு மரைநாணும் பொலிந்துதோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௨)

கல்லாலினீழலிற் கலந்துதோன்றுங் கவின்மறையோர்நால்வர்க்கு நெறிகளன்று, சொல்லாகச்சொல்லியவா தோன்றுந்தோன்றுஞ் சூழரவுமான்மறியுந் தோன்றுந்தோன்றும், அல்லாதகாலனைமுன் னடர்த்தறோன்று மைவகையானினைவார்பா லமர்ந்துதோன்றும், பொல்லாதபுலாலெலும்பு பூணாய்த்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௩)

படைமலிந்தமழுவாளு மானுந்தோன்றும் பன்னிரண்டுகண்ணுடைய பிள்ளைதோன்றும், நடைமலிந்தவிடையோடு கொடியுந்தோன்றும் நான்மறையினொலிதோன்றும் நயனந்தோன்றும், உடைமலிந்தகோவணமுங் கீளுந்தோன்று மூரல்வெண்சிரமாலை யுலாவித்தோன்றும், புடைமலிந்தபூதத்தின் பொலிவுதோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௪)

மயலாகுந்தன்னடியார்க் கருளுந்தோன்று மாசிலாப்புன்சடைமேன் மதியந்தோன்று, மியல்பாகவிடுபிச்சை யேற்றறோன்று மிருங்கடனஞ்சுண்டிருண்ட கண்டந்தோன்றுங், கயல்பாயக்கடுங்கலுழிக் கங்கைநங்கை யாயிரமாமுகத்தினொடு வானிற்றோன்றும், புயல்பாயச்சடைவிரித்த பொற்புத்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௫)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட பன்மலருநறும்புகையும் பரந்துதோன்றுஞ், சீராழித்தாமரையின் மலர்களன்ன திருந்தியமாநிறத்த சேவடிகடோன்றும், ஓராழித்தேருடைய விலங்கைவேந்த னுடல்துணித்தவிடர்பாவங் கெடுப்பித்தன்று, போராழிமுன்னீந்த பொற்புத்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௬)



தன்னடியார்க்கருள்புரிந்த தகவுதோன்றுஞ் சதுமுகனைத்தலையரிந்த தன்மைதோன்று, மின்னனையநுண்ணிடையாள் பாகந்தோன்றும் வேழத்தினுரிவிரும்பிப் போர்த்தறோன்றும், துன்னியசெஞ்சடைமேலோர் புனலும்பாம்புந் தூயமாமதியுடனே வைத்தறோன்றும், பொன்னனையதிருமேனி பொலிந்துதோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௭)

செறிகழலுந்திருவடியுந் தோன்றுந்தோன்றுந் திரிபுரத்தையெரிசெய்த சிலையுந்தோன்றும், நெறியதனைவிரித்துரைத்த நீர்மைதோன்றும் நெற்றிமேற்கண்தோன்றும் பெற்றந்தோன்று, மறுபிறவியறுத்தருளும் வகையுந்தோன்று மலைமகளுஞ்சலமகளு மலிந்துதோன்றும், பொறியரவுமிளமதியும் பொலிந்துதோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௮)

அருப்பொட்டுமுலைமடவாள் பாகந்தோன்று மணிகிளருமுருமென்ன வடர்க்குங்கேழன், மருப்பொட்டுமணிவயிரக் கோவைதோன்று மணமலிந்தநடந்தோன்று மணியார்வையைத், திருக்கொட்டிநின்றதோர் திறமுந்தோன்றுஞ் செக்கர்வானொளிமிக்குத் திகழ்ந்தசோதிப், பொருப்பொட்டிநின்றதிண் புயமுந்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௯)

ஆங்கணைந்தசண்டிக்கு மருளியன்று தன்முடிமேலலர்மாலை யளித்தறோன்றும், பாங்கணைந்துபணிசெய்வார்க் கருளியன்று பல்பிறவியறுத்தருளும் பரிசுதோன்றுங், கோங்கணைந்தகூவிளமு மதமத்தமுங் குழற்கணிந்தகொள்கையொடு கோலந்தோன்றும், பூங்கணைவேளுருவழித்த பொற்புத்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௧௦)

ஆரொருவருள்குவா ருள்ளத்துள்ளே யவ்வுருவாய்நிற்கின்ற வருளுந்தோன்றும், வாருருவப்பூண்முலைநன் மங்கைதன்னை மகிழ்ந்தொருபால்வைத்துகந்த வடிவுதோன்றும், நீருருவக்கடலிலங்கை யரக்கர்கோனை நெறுநெறெனவடர்த்திட்ட நிலையுந்தோன்றும், போருருவக்கூற்றுதைத்த பொற்புத்தோன்றும் பொழில்திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பூவணநாதர் - தேவியார் - மின்னாம்பிகையம்மை.

## முதற்றிருமுறை.

### திருவிராமேச்சரம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்ககில்லா வரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டு மதியினால்மால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலே நினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்த திருவிராமேச்சரமே. (௧)

முற்றினநாள்களென்று முடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலே யுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயில் திருவிராமேச்சரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சே படர்சடையீசன்பாலே. (௨)

கடலிடைமலைகடம்மா லடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிற் திருவிராமேச்சரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற் சுழல்கின்றேன்றூய்மையின்றி
யுடலிடைநின்றும்பேரா வைவராட்டுண்டேனே. (௩)

குன்றுபோற்றோளுடைய குணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால் வேட்கையாற்செய்தகோயில்
நன்றுபோல்நெஞ்சமேநீ நன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய் திருவிராமேச்சரமே. (௪)

வீரமிக்கெயிறுகாட்டி விண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்று கொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்த திருவிராமேச்சரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற் கூடுவார்குறிப்புளாரே. (௫)

ஆர்வலநம்மின்மிக்கா ரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப் பொருதவர்தம்மைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய் திருவிராமேச்சரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீ செஞ்சடையெந்தைபாலே. (௬)

வாக்கினாலின்புரைத்து வாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினாற்புடைத்தவர்க ளுயிர்தனையுண்டுமால்தான்
றேக்குநீர்செய்தகோயில் திருவிராமேச்சரத்தை
நோக்கினால்வணங்குவார்க்கு நோய்வினைநணுகுமன்றே. (௭)



பலவுநாடீமைசெய்து பார்தன்மேற்குழுமிவந்து
கொலையிலார்கொடியராய வரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலையினான்செய்தகோயில் திருவிராமேச்சரத்தைத்
தலையினால்வணங்குவார்கள் தாழ்வராத்தவமதாமே. (௮)

கோடிமாதவங்கள்செய்து குன்றினார்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தா லெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயில் திருவிராமேச்சரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீ நன்னெறியாகுமன்றே. (௯)

வன்கண்ணர்வாளரக்கர் வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்று போர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயில் திருவிராமேச்சரத்தைத்
தங்களாலெய்தவல்லார் தாழ்வராத்தலைவர்பாலே. (௧௦)

வரைகளொத்தேயுயர்ந்த மணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றவொடுக்கி மீண்டுமால்செய்தகோயில்
திரைகள்முத்தால்வணங்குந் திருவிராமேச்சரத்தை
யுரைகள்பத்தா லுரைப்பா ருள்குவாரன்பினாலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-இராமலிங்கேசுவரர்-தேவியார்-பருவதவர்த்தனியம்மை.

---

## மூன்றாந் திருமுறை.

### நின்ற - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங்குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந்தம்முருவுந் தாமேயாகி, நெருநலையாயின்றாகி நாளையாகி நிமிர்புன்சடையடிக ணின்றவாறே. (௧)

மண்ணாகிவிண்ணாகி மலையுமாகி வயிரமுமாமாணிக்கந் தானேயாகிக், கண்ணாகிக்கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக்கலைஞானந் தானேயாகிப், பெண்ணாகிப்பெண்ணுக்கோ ராணுமாகிப் பிரளயத்துக் கப்பாலோ ரண்டமாகி, யெண்ணாகியெண்ணுக்கோ ரெழுத்துமாகி யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்றவாறே. (௨)

கல்லாகிக்களறாகிக் கானுமாகிக் காவிரியாய்க்காலாறாய்க் கழியுமாகிப், புல்லாகிப்புதலாகிப் பூடுமாகிப் புரமாகிப்புரமூன்றுங் கெடு

நீதானாகிச், சொல்லாகிச்சொல்லுக்கோர் பொருளுமாகிச் சுலாவாகிச்சுலாவுக்கோர் சூழலாகி, நெல்லாகிநிலனாகி நீருமாகி நெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிக ணின்றவாறே. (௩)

காற்றாகிக்கார்முகிலாய்க் காலமூன்றாய்க் கனவாகிநனவாகிக் கங்குலாகிக், கூற்றாகிக்கூற்றுதைத்த கொல்களிறுமாகிக் குரைகடலாய்க்குரைகடற்கோர் கோமானுமாய், நீற்றானாய்நீறேற்ற மேனியாகி நீள்விசும்பாய்நீள்விசும்பி னுச்சியாகி, யேற்றானாயேறூர்ந்த செல்வனாகி யெழுஞ்சுடராயெம்மடிக ணின்றவாறே. (௪)

தீயாகிநீராகித் திண்மையாகித் திசையாகியத்திசைக்கோர் தெய்வமாகித், தாயாகித்தந்தையாய்ச் சார்வுமாகித் தாரகையுஞாயிறுந் தண்மதியுமாகிக், காயாகிப்பழமாகிப் பழத்தினின்ற விரதங்களுகர்வானுந் தானேயாகி, நீயாகிநானாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிக ணின்றவாறே. (௫)

அங்கமாயாதியாய் வேதமாகி யருமறையோடைம்பூதந் தானேயாகிப், பங்கமாய்ப்பலசொல்லுந் தானேயாகிப் பான்மதியோடாதியாய்ப் பான்மையாகிக், கங்கையாய்க்காவிரியாய்க் கன்னியாகிக் கடலாகிமலையாகிக் கழியுமாகி, யெங்குமாயேறூர்ந்த செல்வனாகி யெழுஞ்சுடராயெம்மடிக ணின்றவாறே. (௬)

மாதாபிதாவாகி மக்களாகி மறிகடலுமால்விசும்புந் தானேயாகிக், கோதாவிரியாய்க் குமரியாகிக் கொல்புலித்தோலாடைக் குழகனாகிப், போதாயமலர்கொண்டு போற்றிநின்று புனைவார்பிறப்பறுக்கும் புனிதனாகி, யாதானுமெனநினைந்தார்க் கெளிதேயாகி யழல்வண்ணவண்ணர்தா நின்றவாறே. (௭)

ஆவாகியாவினி லைந்துமாகி யறிவாகியழலாகி யவியுமாகி, நாவாகிநாவுக்கோ ருரையுமாகி நாதனாய்வேதத்தி னுள்ளானாகிப், பூவாகிப்பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குளால்வாசமாய் நின்றானாகித், தேவாகித்தேவர் முதலுமாகிச் செழுஞ்சுடராய்ச்சென்றடிக ணின்றவாறே.()

நீராகிநீளகலந் தானேயாகி நிழலாகிநீள்விசும்பி னுச்சியாகிப், பேராகிப்பேருக்கோர் பெருமையாகிப் பெருமதில்கண்மூன்றினையு மெய்தானாகி, யாரேனுந்தன்னடைந்தார் தம்மையெல்லா மாட்கொள்ளவல்லவெம் மீசனார்தாம், பாராகிப்பண்ணாகிப் பாடலாகிப் பரஞ்சுடராய்ச்சென்றடிக ணின்றவாறே. (௯)



மாலாகிநான்முகனாய் மாபூதமாய் மருக்கமாய்ருக்கமாய் மகிழ்வுமாகிப், பாலாகியெண்டிசைக்கு மெல்லையாகிப் பரப்பாகிப்பரலோகந் தானேயாகிப், பூலோகபுவலோக சுவலோகமாய்ப் பூதங்களாய்ப்புராணன் றானேயாகி, யேலாதனவெலா மேல்விப்பானா யெழுஞ்சுடராயெம்மடிக ணின்றவாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆமயந்தீர்த்தடியேனை யாளாக்கொண்டா ரதிகைவீரட்டானமாட்சிகொண்டார், தாமரையோன்சிரமரிந்து கையிற்கொண்டார் தலையதனிற்பலிகொண்டார் நிறைவாந்தன்மை, வாமனனார்மாகாயத் துதிரங்கொண்டார் மானிடங்கொண்டார்வலங்கை மழுவாட்கொண்டார், காமனையுமுடல்கொண்டார் கண்ணாலேக்கிக் கண்ணப்பர்பணியுங்கொள் கபாலியாரே. (௧)

மூப்புரிநூல்வரைமார்பின் முயங்கக்கொண்டார் முதுகேழன்முளைமருப்புங் கொண்டார்பூணாச், செப்புருவமுலைமலையாள் பாகங்கொண்டார் செம்மேனிவெண்ணீறு திகழக்கொண்டார், துப்புரவார் சுரிசங்கின் றோடுகொண்டார் சுடர்முடிசூழ்ந்தடியமரர் தொழவுங்கொண்டா, ரப்பலிகொண்டாயிழைபா ரன்புக்கொண்டா ரடியேனையாளுடைய வடிகளாரே. (௨)

முடிகொண்டார்முளையிளவெண் டிங்களோடு மூசுமிளநாக முடனுக்கொண்டார், அடிகொண்டார்சிலம்பலம்பு கழலுமார்ப்ப வடனுக்கொண்டார், வடிகொண்டார்திலங்குமழுக்காதமுயலகனை யடிக்கீழ்க்கொண்டார், மழு வலக்கைக்கொண்டார் மாலையிடப்பாகத்தே மருவக்கொண்டார், கங்காளந் தோண்மேற்கொண்டார் கொலைதீர்த்தடியேனை யாட்கொண்டாரே. (௩)

பொக்கணமும்புலித்தோலும் புயத்திற்கொண்டார் பூதப்படைகள்புடை சூழக்கொண்டார், அக்கினொடுபடவரவ மரைமேற்கொண்டா ரனைத்துலகும்படைத்தவையு மடங்கக்கொண்டார், கொக்கிறகுங் கூவிளமுங் கொண்டைகொண்டார் கொடியானையடலாழிக் கிரையாக்கொண்டார், செக்கர்நிறத்திருமேனி திகழக்கொண்டார் செடியேனையாட்கொண்ட சிவனார்தாமே. (௪)

அந்தகனையயிற்சூலத் தழுத்திக்கொண்டா ரருமறையைத்தேர்க்குதிரை யாக்கிக்கொண்டார், சுந்தரனைத் துணைக்கவரி வீசக்கொண்டார் சுடுகாடுநடமாடு மிடமாக்கொண்டார், மந்தரநற்பொருசிலையா வளைத்துக்கொண்டார் மாகாளன்வாசல்காப் பாகக்கொண்டார், தந்திரமந்திரத்தா யருளிக்கொண்டார் சமண்டீர்த்தென்றன்னையாட் கொண்டார்தாமே. (௫)

பாரிடங்கள்பலகருவி பயிலக்கொண்டார் பவளநிறங்கொண்டார் பளிங்குங்கொண்டார், நீரடங்குசடைமுடிமே னிலாவுங்கொண்டார் நீலநிறங்கோலநிறை மிடற்றிற்கொண்டார், வாரடங்குவனமுலையார் மையலாகி வந்திட்டபலிகொண்டார் வளையுங்கொண்டா, ரூரடங்க வொற்றிநகர் பற்றிக்கொண்டா ருடலுறுநோய்தீர்த்தென்னை யாட்கொண்டாரே. (௬)

அணிதில்லையம்பலமா டரங்காக்கொண்டா ராலாலவருநஞ்ச மமுதாக்கொண்டார், கணிவளர்தார்ப்பொன்னிதழிக் கமழ்தார்கொண்டார் காதலார்கோடிகலந் திருக்கைகொண்டார், மணிபணத்தவரவந்தோள் வளையக்கொண்டார் மால்விடைமேனெடுவீதி போதக்கொண்டார், துணிபுலித்தோலினையாடை யுடையாக்கொண்டார் சூலங்கைக்கொண்டார்தொண் டெனைக்கொண்டாரே. (௭)

படமூக்கப்பாம்பணையா னோடுவானோன் பங்கயனென்றங்கவரைப் படைத்துக்கொண்டார், குடமூக்கிற்கீழ்க்கோட்டங் கோயில்கொண்டார் கூற்றுதைத்தோர்வேதியனை யுய்யக்கொண்டார், நெடுமூக்கிற்கரியினுரி மூடிக்கொண்டார் நினையாதபாவிகளை நீங்கக்கொண்டா, ரிடமாக்கியிடைமருதங் கொண்டார்பண்டே யென்னையிந்நாளாட்கொண்ட விறைவர்தாமே. (௮)

எச்சனிணைத்தலைகொண்டார் பகன்கண்கொண்டா ரிரவிகளிலொருவன்பல் லிறுத்துக்கொண்டார், மெச்சன்வியாத்திரன்றலையும் வேருக்கொண்டார் விறலங்கிகரங்கொண்டார் வேள்விகாத்து, வுச்சநமன்றாளறுத்தார் சந்திரனையுதைத்தா ருணர்விலாத்தக்கன்றன் வேள்வியெல்லாம், அச்சமெழவழித்துக்கொண் டருளுஞ்செய்தா ரடியேனையாட்கொண்ட வமலர்தாமே. (௯)

சடையொன்றிற்கங்கையையுந் தரித்துக்கொண்டார் சாமத்தினிசைவீணை தடவிக்கொண்டார், உடையொன்றிற்புள்ளியுழைத் தோலுங்கொண்டா ருள்குவாருள்ளத்தை யொருக்கிக்கொண்டார், கடை



முன்றிற்பலிகொண்டார் கனலுங்கொண்டார் காபாலவேடங் கருதிக்கொண்டார், விடைவென்றிக்கொடியதனின் மேவக்கொண்டார் வெந்துயரந்தீர்த்தென்னை யாட்கொண்டாரே. (௧௦)

குராமலரோடராமதியஞ் சடைமேற்கொண்டார் குடமுழநந்தீசனை வாசகனாக்கொண்டார், சிராமலைதஞ்சேர்விடமாத் திருந்தக்கொண்டார் தென்றனெடுந்தேரோனைப் பொன்றக்கொண்டார், பராபரனென்பதுதமது பேராக்கொண்டார் பருப்பதங்கைக்கொண்டார் பயங்கள்பண்ணி, யிராவணனென்றவனைப்பே ரியம்பக்கொண்டா ரிடருறுநோய்தீர்த்தென்னை யாட்கொண்டாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## க்ஷேத்திரக்கோவை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர், கொல்லிக்குளிரறைப் பள்ளிகோவல் வீரட்டங்கோகரணங் கோடிகாவு, முல்லைப்புறவ முருகன்பூண்டி முழையூர்பழையாறை சத்திமுற்றங், கல்லிற்றிகழ்சீரார் காளத்தியுங் கயிலாயநாதனையே காணலாமே. (௧)

ஆரூர்மூலத்தான மானைக்காவு மாக்கூறிற்றான்றோன்றி மாடமாவூர், பேரூர்பிரமபுரம் பேராவூரும் பெருந்துறைகாம்பீலி பிடவூர்பேணுங், கூரார்கொறுக்கை வீரட்டானமுங் கோட்டூர்குடமூக்குக் கோழம்பமுங், காரார்கழுக்குன்றுங் கானப்பேருங் கயிலாயநாதனையே காணலாமே. (௨)

இடைமருதீங்கோ யிராமேச்சர மின்னம்பரேரிடவை யேமப்பேறூர், சடைமுடிசாலைக் குடிதக்களூர் தலையாலங்காடு தலைச்சங்காடு, கொடுமுடிகுற்றாலங் கொள்ளம்பூதூர் கோத்திட்டைகோட்டாறு கோட்டுக்காடு, கடைமுடிகானூர் கடம்பந்துறை கயிலாயநாதனையே காணலாமே. (௩)

எச்சிலிளம ரோமநல்லூ ரிலம்பையங்கோட்டூ ரிறையான்சேரி, யச்சிறுபாக்க மளப்பூரம் பராவடுதண்டுறை யழுந்தூராறைக், கச்சினங்கற்குடி கச்சூராலக் கோயில்கரவீரங் காட்டுப்பள்ளி, கச்சிப்பலதளியு மேகம்பத்துங் கயிலாயநாதனையே காணலாமே. (௪)

கொடுங்கோளூரஞ்சைக் களஞ்செங்குன்றூர் கொங்கணங்குன்றியூர் குரக்குக்காவு, நெடுங்களநன்னில நெல்லிக்காவு நின்றியூர்நீடூர் நிய

மநல்லூ, ரிடும்பாவனமெழுமூரேமூர்தோழூ ரெறும்பியூரேராருமேம கூடங், கடம்பையிளங்கோயி றன்னிலுள்ளுங் கயிலாயநாதனையே காணலாமே. (ரு)

மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர் வக்கரைமந்தாரம் வாரணாசி, வெண்ணிவிளத்தொட்டி வேள்விக்குடி விளமர்விராடபுரம் வேட்களத்தும், பெண்ணையருட்டுறைதண் பெண்ணாகடம் பிரம்பில்பெரும்புலியூர் பெருவேளூருங், கண்ணைகளர்க்காறை கழிப்பாலையுங் கயிலாயநாதனையே காணலாமே. (சா)

வீழிமிழலைவெண்காடு வேங்கூர்வேதி குடிவிசயமங்கை வியலூ, ராழியகத்தியான்பள்ளி யண்ணாமலை யாலங்காடுமரதைப்பெரும், பாழி பழனம் பனந்தாட்பாதாள் பராய்த்துறைபைஞ்ஞீலி பனங்காட்டூர்தன், காழிகடனாகைக் காரோணத்துங் கயிலாயநாதனையே காணலாமே.

உஞ்சேனை மாகாளமூற லோத்தூருருத்திரகோடி மறைக்காட்டுள்ளு, மஞ்சாரிபொதியின்மலை தஞ்சைவழுவூர் வீரட்டமாதானங் கேதாரத்தும், வெஞ்சமாக்கூடல் மீயச்சூர்வை காவேதிசுரம்விவிசுரம் வெற்றியூருங், கஞ்சனூர்கஞ்சாறு பஞ்சாக்கையுங் கயிலாயநாதனையே காணலாமே. (அ)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர் செம்பொன்பள்ளி தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை, கொண்டீச்சரங்கூந்தலூர் கூழையூர்கூடல் குறாவூர்வெள்ளடை குமரிகொங்கு, அண்டர்தொழுமதிகை வீரட்டானமையாறசோகந்தி யாமாத்தூருங், கண்டியூர்வீரட்டங் கருகாவூருங் கயிலாயநாதனையே காணலாமே. (கூ)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு நாரையூர்நாகேச்சர நல்லூர்நல்ல, துறையூர்சோற்றுத்துறை சூலமங்கை தோணிபுரந்துருத்தி சோமீச்சர, முறையூர்கடலொற்றி யூரூற்றத்தூ ரோமாம்புலியூரோ ரேடகத்துங், குறையூர்கருப்பறியல் கன்றாப்பூருங் கயிலாயநாதனையே காணலாமே. (கo)

புலிவலம்புத்தூர் புகலூர்புன்கூர் புறம்பயம்பூவணம் பொய்கைநல்லூர், வலிவலமாற்பேறு வாய்மூர்வைகல் வலஞ்சுழிவாஞ்சியம் மருகல்வன்னி, நிலமலிநெய்த்தானத்தோ டெத்தானத்து நிலவுபெருக்கோயில்பல கண்டாற்றொண்டீர், கலிவலிமிக்கோனைக்கால் விரலாற் செற்ற கயிலாயநாதனையே காணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.



முதற்றிருமுறை.

குறைந்த - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிலேன்புலன்களைந்தும் வென்றவர்வளாகந்தன்னுட்
சென்றிலேனாதலாலே செந்நெறியதற்குஞ்சேயே
னின்றுளேனாளும்புகின்றே னீசனேனீசனேயோ
இன்றுளேனாளையில்லே னென்செய்வான்றோன்றினேனே. (க)

கற்றிலேன்கலைகள்ஞானங் கற்றவர்தங்களோடும்
உற்றிலேனாதலாலே யுணர்வுக்குஞ்சேயனானேன்
பெற்றிலேன்பெருந்தடங்கண் பேதைமார்தமக்கும்பொல்லேன்
எற்றுளேனிறைவனேநா னென்செய்வான்றோன்றினேனே. (உ)

மாட்டினேன்மனத்தைமுன்னே மறுமையையுணரமாட்டேன்
மூட்டினேன்முன்னைநாளே முதல்வனைவணங்கமாட்டேன்
பாட்டினாய்போலநின்று பற்றதாம்பாவந்தன்னை
யீட்டினேன்களையமாட்டே னென்செய்வான்றோன்றினேனே. (ங)

களைக்கடந்தோதமேறுங் கடல்விடமுண்டகண்டன்
உளைக்கடந்தோதுநீர்மை யுணர்ந்திலேனாதலாலே
யளைக்கிடந்தலைசயுநாக மசைப்பனேயின்பவாழ்க்கைக்
கிளைக்கிடந்துருகுகின்றே னென்செய்வான்றோன்றினேனே. (ச)

செம்மைவெண்ணீறுபூசுஞ் சிவனவன்றேவதேவன்
வெம்மைநோய்வினைகடீர்க்கும் விகிர்தனுக்கார்வமெய்தி
யம்மைநின்றடிமைசெய்யா வடிவிலாமுடிவில்வாழ்க்கைக்
கிம்மைநின்றுருகுகின்றே னென்செய்வான்றோன்றினேனே. (ரு)

பேச்சொடுபேச்சுக்கெல்லாம் பிறர்தமைப்புறமேபேசக்
கூச்சிலேனாதலாலே கொடுமையைவிடுமாறென்றே
நாச்சொல்லிநாளுமூர்த்தி நன்மையையுணரமாட்டேன்
எச்சுளேனின்றுமெய்யே னென்செய்வான்றோன்றினேனே. (சா)

தேசனைத்தேசமாகுந் திருமாலோர்பங்கன்றன்னைப்
பூசனைப்புனிதன்றன்னைப் புணரும்புண்டரீகத்தானை
நேசனைநெருப்பன்றன்னை நிவஞ்சகத்தகன்றசெம்மை
யீசனையறியமாட்டே னென்செய்வான்றோன்றினேனே. (எ)

விளைக்கின்றவினையைநோக்கி வெண்மயிர்விரவிமேலு
முளைக்கின்றவினையைப்போக முயல்கின்றேனியலவெள்ளந்

நினைக்கின்றமுடியினான்றன் திருவடிபரவமாட்டா
நினைக்கிலேனிருமியூன்றி யென்செய்வான்றோன்றினேனே. (௮)

விளைவறிவிலாமையாலே வேதனைக்குழியிலாழ்ந்து
களைகணுமில்லேனெந்தாய் காமரங்கற்றுமில்லேன்
தளையவிழ்கோதைநல்லார் தங்களோடின்பமெய்த
இளையனுமல்லேனெந்தா யென்செய்வான்றோன்றினேனே. (௯)

வெட்டனவுடையனாகி வீரத்தான்மலையெடுத்த
துட்டனைத்துட்டுத்தீர்த்துச் சுவைபடக்கீதங்கேட்ட
அட்டமாமூர்த்தியாய வாதியையோதிநாளும்
எட்டனையெட்டமாட்டே னென்செய்வான்றோன்றினேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## குறைந்த - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தம்மானங்காப்பதாகித் தையலார்வலையுளாழ்ந்து
அம்மானையமுதன்றன்னை யாதியையந்தமாய
செம்மானவொளிகொண்மேனிச் சிந்தையுளொன்றிநின்ற
எம்மானைநினையமாட்டே னென்செய்வான்றோன்றினேனே (௧)

மக்களேமணந்ததார மவ்வயிற்றவரையோம்புஞ்
சிக்குளேயழுந்தியீசன் றிறம்படேன்றவமதோரேன்
கொப்புளேபோலத்தோன்றி யதனுளேமறையக்கண்டும்
இக்களேபரத்தையோம்ப வென்செய்வான்றோன்றினேனே. (௨)

கூழையேனாகமாட்டேன் கொடுவினைக்குழியில்வீழ்ந்து
ஏழினின்னிசையினாலு மிறைவனையேத்தமாட்டேன்
மாழையொண்கண்ணினல்ல மடந்தைமார்தமக்கும்பொல்லேன்
ஏழையேனாகிநாளு மென்செய்வான்றோன்றினேனே. (௩)

முன்னையென்வினையினாலே மூர்த்தியைநினையமாட்டேன்
பின்னைநான்பித்தனாகிப் பிதற்றுவன்பேதையேனான்
என்னுளேமன்னிநின்ற சீர்மையதாயினானை
யென்னுளேநினையமாட்டே னென்செய்வான்றோன்றினேனே. (௪)

கறையணிகண்டன்றன்னைக் காமரங்கற்றுமில்லேன்
பிறைநுதற்பேதைமாதர் பெய்வளையார்க்குமல்லேன்
மறைநவில்நாவினானை மன்னிநின்றிறைஞ்சிநாளு
மிறையையுமேத்தமாட்டே னென்செய்வான்றோன்றினேனே. (௫)



வளைத்துநின்றைவர்கள்வர் வந்தெனைநடுக்கஞ்செய்யத்
தளைத்துவைத்துலையையேற்றித் தழலெரிமடுத்தநீரில்
திளைத்துநின்றாடுகின்ற வாமைபோற்றெளிவிலாதேன்
இளைத்துநின்றாடுகின்றே னென்செய்வான்றோன்றினேனே (௬-௭-௮-௯-௰)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதிபாட்டிக் குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேறநோக்கி யீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதே காலத்தைக்கழித்தவாறே. (௧)

பின்னிலேன்முன்னிலேனான் பிறப்பறுத்தருள்செய்வானே
யென்னிலேனாயினேனா னிளங்கதிர்ப்பயலைத்திங்கட்
சின்னிலாவெறிக்குஞ்சென்னிச் சிவபுரத்தமரரேறே
நின்னலால்களைகணோ நீறுசேர்கலத்தானே. (௨)

கள்ளனேன்கள்ளத்தொண்டாய்க் காலத்தைக்கழித்துப்போக்கித்
தெள்ளியேனாகிநின்று தேடினேனாடிக்கண்டேன்
உள்குவாருள்கிற்றெல்லா முடனிருந்தறிதியென்று
வெள்கினேன்வெள்கிநாணும் விலாவிறச்சிரித்திட்டேனே (௩)

உடம்பெனுமனையகத்து ளுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டி யுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படுஞானத்தீயா லெரிகொளவிருந்துநோக்கிற்
கடம்பமர்காளைதாதை கழலடிகாணலாமே. (௪)

வஞ்சப்பெண்ணரங்குகோயில் வாளெயிற்றரவந்துஞ்சா
வஞ்சப்பெண்ணிருந்தசூழல் வான்றவழ்மதியந்தோயும்
வஞ்சப்பெண்வாழ்க்கையாளேன் வாழ்வினைவாழலுற்று
வஞ்சப்பெண்ணுறக்கமானேன் வஞ்சனேனென்செய்கேனே. (௫)

உள்குவாருள்ளத்தானை யுணர்வெனும்பெருமையானை
யுள்கினேனானுங்காண்பா னுருகினேனூறியூறி
யெள்கினேனெந்தையெம்மா னிருதலையினும்வேகின்ற
கொள்ளிமேலெறும்பென்னுள்ள மெங்ஙனங்கூடுமாறே. (௬)

மோத்தையைக்கண்டகாக்கை போலவல்வினைகள்மொய்த்துன்
வார்த்தையைப்பேசலொட்டா மயக்கநான்மயங்குகின்றேன்
சீத்தையைச்சிதம்புதன்னைச் செடிகொணோய்வடிவொன்றில்லா
ஊத்தையைக்கழிக்கும்வண்ண முணர்வுதாவுலகமூர்த்தி. (௭)

அங்கத்தைமண்ணுக்காக்கி யார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப் பாவித்தேன்பரமாநின்னைச்
சங்கொத்தமேனிச்செல்வா சாதனாணாயேனுன்னை
யெங்குற்றாயென்றபோதா விங்குற்றேனென்கண்டாயே. (௮)

வெள்ளநீர்ச்சடையனார்தாம் வினவுவார்போலவந்தென்
உள்ளமேபுகுந்துநின்றார்க் குறங்குநான்புடைகள்போந்து
கள்ளரோபுகுந்தீரென்னக் கலந்துதானோக்கிநக்கு
வெள்ளரோமென்றுநின்றார் விளங்கிளம்பிறையனாரே. (௯)

பெருவிரலிறைதானூன்றப் பிறையெயிறிலங்கவங்காந்
தருவரையனையதோளா னரக்கனன்றலறிவீழ்ந்தான்
இருவருமொருவனாய வுருவமங்குடையவள்ளல்
திருவடிசுமந்துகொண்டு காணநான்றிரியுமாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மருளவாமனத்தனாகி மயங்கினேன்மதியிலாதேன்
இருளவாவறுக்குமெந்தை யிணையடிநீழலென்னும்
அருளவாப்பெறுதலின்றி யஞ்சிநானலமந்தேற்குப்
பொருளவாத்தந்தவாறே போதுபோய்ப்புலர்ந்ததன்றே. (௧)

மெய்ம்மையாமுழவைச்செய்து விருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப் பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டு தகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பராகிற் சிவகதிவிளையுமன்றே. (௨)

எம்பிரானென்றசேகொண் டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானாட்டவாடி யென்னுளேயுழிதர்வேனை
யெம்பிரானென்னைப்பின்னைத் தன்னுளேகாக்குமென்றால்
எம்பிரானென்னிலல்லா லென்செய்கேனேழையேனே. (௩)



காயமேகோயிலாகக் கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாக மனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலா நிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்றவிக்காட்டினோமே. (௪)

வஞ்சகப்புலையனேனை வழியறத்தொண்டிற்பூட்டி
யஞ்சலென்றாண்டுகொண்டா யதுவுநின்பெருமையன்றே
நெஞ்சகங்கனியமாட்டே னின்னையுள்வைக்கமாட்டே
னஞ்சிடங்கொண்டகண்டா வென்னெனநன்மைதானே. (௫)

நாயினுங்கடைப்பட்டேனை நன்னெறிகாட்டியாண்டா
யாயிரமரவமார்த்த வமுதனேயமுதமொத்து
நீயுமென்னெஞ்சினுள்ளே நிலாவினாய்நிலாவினிற்க
நோயவைசாருமாகி னோக்கிநீயருள்செயாயே. (௬)

விள்ளத்தானொன்றுமாட்டேன் விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநுன்னை வாய்மடுத்துண்டிடாமே
யுள்ளத்தேநிற்றியேனு முயிர்ப்புளேவருதியேனுங்
கள்ளத்தேநிற்றியம்மா வெங்ஙனங்காணுமாறே. (௭)

ஆசைவன்பாசமெய்தி யங்குற்றேனிங்குற்றேனான்
ஊசலாட்டுண்டுவாளா வழுந்துநானுழிதராமே
தேசனேதேசமூர்த்தி திருமறைக்காடுமேய
ஈசனேயுன்றன்பாத மேத்துமாறருளெம்மானே. (௮)

நிறைவிலேனேசமில்லே னினைவிலேன்வினையின்பாச
மறைவிலேபுறப்பட்டேறும் வகையெனக்கருளெனெம்மான்
சிறைவிலேன்செய்வதென்னே திருவடிபரவியேத்தக்
குறைவிலேன்குற்றந்தீராய் கொன்றைசேர்சடையினானே. (௯)

நடுவிலாக்காலன்வந்து நணுகும்போதறியவொண்ணா
தடுவனவஞ்சபூத மவைதனக்காற்றலாகேன்
படுவனபலவுங்குற்றம் பாங்கிலாமனிதர்வாழ்க்கை
கெடுவதிப்பிறவிசீசீ கிளரொளிச்சடையினீரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடும்பகனட்டமாடிக் கையிலோர்கபாலமேந்தி
யிடும்பலிக்கில்லந்தோறு முழிதருமிறைவனீரே

னெடும்பொறைமலையர்பாவை நேரிழைநெறிமென்கூந்தற்
கொடுங்குழைபுகுந்தவன்றுங் கோவணமரையதேயோ. (௧)

கோவணமுடுத்தவாறுங் கோளரவசைத்தவாறுந்
தீவணச்சாம்பர்பூசித் திருவுருவிருந்தவாறும்
பூவணக்கிழவனாரைப் புலியுரியரையனாரை
யேவணச்சிலையினாரை யாவரேயெழுதுவாரே. (௨)

விளக்கினாற்பெற்றவின்ப மெழுக்கினாற்பதிற்றியாகுந்
துளக்கினன்மலர்தொடுத்தாற் றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின் மெய்ந்நெறிஞானமாகும்
அளப்பில்கீதஞ்சொன்னார்க் கடிகடாமருளுமாறே. (௩)

சந்திரன்சடையில்வைத்த சங்கரன்சாமவேதி
யந்தரத்தமரர்பெம்மா னானல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமசிவாய மாகநீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையும்நோயும் வெவ்வழல்விறகிட்டன்றே. (௪)

புள்ளுவரைவர்கள்வர் புனத்திடைப்புகுந்துநின்று
துள்ளுவர்சூறைகொள்வர் தூநெறிவிளையவொட்டார்
முள்ளுடையவர்கடம்மை முக்கணான்பாதநீழல்
உள்ளிடைமறைந்துநின்றங் குணர்வினாலெய்யலாமே. (௫)

தொண்டனேன்பிறந்துவாளாத் தொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துநாளும் பெரியதோரவாவிற்பட்டேன்
அண்டனேயமரர்கோவே யறிவனேயஞ்சலென்னாய்
தெண்டிரைக்கங்கைசூடுந் திகழ்தருசடையினானே. (௬)

பாறினாய்பாவிநெஞ்சே பன்றிபோலளற்றிற்பட்டுத்
தேறிநீநினைதியாயிற் சிவகதிதிண்ணமாகும்
ஊறலேயுவர்ப்புநாறி யுதிரமேயொழுகும்பாசங்
கூறையால்மூடக்கண்டு கோலமாக்கருதினாயே. (௭-௮-௯)

உயர்த்தகாலுதயத்தும்ப ருமையவளடுக்கநந்திர
வைத்தகாலரக்கனோடன் வான்முடிதனக்குநேர்ந்தான்
மொய்த்தகான்முகிழ்ந்தவெண்டிங்கண் மூர்த்தியெனுச்சிதன்மேல்
வைத்தகால்வருந்துமென்று வாடிநானொடுங்கினேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---



## ஆருயிர்த்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்கு மிருதிசைக்கும்மிறை வாமுறையென்
றிட்டாரமரர்வெம் பூசலெனக்கேட் டெரிவிழியா
வொட்டாக்கயவர் திரிபுரமூன்றையு மோரம்பினால்
அட்டானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௧)

பேழ்வாயரவி னரைக்கமர்ந்தேறிப் பிறங்கிலங்கு
தேய்வாயிளம்பிறை செஞ்சடைமேல்வைத்த தேவர்பிரான்
மூவானிளகான் முழுவுலகோடுமண் விண்ணுமற்றும்
ஆவானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௨)

தெரியாவெகுளிய னாய்த்தக்கன்வேள்வி தகர்த்துகந்த
வெரியாரிலங்கிய சூலத்தினானிமை யாதமுக்கட்
பெரியான்பெரியார் பிறப்பறுப்பானென்று தன்பிறப்பை
யறியானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௩)

வடிவுடைவாணெடுங் கண்ணுமையாளையோர் பான்மகிழ்ந்து
வெடிகொளரவொடு வேங்கையதள்கொண்டு மேன்மருவிப்
பொடிகொளகலத்துப் பொன்பிதிர்த்தன்னபைங் கொன்றையந்தார்
அடிகளடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௪)

பொறுத்தானமரர்க் கமுதருளிநஞ்ச முண்டுகண்டங்
கறுத்தான்கறுப்பழ காவுடையான்கங்கை செஞ்சடைமேற்
செறுத்தான்றனஞ்சயன் சேனைகலங் கணையொன்றினால்
அறுத்தானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௫)

காய்ந்தான்செறற்கரி யானென்றுங்காலனைக் காலொன்றினாற்
பாய்ந்தான்பணைமதில் மூன்றுங்கணையென்னு மொள்ளழலால்
மேய்ந்தான்வியனுல கேழும்விளங்க விழுமியநூல்
ஆய்ந்தானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௬)

உளைந்தான்செறுத்தற் கரியான்றலையை யுகிரொன்றினாற்
களைந்தானதனை நிறையநெடுமால் கணார்குருதி
வளைந்தானொருவிர லின்னொடுவீழ்வித்துச் சாய்பல்வெண்ணீ
றளைந்தானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (௭)

முந்திவட்டத்திடைப் பட்டதெல்லாமுடி வேந்தர்தங்கள்
பந்திவட்டத்திடைப் பட்டலைப்புண்பதற் கஞ்சிக்கொல்லோ

நந்திவட்டநறு மாமலர்க்கொன்றையு நக்கசென்னி
யந்திவட்டத்தொளி யானடிச்சேர்ந்தவென் னாருயிரே. (அ)

மிகத்தான்பெரியதோர் வேங்கையதள்கொண்டு மெய்ம்மருவி
யகத்தான்வெருவ நல்லானை நடுக்குறப் பான்வரும்பொன்
முகத்தாற்குளிர்ந்திருந் தானந்திநுகப் பாரிசைந்த
வகத்தானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (கூ)

பைம்மாணரவல்குற் பங்கயச்சீறடி யாள்வெருவக்
கைம்மாவரியிலைக் காமனையட்ட கடவுண்முக்கண்
எம்மானிவனென் றிருவருமேத்த வெரிநிமிர்ந்த
வம்மானடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (க0)

பழகவோருர்தி யான்பைங்கட்பாரிடம் பாணிசெய்யக்
குழலுமுழவொடு மாநடமாடி யுயரிலங்கைக்
கிழவனிருபது தோளுமொருவிர லானிறுத்த
வழகனடிநிழற் கீழதன்றோவென்ற னாருயிரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

தசபுராணம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பருவரையொன் றுசுற்றி யரவங்கைவிட்டவிமையோ ரிரந்துபயமாய்த், திருநெடுமால்நிறத்தை யடுவான்விசும்புசுடுவா னெழுந்தவிசைபோய், பெருகிடமற்றிதற்கோர் பிதிகாரமொன்றையருளாய் பிரானேயெனவு, மருள்கொடுமாவிடத்தை யெரியாமலுண்டவவ னண்டரண்டராசே. (க)

நிரவொலிவெள்ளமண்டி நெடுவண்டமூடநிலை நின்றதம்பமதுவாய், பரமொருதெய்வமெய்த விதுவொப்பதில்லையிரு பாலுநின்றுபணியப், பிரமனுமாலுமேலை முடிபாதமறியாமை நின்றபெரியோன், பரமுதலாயதேவர் சிவனாயமூர்த்தியவ னாமக்கோர்சரணே.

காலமுநாள்களூழி படையாமுனேகவுரு வாகிமூவருருவிற்
சாலவுமாகிமிக்க சமயங்களாதியொரு வாகிநின்றதழலோன்
ஞாலமுமேலைவிண்ணொடு கேழுமண்டுறையோ ராலினிலைமேற்
பாலனுமாயவர்க்கோர் பரமாயமூர்த்தியவ னாமக்கோர்சரணே. (ங)



நீடியர்மன்னுமின்னு நெடுவேலைகுன்றொடுல கேழுமெங்குநலியச்
சூடியகையராகியிமை யோர்கணங்கள்துதி யோதிநின்றுதொழவு
மோடியதாருகன்ற னுடலம்பிளந்துமொழி யாதகோபமொழிய
ஆடியமாநடத்தெ மனலாடிபாதமவை யாநமக்கோர்சரணே. (ச)

நிலைவலியின்றியெங்கு நிலநேடுமின்னுநிதனஞ் செய்தோடுபுரமூன்
றலைநலிவஞ்சியோடி யரியோடுதேவரரணம் புகத்தனருளாற்
கொலைநலவாளிமூள வரவங்கைநாணுமனல் பாயநீறுபுரமா
மலைசிலைகையிலொல்க வளைவித்தவள்ளலவ னாமக்கோர்சரணே. (ரு)

நீலநன்மேனிசெங்கண்வளை வெள்ளெயிற்றனெரி கேசனேடிவருநாட்
காலநன்மாலைகொண்டு வழிபாடுசெய்யுமளவின்கண் வந்துகுறுகிப்
பாலனையோடவோடப் பயமெய்துவித்தவுயிர் வவ்வுபாசம்விடுமக்
காலனைவீடுசெய்தகழல் போலுமண்டர்தொழு தோருகுடுகழலே.()

உயர்தவமிக்கதக்கனுயர் வேள்விதன்னிலவி யுண்ணவந்தவிமை
யோர், பயமுறுமெச்சனங்கி மதியோனுமுற்றபடி கண்டுநின்றபய
மா, யவனொடுமாலுமெங்க ளறியாமையாதிதமி யென்றிறைஞ்சியகல
த், சயமுறுதன்மைகண்ட தழல்வண்ணனெந்தைகழல் கண்டுகொள் (எ)
கைசரணே.

தலைமலிமங்கைதங்கை விளையாடியோடிநயனத் தலங்கள்சரமா
வலைவினையேழுமுற்று மிருண்மூடமூடவிருளோட நெற்றியொருகண்
ணலர்தரவஞ்சிமற்றை நயனங்கைவிட்டமட வாளிறைஞ்சமதிபோ
லலர்தருசோதிபோல வலர்வித்தமுக்கணவ னாமக்கோர்சரணே.(அ)

கழைபடுகாடுதென்றல் குயில்கூவவஞ்சுகனை போனனைந்துபுகவு, மழைவடிவண்ணனெண்ணி மகவோனைவிட்டமல ரானதொட்டமதனை, னெழில்பொடிவெந்துவீழ விமையோர்கணங்களெரி யென்றிறைஞ்சியகலத், தழல்படுநெற்றியொற்றை நயனஞ்சிவந்ததழல் வண்ணனெந்தைசரணே. (கூ)

தடமலராயிரங்கள்குறை யொன்றதாகநிறை வென்றுதன்கணதனு
னுடன்வழிபாடுசெய்த திருமாலையெந்தைபெருமா னுகந்துமிகவுஞ்
சுடராழியாள்புயன்று கழல்வித்தரக்கனிதயம் பிளந்தகொடுமை
யடல்வழியாழியாழி யவனுக்களித்தவவ னாமக்கோர்சரணே. (க0)

கடுகியதேர்செலாது கயிலாயமீதுகருதேலுன் வீரமொழிநீ
முடுகுவதன்றுதன்மமென நின்றுபாகன்மொழி யானைநல் லருளியா

விடுவிடுவென்றுசென்றுவிரைவுற்றரக்கன்வரையெடுக்கமுடிதோள்
நெடுநெடுவிற்றுவீழ விரலூற்றபாதநினைவுற்றதென்றன்மனனே. ( )

திருச்சிற்றம்பலம்.

---

பாவநாசத்திருப்பதிகம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப் பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத் தீண்டற்கரியதிருவுருவை
* வெற்றியூரில்விரிசுடரை விமலர்கோனைத்திரைசூழ்ந்த
ஒற்றியூரெமுத்தமனை யுள்ளத்துள்ளேவைத்தேனே. (௧)

ஆனைக்காவிலணங்கினை யாரூர்நிலாயவம்மானைக்
கானப்பேரூர்க்கட்டியைக் கானூர்முளைத்தகரும்பினை
வானப்பேரார்வந்தேத்து வாய்மூர்வாழும்வலம்புரியை
மானக்கயிலைமழகளிற்றை மதியைச்சுடரைமறவேனே. (௨)

மதியங்கண்ணிஞாயிற்றை மயக்கந்தீர்க்குமருந்தினை
யதிகைமூதூரரசினை யாறமர்ந்தவையனை
விதியைப்புகழைவானோர்கள் வேண்டித்தேடும்விளக்கினை
நெதியைஞானக்கொழுந்தினை நினைந்தேற்குள்ளநிறைந்ததே. (௩)

புறம்பயத்தெம்முத்தினைப் புகலூரிலங்குபொன்னினை
‡ உறந்தையோங்குசிராப்பள்ளி யுலகம்விளக்குஞாயிற்றைக்
கறங்குமருவிக்கழுக்குன்றிற் காண்பார்காணுங்கண்ணானை
யறஞ்சூழதிகைவீரட்டத் தரிமானேற்றையடைந்தேனே. (௪)

கோலக்காவிற்குருமணியைக் ० குடமூக்குறையும்விடமுணியை
ஆலங்காட்டிலந்தேனை யமரர்சென்னியாய்மலரைப்
பாலிற்றிகழும்பைங்கனியைப் பராய்த்துறையெம்பசும்பொன்னைச்
சூலத்தானைத்துணையிலியைத் தோளைக்குளிரத்தொழுதேனே. (௫)

மருகலுறைமாணிக்கத்தை வலஞ்சுழியின்மாலையைக்
கருகாவூரிற்கற்பகத்தைக் காண்டற்கரியகதிரொளியைப்

---

* வெற்றியூரென்பது - வைப்புத்தலத்திலொன்று.

‡ உறந்தையென்பது - உறையூர். இதுவே திருமூக்கீச்சரமென்னுந்தலம்.

० குடமூக்கென்பது-கும்பகோணம்.



பெருவேளூரெம்பிறப்பிலியைப் பேணுவார்கள்பிரிவரிய
திருவாஞ்சியத்தெஞ்செல்வனைச் சிந்தையுள்ளேவைத்தேனே. (௬)

எழிலாரிராசசிங்கத்தை யிராமேச்சுரத்தெம்மெழிலேற்றைக்
குழலார்கோதைவரைமார்பிற் குற்றாலத்தெங்கூத்தனை
நிழலார்சோலைநெடுங்களத்து நிலாயநித்தன்மணாளனை (௭)
யழலார்வண்ணத்தம்மானை யன்பிலணைத்துவைத்தேனே.

மாலைத்தோன்றும்வளர்மதியை மறைக்காட்டுறையுமணாளனை
யாலைக்கரும்பினின்சாற்றை யண்ணாமலையெம்மண்ணலைச்
சோலைத்துருத்திநகர்மேய சுடரிற்றிகழுந்துளக்கிலியை
மேலைவானோர்பெருமானை விருப்பால்விழுங்கியிட்டேனே. (௮)

சோற்றுத்துறையெஞ்சோதியைத் துருத்திமேயதூமணியை
யாற்றிற்பழனத்தம்மானை யாலவாயெம்மருமணியை
நீற்றிற்பொலிந்தநிமிர்திண்டோள் நெய்த்தானத்தெந்நிலாச்சுடரைத்
தோற்றக்கடலையடலேற்றைத் தோளைக்குளிரத்தொழுதேனே. (௯)

புத்தூருறையும்புனிதனைப் பூவணத்தெம்போரேற்றை
வித்தாய்மிழலைமுளைத்தானை வேள்விக்குடியெம்வேதியனைப்
பொய்த்தார்புரமூன்றெரித்தானைப் * பொதியின்மேயபுராணனை
வைத்தேனென்றன்மனத்துள்ளே ० மாத்தூர்மேயமருந்தையே. (௰)

முந்தித்தானேமுளைத்தானை மூரிவெள்ளேறூர்ந்தானை
யந்திச்செவ்வான்படியானை யரக்கனாற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச் செஞ்சொன்மாலையடிசேர்த்தி
யெந்தையெம்மானென்னெம்மா னென்பார்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

* பொதியில் என்பது பொதிகைமலை இது வைப்புத்தலத்திற் சேர்ந்தது திங்க
ளூர் பிடவூர் கோவந்தபுத்தூர் குருக்ஷேத்திரம் பொதிகைமலையென்னும் செய்யு
ளாறுமுனைக, தனியே பதிகமில்லாமல் இவ்வாறு சிலபதிகங்களில் வைத்துச்சொ
ல்லியிருப்பதினால் வைப்புத்தலமென்று முன்னோர்கள் ஏற்பாடுசெய்திருக்கிறார்க
ள், தேவர்களுக்குமுனிவர்களுக்கும் பொதுஸ்தானமா யிருப்பதினால் பொதுவில்
எனப் பெயர்பெற்ற மலையானது பொதியில் பொதியம் பொதிகை என மருவின்
றது. இந்தத்தலமுதல் அநேகர் தலங்களுக் கிருந்த பதிகங்கள் இலமாய்விட்டன.
அவைகளில் நூற்றெண்பதுதலம் வைப்புத்தலமென்று சொல்லப்படுகின்றது.

० மாத்தூரென்பது-திருவாமாத்தூர்.

சாக்கைறைத் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பெடையுங்விடைப்பெருய் பாகாவென்விண்ணப்பம் வெம்மழுவாட்
படையும்படையாய் நிரைத்தபல்பூதமும் பாய்புலித்தோல்
உடையுமுடைதலை மாலையும்மாலைப் பிறையொதுங்குஞ்
சடையுமிருக்குஞ் சாக்கறையோம்வன் றனிநெஞ்சமே. (க)

விஞ்சத்தடவரை வெற்பாவென்விண்ணப்பம் மேவிலங்கு
சங்கக்கலனுஞ் சரிகோவணமுந் தமருகமும்
அந்திப்பிறையு மனல்வாயரவும் விரவியெல்லாஞ்
சந்தித்திருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (உ)

விந்தார்தலைகல னேந்தியென்விண்ணப்ப மேவிலங்கு
சாந்தாயவெந்த தவளவெண்ணீறுந் தருணிச்சமும்
பூந்தாமரைமேனிப் புள்ளியுழையா னதள்புலித்தோ
ருந்தாமிருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (ங)

வெஞ்சமாவேழத் துரியாயென்விண்ணப்ப மேவிலங்கு
வஞ்சமாவத்த வருபுனற்கங்கையும் வான்மதியு
நஞ்சமாநாக நருசிரமாலை நருவெண்டலை
தஞ்சமாவாழுஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (ச)

வேலைக்கடனஞ்ச முண்டாயென்விண்ணப்ப மேவிலங்கு
காலத்கடந்தா னிடங்கயிலாயமுங் காமர்கொன்றை
மாலைப்பிறையு மணிவாயரவும் விரவியெல்லாஞ்
சாலக்கிடக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (ரு)

வீழிட்டகொன்றைபந் தாராயென்விண்ணப்ப மேவிலங்கு
சூழிட்டிருக்குநற் சூளாமணியுஞ் சுடலைநீறும்
எழிட்டிருக்கு நல்லக்குமாவுமென் பாமையொடுந்
தாழிட்டிருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (சா)

விண்டார்புரமூன்று மெய்தாயென்விண்ணப்ப மேவிலங்கு
தொண்டாடியந்தாண் டடிப்பொடிநீறுந் தொழுதுபாதங்
கண்டார்கள்கண்டிருக்குங் கயிலாயமுங் காமர்கொன்றைத்
தண்டாரிருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (எ)



விடுபட்டியேறுகந் தேறியென்விண்ணப்ப மேவிலங்கு
கொடுகொட்டிகொக்கரை தக்கைகுழல்தாளம் வீணைமொந்தை
வடுவிட்டகொன்றையும் வன்னியுமத்தமும் வாளரவுந்
தடுகுட்டமாடுஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (அ)

வெண்டிரைக்கங்கை விகிர்தாவென்விண்ணப்ப மேவிலங்கு
கண்டிகைபூண்டு குடிசூத்திரமேற் கபாலவடங்
குண்டிகைகொக்கரை கொன்றைபிறைகுறட் பூதப்படை
தண்டிவைத்திட்ட சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (கூ)

வேதித்தவெம்மழு வாளியென்விண்ணப்ப மேவிலங்கு
சோதித்திருக்கு நற்சூளாமணியுஞ் சுடலைநீறும்
பாதிப்பிறையும் படுதலைத்துண்டமும் பாய்புலித்தோல்
சாதித்திருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (க0)

விவந்தாடியகழ லெந்தாயென்விண்ணப்ப மேவிலங்கு
தவந்தானெடுங்கத் தலைபத்திறுத்தனை தாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடி நீறுஞ்சிரமாலை சூடிநின்று
தவந்தானிருக்குஞ் சாக்கறையோவென் றனிநெஞ்சமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

மூன்றாந் திருமுறை.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம்பாநின்ற புண்ணியங்காளவி
னைகாடிருவேநீங்க, ளிம்மாயப்பெருங்கடலையரித்துத்தின்பீர்க் கில்
லையேகெடுந்தான்யானேல்வாரேனர், தம்மானைத்தலைமகனைத்தன்ன
ளரூர்த் தடங்கடலைத்தொடர்ந்தோரையடங்கச்செய்ப, வெம்மான்
றனடித்தொடர்வானுழிதர்கின்றே னிடையிலேன்கெடுவீர்காளிடறே
ன்மின்னே. (க)

ஐம்பெருமாபூதங்காளொருவிர்வேண்டிற் றெருவிர்வேண்டீன
டிவ்வவனியெல்லா, மும்பரமேயும்வசமேயாக்கவல்லீர்க் கில்லையே
னுகர்போகம்யானேல்வாரேனு, ரும்பருமாபூமியுமாயுலகேழாகியொ
ளாரூர்நள்ளயிர்தாம்வள்ளல்வாரேனர், தம்பெருமானைநின்றவானை
க்காண்பேன் றடைப்படுவேனுக்கருதித்தருக்கேன்மின்னே. (உ)

சில்லுருவிற்குறியிருத்திநித்தல்பற்றிச் செழுங்கனேனக்குமிழலுக்
கயன்று, பல்லுருவிற்றொழில்பூண்டபஞ்சபூதப் பளிரும்வசமன்றே

பாரோரெல்லாருஞ், சொல்லுருவிற்சுடர்மூன்றாயுருவமூன்றாய்த் தூநா
யனமூன்றாகி யாண்டவாரூர், நல்லுருவிற்சிவனடியேயடையவேணும்
மா னமைப்புன்னேனென்கமைத்துநீர்நடமின்களே. (ங)

உன்னுருவிற்சுவையொளியூறோசைநாற்றத் துறுப்பினதுருவிப்பா
ருவமைவீர் நுங்கள், மன்னுருவத்தியற்கைகளால் வைப்பிக்கையோ
வையகமேபோதாதேயானெல்வாரோர், பொன்னுருவைத்தென்னாரூ
ர்மன்னுகுன்றைப் புவிக்கெழிலாஞ்சிவக்கொழுந்தைப்புகுந்தெம்சிந்
தை, தன்னுருவைத்தந்தவனையெந்தைதன்னைத் தலைப்படுவேன்றுலைப்
படுப்பான்றருக்கேன்மின்னே. (ச)

அப்பினொடுமுன்பற்றறுவிறலேமிக்க சோர்வுபடுசூட்சியமேசுகமேநீ
ங்க, ளொப்பினையைப்பாவித்திவ்வுலகமெல்லா முழுதுமலிதுகுறைமுடி
யிப்பீர்க்கரிதேயன்றன், வைப்பினைப்பொன்மதிலாரூர்மணிமலைகண்
மணாளனையெம்பெருமானைவாரோர்தங்க, ளப்பனைச்செப்படவடை
வேனும்மாலு மாட்டுனேரோட்டந்திங்கலையேன்மின்னே. (ரு)

பொங்குமதமானமேயார்வச்செற்றக் குரோதமேயுலோபமேபொ
றையேநீங்க, ளுங்கள்பெருமாநிலத்தினெல்லையெல்லா முழுதுமதுகு
றைமுடிப்பீர்க்கரிதேயானே, லங்கமலத்தயனுமாலாகிமற்று மத
நகப்பாலொன்றாகியறியவொண்ணாச், செங்கனகத்தனிக்குன்றைச்சிவ
னையாரூர்ச் செல்வனைச்சேர்வேனும்மாற்செலுத்துமேனே. (சா)

இடர்பாவமெனமிக்கதுக்கவேட்கை வெறுப்பேயென்றனைவிருமு
லகையோடிக், குடைகின்றீரக்குலங்கள்குலுங்கிநுங்கள் குறிநின்றதமை
யாதேயானெல்வாரோ, ரடையார்தம்புரமூன்றுமெரிசெய்தானை யம
ரர்கடம்பெருமானையானையாரூ, ருடையானைக்கடுகச்சென்றடைவே
னும்மா லாட்டுனேரோட்டந்திங்கலையேன்மின்னே. (எ)

விரைந்தாளுநல்குரவேசெல்வேபொல்லா வெகுட்சியேமகிழ்ச்சி
யேவெறுப்பேநீங்க, ணிரைந்தோடிமாநிலத்தையரித்துத்தின்பீர்க்கி
லையேநுகர்போகம்யானெல்வாரோர், கரைந்தோடவருநஞ்சையமு
துசெய்த கற்பகத்தைத்தற்பரத்தைத்திருவாரூரிற், பரஞ்சோதிதனை
க்காண்பேன்படேனும்பண்பிற் பரிந்தோடியோட்டந்து பகடேன்மி
ன்னே. (அ)

மூள்வாயதொழிற்பஞ்சேந்திரியவஞ்ச முகரிகாண்முழுதுமிவ்வுல
கையோடி, நாள்வாயுநும்முடையவம்மாணை நடாத்துகின்றீர்க்கமை
யாதே யானெல்வாரோர், நீள்வானமுகடதனைத்தாங்கிநின்ற நெடுந்



தூணைப்பாதாளக்கருவையாரூ, ராள்வானைக்கடுகச்சென்றடைவேனும்
மா லாட்டுனேரோட்டந்திங்கலையேன்மின்னே. (கூ)

சுருக்கமொடுபெருக்கநிலைநீத்தல்பற்றித் தப்பறையெல்றனைவிரி
வ்வுலகையோடிச், செருக்கியிலைசெலுத்தியுமசெய்கைவைகல் செய்
கின்றீர்க்கமையாதேயானெல்மிக்க, திருக்கயிலைவரையெடுத்தவாக்கனு
கந் தளரவடியெய்தித்தவன்றன்பாடல்கேட், டிரக்கமெழுந்தருளியவெ
ம்பெருமான்பாதத் திடையிலேன்கெடுவீர்காளிடேன்மின்னே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புகலூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ எம்பெருமான்றி
ருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்
கழலடியேகைதொழுதுகாணினல்லால், ஒண்ணுளேயொன்பதுவாச
லிவைத்தா யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியனே
யுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (க)

அங்கமேபூண்டாயனலாடினாயாதிரையா யாலிழலாயானேறூர்
ந்தாய், பங்கமொன்றில்லாதபடர்சடையினாய் பாம்பொடுதிங்கள்ப
கைதீர்த்தாண்டாய், சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச் சமுத்தி
ரத்தினஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்
திருப்புகலூர்மேவியதேவதேவே. (உ)

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றாய் பளிக்குக்குழையினாய்
பண்ணாரின்சொல், மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய் மான்மறி
யாவனாயுமெண்மேற்றாயநாதா பவர்
த்தையேந்தினாய்நஞ்சக்கள்வ, பொய்ப்புலாயாதுன்னடிக்கேபோது
வெண்டுகாரியமில்லை, (ங)
கின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

தெருளாதார்மூவெயிலுந்தீயிலேவச் சிலைவளைத்துச்செங்கணே
றூர்ந்ததேவே, மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய் மரு
ந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்றும், அருளாகியாதியாய்வேத
மாகி யலர்மேலானீர்மேலானாய்நூற்கானாய், பொருளாயபுன்னடி (ச)
க்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்க ணீங்காமைவைத்துகந்த
நீதியானே, பாரேறுபடுதலையிற்பலிகொள்வானே பண்டனங்கைப்
பார்த்தானேபாவநாசா, காரேறுமுகிலனையகண்டத்தானே கருங்கை

க்களிற்றுரிவைகதறப்போர்த்த, போரேறேயுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௫)

விரிசடையாய்வேதியனேவேதகீதா விரிபொழில்சூழ்வெண்காடாய்மீயச்சூராய், திரிபுரங்களெரிசெய்ததேவதேவே திருவாரூர்த்திருமூலத்தானமேயாய், மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய் வலஞ்சுழியாய்மாமறைக்காட்டெந்தாயென்றும், புரிசடையாயுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௬)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந் திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று, நாவார்ந்தமறைபாடிநட்டமாடி நான்முகனுமிந்திரனுமாலும்போற்றக், காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேறாய் கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநின், பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௭)

நெய்யாடிநின்மலனேநீலகண்டா நிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே, மையாடுகண்மடவாள்பாகத்தானே மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய், கொய்யாடுகூவிளங்கொன்றைமாலை கொண்டடியேனுனிட்டுக்கூறிநின்று, பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௮)

இன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய் துதைந்திலங்குவெண்மழுவாள்கையிலேந்தித், தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ் சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே, யன்னநடைமடவாள்பாகத்தானே யக்காரம்பூண்டானேயாதியானே, பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௯)

ஒருவனையுமல்லாதுணராதுள்ள முணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின்ற, விருவரையுமூவரையுமென்மேலேவி யில்லாததாவறுத்தாய்க்கில்லேனேலக், கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன் கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற, பொருவரையாயுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த திருமுறைகள்
முற்றுப்பெற்றது.

---



## முதற்றிருமுறை.

### § திருவாரூர்ப்பழமொழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறு சண்ணித்தமேனியான் றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணி யுறிதூக்கியுழிதந்தென் னுள்ளம்விட்டுக்
கொய்புலாமலர்ச்சோலைக் குயில்கூவுமயிலாலு மாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்து கனியிருக்கக்காய்கவர்ந்த கள்வனேனே.

என்பிருந்திறாம்புதோல் புகப்பெய்திட்டென்னையோ ருருவமாக்கி
யின்பிருத்திமுன்பிருந்த வினைதீர்த்திட்டென் னுள்ளங் கோயிலாக்கி
யன்பிருத்தியடியேனைக் கூழாட்கொண்டருள்செய்த வாரூரர்த
முன்பிருக்கும்விதியின்றி முயல்விட்டுக்காக்கைப்பின் போனவாறே.

பெருகுவித்தென்பாவத்தைப் பண்டெலாங்குண்டர்கள்தஞ் சொல்லேகேட்டு, உருகுவித்தென்னுள்ளத்தி னுள்ளிருந்தகள்ளத்தைத் தள்ளிப்போக்கி, யருகுவித்துப்பிணிகாட்டி யாட்கொண்டுபிணிதீர்த்த வாரூரர்தம், அருகிருக்கும்விதியின்றி யறமிருக்கமறம்விலைக்குக் கொண்டவாறே. (௩)

குண்டனாய்த்தலைபறித்துக் குவிமுலையார்நகைகாணு *முழிதர்வேனைப்
பண்டமாப்படுத்தென்னைப் பால்தலையிற்றெளித்துத்தன் பாதங்காட்டித்
தொண்டெலாமிசைபாடத் தூமுறுவலருள்செய்யு மாரூரரைப் [டித்
பண்டெலாமறியாதே பனிநீராற்பாவைசெயப் பாவித்தேனே. (௪)

அன்னகத்தேனுகித் தார்ச்சனவர்சொற்கேட்டுத் தவர்வாய்க்கொண்டு
என்னகத்திரிதத்தின் கிருகையேற்றிடவுண்டே னேழையேனான்
பொன்னகத்தடியேனைப் புகப்பெய்துபொருட்படுத்த வாரூரரை
யென்னகத்திருத்தாதே யேதன்போர்க்காதனு யகப்பட்டேனே. (௫)

பப்போதிப்பவனையப் பறித்ததொருதலையோடே திரிதர்வேனை
யொப்போடவோதுவித்தென் னுள்ளத்தினுள்ளிருந்தங் குறுதிகாட்டி
யப்போதைக்கப்போது மடியவர்கட்காரமுதா மாரூரரை
யெப்போதுநினையாதே யிருட்டறையின்மலடுகறந் தெய்த்தவாறே.

---

* உழிதருவேனையென்பது - உழிதர்வேனையெனநின்றது.

கதியொன்றுமறியாதே கண்ணழலத்தலைபறித்துக் கையிலுண்டு
பதியொன்றுநெடுவீதிப் பலர்காணநகைநாணா துழிதர்வேற்கு
மதிதந்தவாரூரில் வார்தேனைவாய்மடுத்துப் பருகியுய்யும்
விதியின்றிமதியிலியேன் விளக்கிருக்கமின்மினித்தீக் காய்ந்தவாறே. ()

பூவையாய்த்தலைபறித்துப் பெரியசமணீசர் சொல்லேகேட்டுக்
காவிசேர்கண்மடவார் கண்டோடிக்கதவடைக்குங் கள்வனேன்றன்
னாவியைப்போகாமை தவிர்த்தென்னையாட்கொண்ட வாரூரைப்
பாவியேனறியாதே பாழூரிற் ○ பயிக்கம்புக் கெய்த்தவாறே. (௮)

ஒட்டாதவாளவுணர் புரமூன்றுமோரம்பின் வாயில்வீழக்
கட்டானைக்காமனையுங் காலனையுங்கண்ணினொடு காலின்வீழ
அட்டானையாரூரி லம்மானையார்வச்செற் றக்குரோதந்
தட்டானைச்சாராதே தவமிருக்கவஞ்செய்து தருக்கினேனே. (௯)

மறுத்தானோர்வல்லரக்க னீரைந்துமுடியினொடு தோளுந்தாளு
மிறுத்தானையெழின்முளரித் தவிசின்மிசையிருந்தான்றன் றலையிலொ
யறுத்தானையாரூரி லம்மானையாலால முண்டகண்டங் [ன்றை
கறுத்தானைக்கருதாதே கரும்பிருக்கவிரும்புகடித் தெய்த்தவாறே. ()

திருச்சிற்றம்பலம்.

§ இக்குறியிட்டிருக்கும் பதிகத்தை ([illegible]) வது பக்கத்தில் "பாடிளம்பூதத்தினானும்" என்னும் பதிகத்திற்குமுன் சேர்த்துக்கொள்ளவும்.

---

## மூன்றாந்திருமுறை.

### § திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை யெழிலாருமேகம்ப
மேயான்றன்னை, மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி னில்லானை
நின்றியூர்மேயான்றன்னைத், தனக்கென்றுமடியேனையாளக்கொண்ட
சங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப், புனக்கொன்றைத்தாரணிந்த
புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (௧)

நில்லாதநீர்சடைமேனிற்பித்தானை நினையாவென்னெஞ்சைநினை
வித்தானைக், கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக் காணாதனவெல்லாங்
காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத் தொடர்
ந்திங்கடியேனையாளக்கொண்டு, பொல்லாவென்னோய்தீர்த்தபுனித
ன்றன்னைப் புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனே. (௨)

குற்றாலங்கோகரணமேவினானைக் கொடுங்கைக்கடுங்கூற்றைப்பா
ய்ந்தான்றன்னை, யுற்றாலநக்குண்ணொடுக்கினானை யுணராவென்னெஞ்
சையுணர்வித்தானைப், பற்றாலின்கீழங்கிருந்தான்றன்னைப் பண்ணார்ந்
தவீணைபயின்றான்றன்னைப், புற்றாடரவார்த்தபுனிதன்றன்னைப் புண்
ணியனைப்பூந்துருத்திக்கண்டேனே. (௩)

வெறியார்மலர்க்கொன்றைசூடினானை வெள்ளானைவந்திறைஞ்சு
ம்வெண்காட்டானை, யறியாதடியேனகப்பட்டேனை யல்லற்கடலின்
றுமேறவாங்கி, நெறிதானிதுவென்றுகாட்டினானை நிச்சனலிபிணிகடீர்
ப்பான்றன்னைப், பொறியாடரவார்த்தபுனிதன்றன்னைப் பொய்யிலி
யைப்பூந்துருத்திக்கண்டேனே. (௪)

மிக்கானைவெண்ணீறுசண்ணித்தானை விண்டார்புரமூன்றும்வே
வநோக்கி, நக்கானைநான்மறைகள்பாடினானை நல்லார்கள்பேணிப்பர
வநின்ற, தக்கானைத்தண்டாமரைமேலண்ணல் றலைகொண்டுமாத்திரைக்
கணுலகமெல்லாம், புக்கானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொ
ய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (௫)

ஆர்த்தானைவாசுகியையரைக்கோர்கச்சா வசைத்தானையழகாய
பொன்னார்மேனிப், பூத்தானத்தான்முடியைப்பொருந்தாவண்ணம்
புணர்ந்தானைப்பூங்கணையானுடலம்வேவப், பார்த்தானைப்பரிந்தானை
ப் பனிநீர்க்கங்கை, படர்சடைமேற்பயின்றானைப் பதைப்பயானை,
போர்த்தானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்
துருத்திக்கண்டேனே. (௬)

எரித்தானையெண்ணார்புரங்கண்மூன்று மிமைப்பளவிற்பொடி
யாவெழிலார்கையா, லுரித்தானைமதகரியையுற்றுப்பற்றி யுமையத
னைக்கண்டஞ்சிநடுங்கக்கண்டு, சிரித்தானைச்சீரார்ந்தபூதஞ்சூழத் திருச்
சடைமேற்றிங்களும்பாம்புநீரும், புரித்தானைப்புண்ணியனைப்புனித
ன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (௭)

○ பயிக்கம் - பிச்சை.

வைத்தானை வானோருலகமெல்லாம் வந்திறைஞ்சிமலர்கொண்டுநின்றுபோற்றும், வித்தானைவேண்டிற்றொன்றீவான்றன்னை விண்ணவர்தம்பெருமானைவினைகள்போக, வுய்த்தானையொளிகங்கைசடைமேற்றாங்கி யொளித்தானையொருபாகத்துமையோடாங்கே, பொய்த்தானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (அ)

ஆண்டானைவானோருலகமெல்லா மந்நாளறியாததக்கன்வேள்வி, மீண்டானைவிண்ணவர்களோடுங்கூடி விரைமலர்மேனான்முகனுமாலுந்தேர, நீண்டானைநெருப்புருவமானான்றன்னை நிலையிலார்மும்மதிலும்வேவவில்லைப், பூண்டானைப்புண்ணியனைப்புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (கூ)

மறுத்தானைமலைகோத்தங்கெடுத்தான்றன்னை மணிமுடியோடிருபதுதோணெரியக்காலா, லிறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானை யெண்டிசைக்குங்கண்ணானான் சிரமேலொன்றை, யறுத்தானையமரர்களுக்கமுதீந்தானை யாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு, பொறுத்தானைப்புண்ணியனைப் புனிதன்றன்னைப் பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

§ இக்குறியிட்டிருக்கும் பதிகத்தை (ருரு) வது பக்கத்தில் "நில்லாதநீர்சடைமே" என்னும் பதிகத்திற்குமுன் சேர்த்துக்கொள்ளவும்.

---

2276